of the factory have been contacted. Investigations made reveal that the depletion of fishery is not felt throughout the estuary as represented but that it is only felt up to a mile from the point of discharge. The quantity of effluent discharged will disappear into the mass of the sea without any effect. The factory authorities are thinking of extending the pipe line up to the sea so that the effluents will be discharged into the sea direct and not into the estuary so that the quantity of effluents let out will disappear into the sea without any effect. The factory has also proposed to utilise the bye-products which are now discharged as effluents for the manufacture of new products. Licences have been issued for the manufacture of chlorine products, etc. The problem caused by the effluents will disappear when the production of these new products is started.

The Government are aware that with the growth of industries, the problem of pollution of water courses from industrial effluents has become a major question and they are considering measures to tackle the problem on a permanent basis. The Government have ordered that, for the present, the case of Dahrangadhara Chemical Works may be considered on an adhoc basis resorting to the provisions of the Factories Act and the Madras Public Health Act. Instructions have accordingly been issued to the State Director of Fisheries and the Director of Public Health to take remedial action under these Acts.

VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1962-63—*cont.*

DEMAND XXI—WELFARE OF SCHEDULED TRIBES, CASTES AND OTHER BACKWARD CLASSES.

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move :

" That the Government be granted a sum not exceeding Rs. 3,56,39,200 under Demand XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes."

MR. SPEAKER : Motion moved—

" That the Government be granted a sum not exceeding Rs. 3,56,39,200 under Demand XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes."

திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சபாநாயகர் அவர்களே, என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

Sri A. K. SUBBIAH : I move the following Cut motion—

" That the allotment of Rs. 3,56,39,200 under Demand XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes be reduced by Rs. 100 ".

MR. SPEAKER : Cut motion moved—

" That the allotment of Rs. 3,56,39,200 under Demand XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes be reduced by Rs. 100."

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, மூன்றுவது பொதுத் தேர்தலுக்குப் பிறகு, இந்த மாநிலத்திலுள்ள பின் தங்கிய, ஹரிஜன, ஆதிவாசிகளின் நன்மைக்காக, இன்றைய தினம் இந்த மன்றத்திலே இந்த மானியத்தைச் சமர்ப்பிக்கிறேன். நான் இந்த மன்றத்திலே வைத்துள்ள அறிக்கையைப் பார்த்தாலே, இந்த மாநில அரசாங்கம் எவ்வாறு துரிதமாக, அதிக அக்கறை எடுத்துக்கொண்டு கல்வி, பொருளாதாரம், விவசாயம் மற்றும் பல துறைகளிலும் அவர்களின் முன்னேற்றத்திற்காகப் பணியாற்றி வருகிறது என்பதைத் தெள்ளத்

24th July 1962] [திரு. பூ. கக்கன்]

தெளிவாக மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ளலாம். நம்முடைய நாடு ரொம்ப காலமாகவே அடிமையாக இருந்த காரணத்தினுலே, மக்களுடைய தொல்லேகளேயும், துயரத்தையும் போக்க வேண்டுமென்று சொன்னுல், மந்திரத்தினுலோ அல்லது தந்திரத்தினுலோ ஒரு குறுகிய காலத்திலே அவற்றைப் போக்கிவிட முடியாது. எவ்வளவோ நல்ல திட்டங்களேப் போட்டு, அவற்றை நிறைவேற்றுவதன் மூலமாகத் தான் போக்க முடியும். அந்த முறையிலே அரசாங்கம் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, அதிகமாகப் பணம் செலவு செய்து, அதிகமான அதிகாரிகளேயும் நியமித்து, நல்லமுறையிலே பணியாற்றி வருகிறது. அந்தப் பணிகளே நன்கு உணர்ந்து இந்த மாநிலத்திலுள்ள பின்தங்கிய, ஹரிஜன, ஆதிவாசி மக்கள் நல்ல முறையிலே தங்களுடைய அன்பையும், ஆதரவையும் கொடுத்திருக்கிருர்கள் என்று சொன்னுல், அது மிகையாகாது. மேலும் அவர்களுடைய கோரிக்கைகளே எல்லாம் நல்ல முறையில் கவனித்து, ஆவன செய்வதற்கு நிச்சயமாக அரசாங்கம் முன்வரும் என்பதை என்னுடைய முன்னுரையாகச் சொல்லிகொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்கு முக்கியமானது கல்வி. அவர்களுடைய கல்விக்காக அரசாங்கம் அதிகமாகச் செலவழித்து வருகிறது. 1961–62-ல் மொத்தத்திலே ரூபாய் 17,62,000 ஒதுக்கினேம். ஆனுல், கூடுதலாக அதே வருஷத்தில் செலவு ரூபாய் 10 லட்சத்துக்கு மேல் வந்துவிட்டது. 1962–63-ல் கிட்டத்தட்ட ரூ. 27 லட்சம் ஒதுக்கியிருக்கிருேம். இன்னும் தேவைப்பட்டால் அதிகபபணம் ஒதுக்குவதற்கு அரசாங்கம் முன் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே மாதிரி, ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர்களுக்காக, அந்நிய ஆட்சியில் அவதியுற்றுத் தொல்லேகளுக்கு ஆளாகிய மக்களின் முன்னேற்றத்திற்காக, 1961–62-ல் கிட்டதட்ட ரூபாய் 5 லட்சம் ஒதுக்கினேம். அதே வருஷத்தில் மேலும் கூடுதலாக ரூபாய் 20,000 கொடுத்தோம். 1962–63-ல் ரூபாய் 4.45 லட்சம் ஒதுக்கியிருக்கிருேம். மேலும் தேவைப் பட்டால் அதிகப் பணம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது போன்று பின் தங்கிய சமுதாயத்தில் பிறந்த அநேக மாணவர்கள் இப்பொழுது கல்வி பயில முன் வருகிருர்கள். அவர்களுக்கு எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு அரசாங்கம் உதவி செய்து வருகிறது. 1961–62-ல் முதலில் 25 லட்சம் ரூபாய் ஒதுக்கி மீண்டும் அதிகப்படியாக 22 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1962–63-க்கு 45 லட்சத்து முப்பதாயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கியிருந்தார்கள். மேலும் தேவைப்படும் என்று கருதினல் இன்னும் அதிகப்படியாக ஒதுக்குவதற்கு அரசாங்கம் முன்வரும் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். ஹரிஜனமாணவர்கள் மீது இந்தஅரசாங்கம் அதிகப்படி பொறுப்பு ஏற்றுக்கொண்டிருப்பதால் அவர்களுடைய கல்விக்கு அதிகமாக ஒதுக்கிக் கொண்டு வருகிருர்கள். அதைப் போலவே பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வேண்டிய பணம் ஒதுக்கப்பட்டு வருகின்றது என்று சொன்னுல், அது மிகையாகாது. 1961–62-ல் ஷெட்யூல் வகுப் பினருக்கு 13 லட்சம் சொச்சம் ரூபாய் கொடுத்தார்கள். அதைப்போலவே பாக்வேர்ட் கம்யூனிட்டிக்கு அதாவது பின் தங்கிய வகுப்பினருக்கு 14 லட்சம் 96 ஆயிரம் ரூபாய், அதாவது மொத்தம் 28 லட்சம் ரூபாய் கொடுத் திருக்கிருர்கள். இதைத் தவிர நமக்கு மத்திய சர்க்காரிலிருந்து அவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புக்கள் வழங்குவதற்காக 67,490 ரூபாய் கொடுத்துவருகிருர்கள். அதை வைத்துக்கொண்டு பின்தங்கிய வகுப்புக் குழந்தைகளுக்கும் ஆதிவாசி குழந்தைகளுக்கும் ஹரிஜன குழந்தைகளுக்கும் கல்விக்காக ஸ்காலர் ஷிப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்த முறையில் மத்திய அரசாங்கமும் நமக்கு உதவி செய்து வருகிருர்கள் என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக மனைக்கட்டு வழங்குவதில் இந்த அரசாங்கம் அதிகப்படியான அக்கறை எடுத்துக்கொண்டு தான் வருகிறது. நான் எங்கு சென்றுலும் குடியிருக்க இடம் வேண்டும் என்ற குரல்தான் கேட்கிறது.

அதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த அரசாங்கம் பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். இன்னும் தேவையானால் அதிகப்படியாக ஒதுக்குவதற்கும் தயாராக இருக்கிறார்கள். எந்தவிதமான இடைஞ்சலும் நேரிடாதபடி மனைக்கட்டுகள் வழங்கப்படும். ஆகவே மனைக்கட்டுகள் வழங்குவதற்கு அதிக அக்கறையை அரசாங்கம் எடுத்து வருகிறார்கள் என்பதைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

நில ஆர்ஜிதம் செய்வதில் அதிக காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அப்படி காலதாமதம் ஆவதைத் தவிர்ப்பதற்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் அதிகப்படியான தாசில்தார்களையும், ரெவினியூ இன்ஸ்பெக்டர்களையும் சர்வேயர்களையும் கொடுத்திருக்கிறோம். எவ்வளவு நிலம் கிடைத்தாலும் அதை வாங்கிக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்களிடமிருந்து நிலங்களை வாங்கும் போது தகராறுகள் ஏற்படுகின்றன. அதனால் காலதாமதம் ஏற்படு கின்றது. அதைத் தவிர, சில தனிப்பட்டவர்கள் கோர்ட்டுக்குப் போவதாலும் காலதாமதம் ஏற்படுகின்றது. எவ்வளவு துரிதமாக மனைக் கட்டுகளைத் துரிதமாகக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு துரிதமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது மனைக்கட்டுகளை ஜாரி செய்வதிலும், இடங்களை ஆர்ஜிதம் செய்வதிலும் ஏற்படுகிற தாமதத்தைப் போக்குவதற்கு அரசாங்கம், குறிப்பாக நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள், தனியாக ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, அந்தக் கமிட்டியில் ஹரிஜனப் பணியில் அதிக ஆர்வமும் நல்ல அனுபவமும் உள்ள தலைவர் ஒருவரை நியமித்து அந்த வேலையை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார். அதைத் தவிர இந்த மாகாணத்திலும் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை நியமித்து ஹரிஜனங்களுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று உத்திரவிடப்பட்ட வேலைகள் எல்லாம் சரியாக நடைபெற்று வருகின்றனவா, ஒதுக்கிய பணங்கள் எல்லாம் நல்ல முறையில் செலவழிக்கப்பட்டிருக்கின்றனவா, வேலைகள் எல்லாம் ஒழுங்காக காக நடைபெற்றிருக்கின்றனவா என்று பரிசீலனை செய்து பார்த்து ஓர் அறிக்கையையும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு அதிகாரியும் சில நாட்களில் நியமிக்கப் படுவார். அந்த அதிகாரி எல்லாவற்றையும் பரிசீலித்து, அவரால் சமர்ப் பிக்கப்படும் அறிக்கையை வைத்துக் கொண்டு தகுந்த நடவடிக்கை எடுத் துக்கொள்ளப்படும். அப்படி நியமிக்கப்படுகிற அதிகாரிக்கு அதிகப்படியான அதிகாரத்தையும் கொடுக்கப்போகிறார்கள். அதை ஆராய்வதற்கு ஹரிஜன பணியில் ஆர்வமும் அனுபவமும் உள்ளவர்களை ஒரு கமிட்டியாக அமைத்து அவர்களுக்குக் கொஞ்சம் அதிகாரத்தைக் கொடுத்து அந்த வேலைகளை துரிதமாகச் செய்யச் சொல்லப்போகிறார்கள். இம்முறையில் ஹரிஜனங் களுக்கு மனைக்கட்டுகளை வழங்குவதைத் துரிதப்படுத்த அரசாங்கம் அதிகப் படியாக அக்கறையும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

இப்பொழுதே ரெவினியூ போர்டும் கலெக்டர்களும் ஹரிஜன நலனுக்காக செய்திருக்கக்கூடிய வேலைகளைப்பற்றி ரிப்போர்ட் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டுகளும் பரிசீலனை செய்யப்பட்டுதான் வருகின்றன. எந்த விஷயத்தில் தாமதம் இருந்தாலும் கூட அதை துரிதமாகச் செய்யவேண்டும் என்று உத்திரவுகள் இடப்படுகின்றன. ஹரி ஜனப் பணியில் அதிகப்படியான அக்கறை காட்டப்பட்டுதான் வருகிறது. மனைக்கட்டுகளை வழங்குவதற்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது இரண்டு அல்லது மூன்று ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர் களிடமிருந்து வாங்குவது இல்லை. மற்றும் ஏழை விவசாயிகளிடமிருந்தும் வாங்குவது இல்லை. ஏழைகளுக்கு எந்தவிதமான இடையூறும் இல்லாத வகையில்தான் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன. ஏழைகளுக்கு இடையூறு செய்யக்கூடாது என்ற கருத்தும் அதிகாரிகளுக்கு வலியுறுத்தப் பட்டிருக்கிறது. மற்றும் சர்க்கார் புறம்போக்கு நிலம் இருந்தால் அதையும் புஞ்சை நிலம் இருந்தால் அதையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், நஞ்சை நிலங்களாக இருந்தால் எடுத்துக்கொள்ளவேண்டாம் என்றும்

சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக தஞ்சை, தென்ஞற்காடு, திருநெல்வேலி ஜில்லாக்களில் அதிகப்படியான நஞ்சை நிலம்தான் இருக்கிறது. நஞ்சையை எடுத்துக்கொள்வதுத் தவிர வேறு வழி இல்லை என்று இருக்கக் கூடிய இடங்களில் நஞ்சை நிலங்களும் அதிகப்படியான விலை கொடுத்து வாங்கி எடுத்துக்கொள்ளப்பட்டு மனைக்கட்டுகளாக வழங்கப்படுகின்றன என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மாணவர்கள் படிப்பதற்கு உபகாரச் சம்பளம் வழங்குவதோடு ஸ்காலர்ஷிப்புகள் நிறைய கொடுக்கப்பட்டு வருகின்றன. அதனால் அதிகப்படியான மாணவர்கள் பயிற்சி பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஸ்காலர்ஷிப்புகள் கிடைப்பதிலும் கால தாமதம் ஆகிறது என்ற புகாரும் சொல்லப்பட்டது. அதைப் போக்குவதற்கு அந்தந்த வட்டாரத்திலுள்ள அதிகாரிகளே அதைக்கொடுத்து விடுவது என்றும், சென்னையில் டைரக்டருடைய பர்சனல் அஸிஸ்டென்ட் அவர்களே பார்த்துக் கொடுத்து விடலாம் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஹரிஜன ஏழை மாணவர்கள் படிக்க முன்வரும் சமயத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கும் அதிக உதவி கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. உதவி பெறத் தகுதியுள்ள பின்னிலை வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் நூற்றுக்கு 50 மார்க்குகளும் அதற்கு மேற்பட்டும் வாங்கியிருந்தாலும், மிகப் பின்னிலை வகுப்பு மாணவர்கள் நூற்றுக்கு 45 மார்க்குகளும் அதற்கு மேற்பட்டும் வாங்கியிருந்தாலும் அவர்களுக்கு உபகாரச்சம்பளங்கள் வழங்கப்படும் என்று அரசினர் வரையறுத்திருந்தமையால், இந்த ஆண்டில் உபகாரச்சம்பளங்கள் அதிகமாக வழங்கப்பட்டன. ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதில் ஏதாவது வில்லங்கங்கள் இருந்து கால தாமதம் ஏற்பட்டாலும் அவைகளைச் சரிபடுத்தி துரிதமாக கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வேண்டிய அதிகாரிகளை நியமித்து கணக்குகளை துரிதமாக பரிசீலனை செய்து கொடுக்கவும், எந்தவிதத்திலும் புகார்கள் வராதபடிசெய்வனே செய்யவேண்டும் என்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஹரிஜன மாணவர்களுக்குச் செய்துவருகிற முக்கியமான வேலைகளில் ஒன்று அவர்களுக்கு ஆரம்பப் பாடசாலைகளை நடத்துவது. அந்தப் பாடசாலைகளை நடத்துவதற்கு வேண்டிய அக்கறைஎடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஹரிஜனப் பிள்ளைகளுக்கு என்று இப்பொழுது 832 பள்ளிகள் இருக்கின்றன. ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் பள்ளிகள் 257–ம், ஆதிவாசிகளுக்கு 34 பள்ளிகளும் இருக்கின்றன. இப்பொழுது ஹரிஜன மாணவ மாணவிகளுக்கு இரண்டு செட் உடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஹரிஜன குழந்தைகளுக்குமட்டு மல்லாமல் மற்ற ஏழைக் குழந்தைகளுக்கும் உடைகள் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டு, அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. உடை கொடுப்பதில் வித்யாசம் வேண்டாம் என்பதற்காக எல்லாக் குழந்தைகளுக்கும் உடைகள் வழங்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் செய்துள்ள முக்கியமான வேலைகளில் மதிய உணவுத் திட்டம் ஒன்று. அதற்காக 1961–62ல், 33,62,000 ரூபாய் செலவு செய்ய ஒதுக்கப்பட்டுள்ளது. ஹரிஜனங்களுக்கு மட்டுமல்லாமல் மற்ற எல்லா ஜாதி குழந்தைகளுக்கும் சாப்பாடு போடவேண்டும்: அப்படிப்போட்டால்தான் எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கூடத்திற்கு வருவதற்கு முடியும் என்ற அளவில் எல்லாக் குழந்தைகளுக்குமே சாப்பாடு போடுவது என்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நிதி நிலைமையைக் கவனித்து இதை அமுலில் கொண்டுவர ஒரு முடிவுகாண வேண்டும். அடுத்தபடியாக மாணவர்களை விடுதிகளில்தான் வைத்து ஒழுங்காகப் படிக்க வைக்க வேண்டும் என்று இருப்பதால் அவர்களுக்கு அதிகப்படியான விடுதிகளை அமைத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு வேண்டிய செலவும் செய்து வருகிறார்கள். நம் மாகாணத்தில் மொத்தம் 303 விடுதிகள் இருக்கின்றன. அவற்றில் ஹரிஜனங்களுக்கும் பின்தங்கியவர்களுக்கும் 272–ம் ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக 24 விடுதிகளும் இருக்கின்றன. ஆதிவாசிகளுக்காக 7 விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த வருடம் 21 புதிய விடுதிகளை ஆரம்பிப்பதற்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

உதவி பெற்ற, அதாவது தனிப்பட்டவர்களிடமிருந்து 21 விடுதிகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அரசாங்கத்தின்கொள்கைப்படி எடுத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி செய்வதும் நிதி நிலைமையைப் பொறுத்து இருக்கிறது. ஆகையினால், விடுதிகளை நடத்துவதிலும் அரசாங்கம் அதிக அக்கரை காட்டி வருகிறது, என்பதை கனம் அங்கத்தினர் களுக்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான சொன்ன கருத்துக் களை ஆராய்ந்து பரிசீலனை செய்து கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால் அதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

10-00 a.m. **திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத் துள்ள வெட்டுப்பிரேரணையின் நோக்கத்தைப்பற்றி கனம் அமைச்சர் அவர் கள் கூறுகின்றபோது மனை வழங்குவதிலும், ஹரிஜன விவசாய மக்களுக்கு நிலங்கள் ஜாரி செய்து கொடுப்பதிலும், ஹரிஜன மாணவர்களுக்கு, பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதிலும் தாமதம் ஏற்படுகின்றது என்பதை ஒப்புக்கொண்டு சொன்னார்கள். நானும் அதை வலியுறுத்தி உடனடியாக காலதாமதமின்றி அவ்விஷயங்களில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் உங்கள் முன்னால் நிற்கிறேன்.

இன்றையதினம் ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காக அரசாங்க கவனம் செலுத்த அடியெடுத்து வைத்திருக்கிறார்கள் என்றுதான் நான் சொல்ல முடியும். குடியிருப்பு சம்பந்தமாக எடுத்துக்கொண்டோமேயானால் பெரும்பகுதியான ஹரிஜன மக்கள் இன்னமும் கஷ்டப்பட்டுக்கொண்டேதான் இருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்களே, இந்த மாநிலத்தில் ஹரிஜனங்களும், பின்தங்கியவர்களும்தான் அதிகமான ஜனத்தொகை உடையவர்களாக இருப்பவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது யதார்த்தமும் கூட. இந்த தேசத்தின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய மக்கள், எந்த நேரமும் உழைப்பதையே தொழிலாக கொண்டிருக்கக் கூடிய மக்கள் இன்றைய தினம் குடியிருக்கக்கூட போதுமான வசதி இல்லாமல், பிறர் மனைகளில் பல கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு வசித்து வருகிறார்கள். இது அரசாங்கத்திற்கு நன்கு தெரியும். ஆகவே உடனடியாக இன்று அந்த ஹரிஜன மக்கள் குடியிருக்கக்கூடிய மனை சர்க்கார் நிலமாக இருந்தால் அவர்களுக்கே ஜாரி செய்து கொடுக்கப்பட வேண்டும். தனிப்பட்டவர்கள் நிலமாக இருந்தால் அரசாங்கமே அதைக் கிரயத்திற்கு வாங்கி அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். சிறு நிலச்சுவாந் தார்களுக்கு போதுமான நஷ்டஈடு கொடுக்கப்பட்டால், சேரிகளில் உள்ள தங்கள் மனைகளை விற்றுவிடுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே தனியார் மனைகளையும் வாங்கி அவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

ஆனால் இன்றையதினம் பலகாலமாக சர்க்கார் நிலத்தில் குடியிருந்த வர்கள்கூட நிலத்திலிருந்து வேண்டாதவர்களாக இருந்தால் வெளியேற்றப் படுகிறார்கள். போதாதற்கு பஞ்சாயத்து போர்டுகளிடம் புறம்போக்கு நிலங்கள் ஒப்படைக்கப்படும் என்று சொன்ன பிறகு பஞ்சாயத்தில் இருக்கக் கூடியவர்களும் தங்களுக்கு விரோதமாக ஹரிஜனங்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் அந்த நிலங்கள் பஞ்சாயத்துகளுக்கு வேண்டுமென்று சொல்லி, அந்த நிலத்தில் இருக்கக்கூடியவர்களை வெளியேற்ற முயற்சி செய்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பார்க்கும்போது இன்றைய தினம் ஹரிஜனங்கள் மிகவும் தொல்லைக்கும், தொந்தரவுக்கும் உள்ளாகிக்கொண் டிருக்கிறார்கள். ஆகவேதான் இந்த நிலங்களையெல்லாம்முதற்படியாக—அந்த நிலங்களில் யார் பலகாலமாக குடியிருந்து வருகிறார்களோ அவர்களுக்கே சொந்தமாகச் செய்துவிட்டோமானால் பலவிதமான தொல்லைகளுக்கு அவர் கள் உள்ளாகாதிருக்க முடியும். கனம் அமைச்சர் அவர்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் களுக்குச் சொந்தமான மனைகள் சேரிகளில் இருந்தாலும் அதை அவர்கள் உபயோகப்படுத்திக்கொள்வதில்லை. விற்றுவிடத் தயாராக இருப் பதனால் அவற்றையும் வாங்கிக் கொடுக்கவேண்டும். இவ்விஷயத்தில் கால தாமதம் ஏற்படுவதாக கனம் அமைச்சர் அவர்களே சொன்னார்கள். ஏழை ஹரிஜனங்கள் வீட்டு மனைக்காக மனுக்கொடுப்பதாக இருந்தால், யாரை யாவது, படித்தவர்களை விட்டு, காசு கொடுத்து எழுதச் சொல்லி அதை

24th July 1962] [திரு. ஆ. கு. சுப்பையா]

அனுப்பி வைக்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் அதைச் சரியாகப் பரிசீலனை செய்வதே இல்லை. அம்மாதிரி மனுக்கள் வந்தால் உடனடியாக அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தர விடவேண்டுமாயும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக உழுவதற்கு நிலம். ஹரிஜனங்களுக்கு உழுவதற்கு நிலமும், குடியிருப்புக்கு மனையும் இருந்தாலும் போதும். பல்வேறு சலுகைகளை அடைவதற்கு இவை பெரும் உதவியாக இருக்கும். அவை இல்லாத காரணத்தினால்தான் நமக்குச் சுதந்திரம் வந்தும்கூட அவர்களால் சுதந்திரமாக வாழமுடியாத நிலைமை இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் 62–ம் வருஷம் மார்ச் மாதம் முடிய 86 ஆயிரம் எக்கரா நிலம்தான் இரண்டு பகுதி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் அறிக்கையில் பார்க்கிறோம். அறுபத்தேழாயிரம் எக்கரா நிலம் ஹரிஜனங்கள் அல்லாதவர்களுக்கும் 18 ஆயிரம் எக்கரா நிலம் ஹரிஜனங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலும் அதிகாரிகள் பாரபட்சமாக நடந்துகொள்கிறார்கள் என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். ஹரிஜனங்கள் தங்களுக்கு உழுவதற்கு நிலம் வேண்டுமென்று மனுக்கொடுத்தால் அவை கவனிக்கப்படுவதில்லை. ஹரிஜனங்களுக்கு மட்டும் 18 ஆயிரம் எக்கரா நிலம்தான் வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு 67 ஆயிரம் எக்கரா வழங்கப்பட்டிருக்கிறது என்றால் இந்தப் பொறுப்பில் உள்ள அதிகாரிகள் எவ்வளவு பாரபட்சமாக நடந்துகொள்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். சாகுபடிக்கு லாயக்கான நிலங்கள் எங்கெங்கே இருக்கிறதோ, அதையெல்லாம் கணக்கு எடுத்து நிலம் இல்லாத ஹரிஜன விவசாயிகளுக்குப் பங்கிட்டு பகிர்ந்து கொடுத்தால், அவர்களுக்குத் தேவையான உழவு மாடுகள், தேவையான உழவடைக் கருவிகள் எல்லாம் மானியமாகவும் கொடுத்தால் பொருளாதாரத்தில் அவர்கள் உயர்வு பெறுவார்கள். ஆகவே இவ்வாண்டாவது கனம் அமைச்சர் அவர்கள் ஹரிஜனங்களுக்கு உடனடியாக மனை வழங்குவது, நிலம் வழங்குவது, மாடுகள், கருவிகள் வழங்குவது ஆகியவற்றில் துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

***திரு. ஏ. பி. சி. வீரபாகு :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில விஷயங்களைச் சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். கல்விக்காக சுமார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் வரை இந்த மானியத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது கல்விக்காக நேரிடையாக 90 லட்சம் ரூபாயும், மதிய உணவு ஹாஸ்டல் இவற்றுக்காக 60 லட்சமும் இப்படி கிட்டதட்ட கல்விக்காக $1\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க அம்சம். இதனால் பெரும்பான்மையான மக்கள் பயன் அடைவதற்கு உதவியாக இருக்கும்.

அதே நேரத்தில் போஸ்ட் கிராஜுவேட்—எம். ஏ. படிக்க விரும்புகிறவர்களுக்கு உதவி செய்ய எவ்வித வசதியும், உற்சாகமும் காட்டப்படவில்லை. இதற்கு உதவினால் மற்றவர்களுக்கு அதிகமாகக் கல்விக்கு உதவி அளிக்க முடியாது என்ற காரணத்தினால் இதில் கொடுக்கவில்லை. இருந்தாலும் போஸ்ட் க்ராஜுவேட் கோர்சுக்கு முக்கியத்வம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வருங்காலக் கல்வி அமைப்பிலே எம். ஏ. பட்டதாரிகளுக்குத்தான் ஆசிரியர்கள் பொறுப்பு வரும். பின்தங்கிய, ஹரிஜன மாணவர்களிடம் இருந்து எம். ஏ. படிக்க யாராவது விரும்பலாம். எல்லோரும் படிப்பார்கள் என்று எண்ணவேண்டாம். ஒன்றிரண்டு பேர்கள் தான் பி. ஏ. படித்து மேல் படிப்புக்கு வர முடியும். அதுவும் படிக்க விரும்புகிறவர்களுக்கு இடம் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. சர்வ கலாசாலையில் அதற்கு ஒரு தேர்வுக் குழு இருக்கிறது. பி. ஏ. முதல் வகுப்பில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவேண்டும். அவர்கள் பரிசீலனை செய்து யாருக்காவது இடம் கொடுத்தால், அவர்கள் பின்தங்கிய வகுப்பு, ஹரிஜனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அரசாங்கம் இந்த மானியத்தின் கீழ் அப்படிப்பட்ட ஒன்றிரண்டு பேர்களுக்கு நிதி உதவி அளிக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டும். அவர்கள் படிப்பதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இந்த மானியக் கோரிக்கையில் முக்கியமாகப் பேசவேண்டும் என்று எண்ணியதற்கு காரணம், வீடு கட்டும் திட்டத்தில் ஏற்பட்ட மாறுதல் தான். இதுவரையில் இருந்த வீடு கட்டுகிற திட்டத்திற்குப் பதிலாக, வீடு கட்டிக்கொள்வதற்கான மனைகள் வழங்குவது என்ற வகையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை இந்த மானியக் கோரிக்கையில் நாம் காண்கிறோம். வீடு கட்டும் திட்டம் பெருவாரியான மக்களுக்கு வழங்கப்பட முடியவில்லை என்ற காரணத்தினாலும், ஒரு சிலருக்குக் கொடுத்து, பலருக்கு அந்தப் பகுதியில், உள்ளவர்களுக்கு வீடு கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் இருக்கும் காரணத்தினாலும், எல்லோருக்கும் சம வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்ற கண்ணோட்டத்தோடு, இந்த மாற்றத்தை அரசாங்கம் புகுத்திருக்கிறது என்று நான் நம்புகிறேன். அது வரவேற்கத்தக்க அம்சம்தான். ஆனால், இந்தப் பொறுப்பு பூராவும் இப்பொழுது கூட்டுறவு இயக்கத்திற்கு மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வில்லேஜ் ப்ராஜக்ட் ஸ்கீம், ரூரல் ஹௌஸிங் ஸ்கீம், இப்படி. வீடு கட்டும் திட்டங்கள் இந்தக் குறிப்பிட்ட சமூகத்தினருக்கு இருக்கின்றன; ஆனால், வில்லேஜ் ப்ராஜெக்ட் ஸ்கீமின்கீழ் இதுவரை எடுக்கப்பட்டவேலைகளைத் தவிர பாக்கி வேலைகளுக்குப் பயன்படுகின்றனவா என்பது சந்தேகம் ரூரல் ப்ராஜெக்ட்ஸ் ஸ்கீமின் கீழ் ரூ. 7,250 அளவுக்குக் கூட வீடு கட்டிக் கொள்ளலாம் என்று அரசாங்கம் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், அதற்கு ஐந்திலொரு பங்குத் தொகையை யார் வீடு கட்ட நினைக்கிறார்களோ அவர்கள் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் தலையிலே ஒரு பெரிய சுமையாக வைக்கப்பட்டிருக்கிறது. வீடு கட்டுவதற்கான மனையை வாங்கிக் கொடுப்பது ஒரு பக்கம்; அதற்குமேல், அந்த வீடு கட்டுவதற்காக ஐந்திலொரு பங்குத் தொகை கொடுக்கவேண்டுமென்றிருக்கிற ஒரு சுமை இன்னொரு புறம். இன்றைக்குக் குறைவான வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம், அதிக வீடுகள் கட்டிக்கொடுக்க முடியவில்லையே என்ற காரணத்தால், இதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தப் புதிய மாற்றம் அதிக வீடுகளைக் கட்டிக்கொடுக்கப் பயன்படுமா என்ற கண்ணோட்டத்தோடு அரசாங்கம் கவனிக்கவேண்டும். 'மனைக்கட்டை நாங்கள் வாங்கிக் கொடுத்துவிட்டோம்" என்று அரசாங்கம் சொல்லலாம். நகரப் பகுதிகளில் வேண்டுமானால், பெரிய கிரயம் கொடுத்து மனைக்கட்டு வாங்கவேண்டிய அவசியம் இருக்கலாம். இந்தச் சமூகத்தினர் பெரும்பாலும் கிராமப் பகுதியில்தான் வசிக்கிறார்கள். கிராமப் புறங்களில் அவர்களுக்கு இலவசமாகப் பலர் மனைக்கட்டு வழங்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதற்கென்று ஒரு ஏஜன்சிதான் வேண்டும். சர்க்காருக்கு ஒரு பெரும் பணப் பொறுப்புகூட இருக்காது. கிராமப் புறங்களில் தாழ்த்தப்பட்ட அந்த வகுப்பினர்கள் வசிப்பதற்காக ஏற்கனவே இருக்கும் வீடு கட்டும் திட்டத்திலே கூட, இனாமாகத்தான் ஏராளமான வீடு கட்டும் மனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, சர்க்கார் பணம் கொடுத்து வாங்கிக்கொடுக்க வேண்டிய நிலை அனேக இடங்களில் இல்லை. அதற்கென்று ஒரு ஏஜெண்டு மட்டும் இருக்குமானால், இனாமாகக் கிடைக்கும் நிலத்தை இன்னும் வாங்கிப் பயன்படுத்திக்கொள்ளலாம். எங்கள் பகுதியில் ஹரிஜனக் காலனிக்காக நாங்கள் பூராவும் இனாமாகத்தான் மனைகள் கொடுத்திருக்கிறோம். என்னுடைய அனுபவத்தை வைத்துத்தான் நான் சொல்கிறேன். மற்ற பகுதிகளைப்பற்றி எனக்குத் தெரியாது. இப்பொழுதுகூட, பல கிராமங்களில் இனாமாக நிலம் கொடுப்பற்குப் பொதுமக்கள் தயாராக இருக்கிறார்கள். அந்த ஒரு வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். பூதானம் கேட்கிறமாதிரி, ஹரிஜனங்களுக்கான வீட்டு மனையைக் கொடுக்கவேண்டும் என்ற முறையில் அணுகினால், இனாமாக ஏராளமான நிலங்கள் கிராம புறங்களில் கிடைக்கும். இப்படி இனாமாக நிலத்தை வாங்கிக்கொண்டு, அதைக் கூட்டுறவு இயக்கத்திற்கு மாற்றிக்கொடுத்து, கட்டிடத்திற்காக ஐந்திலொரு பங்குத் தொகை கொடுக்கவேண்டும் என்று நிர்ணயம் இருக்கிறதே அதை வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கலாம். இனாமாகக் கொடுக்கவேண்டுமென்று கூடச் சொல்லவில்லை. பத்து, பதினைந்து வருஷங்களில் தொகையைத் திரும்பச் பெற்றுக்கொள்ளலாம். இனாமாகக் கொடுக்கவேண்டும் என்ற கொள்கையை கைவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறவன் நான். கடனாகவே கொடுங்கள். கடன் பளுவைப் பூராவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமுதாயமாக இல்லாத பின்தங்கிய சமுதாயமாக இருப்பதால், வட்டி இல்லாத கடனாக அவர்களுக்குக் கொடுக்க் வேண்டும்.

மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டக்காலத்தில், எல்லா ஹரிஜன மக்களுக்கும், எல்லாத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அதிகப்படியான வீடுகளைக் கட்டி கொடுக்கவேண்டும் என்ற நிலையில், ஐந்திலொரு பங்கு தரவேண்டிய தொகையை அரசாங்கம் அவர்களுக்கு வட்டியில்லாக் கடனாகக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்கு உதவிகரமாக இருக்கும். ரூ. 7,250 என்று நிர்ணயம் செய்திருப்பதில் ரூ. 3,500 அளவுக்குத்தான் அனேகமாக எல்லோரும் வீடு கட்டுவதற்குப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று வைத்துக்கொண்டாலும், ஐந்திலொரு பங்குத் தொகையான ரூ. 750 கொடுக்க ஹரிஜன மக்களில் எத்தனை பேரால் முடியும் ? எத்தனை பேர் ரூ. 750 பங்குத்தொகையை செலுத்தமுடியும், எத்தனை பேருக்கு அந்தத் திட்டம் பயன்படும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். "நாங்கள் மனைக்கட்டு கொடுத்துவிட்டோம்," என்று அரசாங்கம் சொல்லலாம். ஆனால், ஹரிஜன மக்கள் மனையில்லாமல் இல்லை. அவரவர்கள் மனைகளில் குடியிருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், எப்பொழுது வெளியேற்றப்படுவோமோ என்ற பயத்தில் இருக்கிறார்கள். அந்தப் பயத்தை இப்பொழுது அரசாங்கம் போக்க முயற்சிக்கிறது. ஆகவே, இதுவரைக்கும் இல்லாத ஒரு வாய்ப்பை சர்க்கார் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்று சொல்லமுடியாது. மனைக்கட்டு வாங்கிக்கொடுப்பது என்பது கொள்கை ரீதியாக அரசாங்கத்திற்கு இருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கக்கூடிய ஒரு பெரிய கஷ்டத்தை வைத்துக்கொண்டு, எல்லா ஜில்லாக்களிலும் இம்மாதிரி கஷ்டம் இருக்கிறது என்ற மனோபாவத்தில் இந்தப் பிரச்னையை அணுகக் கூடாது. மனைக்கட்டு வழங்கப்படவேண்டிய அவசியம்தான். ஆனால், இதுவரையிலும் இல்லாத ஒரு பெரிய பிரச்னை அல்ல இது. அதற்காக, வீடு கட்டிக்கொடுக்கும் பொறுப்பை விட்டுவிட வேண்டியதில்லை. வீட்டு மனை வழங்குவது என்பதை ஒரு பெரிய உதவியாகச் சொல்லி, அந்த வகையில் வீடு கட்டும் திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவதால்தான் நான் இதைச் சொல்லவேண்டியிருக்கிறது. அரசாங்கம் இதுவரை வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் மூலமாகச் செய்துவந்த முறையை மாற்றி, நிலங்கள் மாத்திரம் வாங்கிக்கொடுக்கப் போவதாகச் சொல்லும் காரணத்தால்தான் நான் இதைச் சொல்கிறேன். ஹரிஜன மக்களுக்கு உண்மையிலேயே இந்தத் திட்டங்களின் மூலம் பலன் ஏற்படவேண்டுமானால், அவர்கள் சொந்த வீட்டில் வசிக்கும் வகையில், அவர்களுக்கு இந்த அளவு ரூ. 750–க்குள்ள ஐந்திலொரு பங்குத்தொகையை அவர்களுக்கு வட்டியில்லாக் கடனாகக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். வட்டியுள்ள கடனாக இருந்தால், அவர்களால் கடனைத் திருப்பித் தர வசதி இருக்காது. அவர்களுக்கு அரசாங்கம் மனைக்கட்டு வழங்க உதவி செய்வதோடு, கூட்டுறவு இயக்கம் மூலமாக வீடு கட்டிக்கொடுக்கும்போது, வட்டியில்லா கடனாகக் கொடுத்து வீடு கட்டிக்கொள்ள உதவி செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சலவைத் தொழிலாளர்களுக்கும், சவரத் தொழிலாளர்களுக்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு ஜில்லாவில் 100 பேர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் ரூ. 100 வீதம் வட்டி இல்லாக் கடன் கொடுக்கப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறது. அவர்கள் தொழிலுக்கு வேண்டிய கருவிகள் வாங்குவதற்காக இத்தகைய கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இன்னும் அதிகமான பேர்களுக்கும் இத்தகைய உதவிகள் கிடைக்க வாய்ப்பு இருக்கவேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒரு ஜில்லாவில் 100 பேர்களுக்கு மட்டும் கொடுத்தால் போதாது.

கனம் திரு. பூ. கக்கன் : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பூராவும் ஜில்லாவுக்கு 100 பேர்களுக்குத்தான் கடன் உதவி என்பது அல்ல திட்டம். ஒவ்வொரு ஜில்லாவிலும் 100 சலவைத் தொழிலாளர்களுக்கும், 100 சவரத் தொழிலாளர்களுக்கும்—ஆக ஒரு ஜில்லாவில் இத்தகைய சமூகத்தவர்கள் 200 பேர்களுக்கு—கடன் உதவி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். மூன்றாவது திட்டம் பூராவிலும் ஜில்லாவுக்கு 100 பேர்களுக்குத்தான் கடனுதவி என்று சொல்வது சரியல்ல.,

[24th July 1962

திரு. ஏ. பி. சி. வீரபாகு : ஒவ்வொரு வருஷத்திலும் 200 பேர்களுக்கு உதவி என்பதா திட்டம் ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆம்.

திரு. ஏ. பி. சி. வீரபாகு : ஒவ்வொரு வருஷத்திற்கும் ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்த இரு சமூகங்களில் 200 பேர்களுக்குக் கடன் கிடைக்கிறது என்றால் ஆட்சேபணை இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பூராவுக்கும் இந்த எண்ணிக்கை என்றால், அதைச் சற்று அதிகப்படுத்த வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். செலவழிக்கும் தொகை ரூ. 100-ல் தான். சலவைத் தொழிலாளிக்கு இந்தத் தொகையில் ஒரு பெரிய அண்டா வாங்கிக்கொடுக்கிறார்கள். அந்த அண்டாவை அவர்கள் வாங்கிக்கொண்டு, வீட்டிலே தண்ணீர் ஊற்றி வைத்துக்கொள்வதற்கு உபயோகப்படுத்துகிறார்களே தவிர, தங்கள் தொழிலுக்குப் பயன்படுத்துவதில்லை. காரணம், தொழிலுக்குப் பயன்படக்கூடிய அண்டாவாக நாம் செய்துகொடுக்க முடியவில்லை. கூட்டுறவு இயக்கம் மூலமாக நாம் அத்தகைய பாத்திரம் செய்து கொடுக்காததால், நாம் வாங்கிக்கொடுப்பது அவர்களுடைய தொழிலுக்குப் பயன்படவில்லை. இதை நான் எப்படித் தெரிந்துகொண்டேன் என்றால், பாத்திரம் "டிஸ்ரிப்யூட்" செய்யும் ஒரு சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது. அப்பொழுது, "இந்தப் பாத்திரம் உங்கள் தொழிலுக்குப் பயன்படுகிறதா ?" என்று நான் ஒரு தொழிலாளியைக் கேட்டேன். "நாங்கள் தண்ணீர் ஊற்றி வைத்துக்கொள்கிறோம், எங்கள் தொழிலுக்கு அது உதவாது" என்று பதில் சொன்னார்கள். நாம் செய்கின்ற உதவி அந்தந்தத் தொழிலுக்குப் பயன்படவேண்டும். சலவைத் தொழிலாளருக்குக் கொடுக்கும் மேஜை நன்றாக இருக்கிறது. திருவனந்தபுரத்திலிருந்து வாங்கிவரப்பட்ட இஸ்திரி பெட்டி நன்றாக இருக்கிறது. சலவை செய்கிற பானை அந்தத் தொழிலுக்கு உதவிகரமாக இருக்கக்கூடிய பாத்திரமாக இருக்கவேண்டும் இப்படிப்பட்ட தொழிலுக்குக் கருவிகள் கொடுக்கும்போது, தொழிலுக்கு உதவிகரமாக இருக்கின்றவா என்பதைப் பரிசீலனைசெய்து வழங்கவேண்டும். மேலும் அதிகமானவர்களுக்கு இந்த உதவி விஸ்தரிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். ஹரிஜன முன்னேற்றம் சம்பந்தமான மானியத் தொகை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்துகொண்டு வருவதைப் பார்க்கிறோம். அந்த அளவுக்கு இந்தத் துறை நல்ல முறையில் வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறது. சம்மந்தப்பட்ட கனம் அமைச்சர் அவர்கள் அமைச்சர் ஆவதற்கு முன்னிருந்தே ஹரிஜன நலன்களுக்கும் ஹரிஜன முன்னேற்றத்திற்கும் பாடுபட்டு, நல்ல பணிகளைச் செய்துகொண்டு வருகிறார். ஹரிஜன முன்னேற்றத்தையே அவருடைய வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டு பாடுபட்டுவருவதால், இந்தத்துறையில் நல்ல பல வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எப்பொழுதாவது சிக்கல், கஷ்டம், குறைபாடு எற்பட்டால், அதை எடுத்துக் காண்பிக்கும்போது, அவர் உடனுக்குடன் அதைக் கவனித்து, கூடிய சீக்கிரத்தில் பரிகாரம் தேடித் தருவதை நாம் பார்க்கிறோம்.

குறிப்பாக, கல்வித் துறை சம்பந்தப்பட்ட வரையில் ஒரு குறை சொல்லப்படுகிறது. இன்றும்கூட இந்தக் குறை முழுவதும் நீங்கி விட்டதாகச் சொல்ல முடியாது. ஆரம்ப காலத்தில், உதவிச் சம்பளமும், ஹாஸ்டல் விஷயமாகக் கொடுக்கப்படும் உதவித் தொகையும் சீக்கிரத்தில் கொடுக்கப்படாத காரணத்தால் ஹரிஜன மாணவர்களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. தனியார் நடத்தும் ஹாஸ்டல்களில் அதிகாரிகள் முன்னாலேயே பணம் கட்டவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். முதலிலே அவர்கள் கையிலே இருந்து பணத்தைக் கட்டி, பின்னாலே அட்ஜஸ்ட் பண்ண வேண்டியிருக்கிறது. கல்லூரிகளில் படிக்கிறவர்கள் ஸ்பெஷல் ஃபீஸ் எல்லாம் சேர்த்து 200 ரூபாய், 250 ரூபாய் முதலில் கட்டவேண்டியிருக்கிறது. அந்தப் பணத்தை அவர்கள் முதலில் எங்கிருந்

24th July 1962] [திரு. வை. சங்கரன்]

தாவது கடன் வாங்கிக் கட்டவேண்டியிருக்கிறது. 100 ரூபாய், 200 ரூபாய் பெற 400 ரூபாய் பெறுமான சொத்தை ஈடு வைத்துக் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. மத்திய சர்க்கார் உதவி கிடைக்காவிட்டால் தான் ராஜ்ய சர்க்கார் உதவியைப் பெற முன் வருகிறார்களாகையால் சிறிது கால தாமதமாவதற்குக் காரணம் இருக்கிறது. ஆயிரக்கணக்கான மனுக் களைப் பரிசீலனை செய்யும்போது ஓரளவு காலதாமதம் ஏற்படத்தான் செய்யும். இருந்தாலும் ஒரு "அட்ஹாக்" தொகையை ஏற்படுத்தி சேரும்போதே ஒரு மாதத்திற்குள்ளாவது இந்த உதவித் தொகையைக் கொடுப்பது நல்லது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மெடிகல் காலேஜ் போன்றவைகளில் ஸ்காலர்ஷிப் கொடுப்பதில், மத்திய அரசாங்கமானது, மாணவன் ஒரு வருஷம் "டிடைன்" பண்ணப்பட்டாலும் கூட அந்த வருஷம் உதவித் தொகை அளிப்பதில்லை என்று விதி செய்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரை "இரண்டு வருஷம்" என்று இருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் விதியைத் தளர்த்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களின் "இன்கம்" வருஷத்திற்கு 1,500க்குள் இருந்தால் தான் ஸ்காலர்ஷிப் கிடைக்கும் வசதி இருக்கிறது. மத்திய அரசாங்கத்தை பொறுத்த வரையில் மாதம் 300 ரூபாய் வரை சம்பளம் வாங்குபவர்களுக்கு கூட முழு சம்பளம் சலுகை கொடுக்கப்படுகிறது. மாதம் 300 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குபவர்களுக்கு 2/3 பங்கும், 400-ல் இருந்து 500 வரை $\frac{1}{2}$ பங்கும் சலுகை கொடுக்கப்படுகிறது. ராஜ்ய ரீதியிலும் இந்த இன்கம் அளவை வருஷத்திற்கு 3,000 வரை உயர்த்தி அரிஜனங் களுக்கு நல்ல ஊக்கத்தை அளிக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தனியார் ஹாஸ்டல்களையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறது. ஹரிஜன சேவா சங்கம் போன்ற ஒரு சில ஸ்தாபனங் கள் மதுரை மாவட்டத்தில் நல்ல முறையில் ஹாஸ்டல்களை நடத்தி வரு கிறார்கள். அவைகளை எடுத்துக்கொள்ளக்கூடாது. அந்த மாதிரி ஸ்தாப னங்கள் நடத்தும்படியான ஹாஸ்டல்களில் இருக்கும் மாணவர்களுக்கு, ஒரு மாணவருக்கு மாதம் 15 ரூபாய் வீதம் தான் கொடுக்கப்படுகிறது. சர்க்கார் நடத்தும் ஹாஸ்டலில் உள்ள மாணவர்களுக்கும் 15 ரூபாய் வீதம் கொடுக்கப்படுகிறது. சர்க்கார் நடத்தும் ஹாஸ்டல்களில் மேலும் தனியாக பலவிதமான உதவிகள் வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அப்படிக் கணக்கிடும்போது ஒரு மாணவருக்கு 20 ரூபாய் ஆகும். ஆகவே, ஹரிஜன சேவா சங்கம் நடத்தும் ஹாஸ்டல்களில் இருக்கும் மாணவர்களுக்கும் கொடுக்கப்படும் உதவித் தொகையை 20 ரூபாயாக உயர்த்துவது பற்றிச் சர்க்கார் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, குறவர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் "டினோ டிபை" செய்யப்பட்ட லிஸ்டில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. கள்ளர் ரெக்ளமேஷன் என்று தனியாக ஒன்றை அமைத்து அதன் மூலம் பல் வேறு உதவிகளைச் செய்து வருகிறார்கள். குறவர்கள் சம்பந்தமாக அவ்வாறு செய்யப்படவில்லை. அதையும் செய்யவேண்டும்.

கனம் திரு. பூ. கக்கன் : "டிநோடிபை" அவர்களும் சேர்ந்ததுதான்.

திரு. வை. சங்கரன் : அவர்களுக்கு எல்லா வசதிகளையும் விசேஷ மாகச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிகள், பள்ளிக்கூடங்களில் ஹரிஜன மாணவர்களுக்காக 16 சத வீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தனியார் பள்ளிக்கூடங்களில் ஒதுக்கப்பட்ட அளவுக்கு ஹரிஜன மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவ தில்லை. ஒரு கால வரம்புக்குள் அவர்கள் சேராவிட்டாலும் கூட டி.இ.ஓ. க்குத் தனி அதிகாரம் கொடுத்து, ஹரிஜனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி அவர்களைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொள்ள வழிவகைகள் செய்யவேண்டும். ஒரு மாணவன் 280 மார்க் வாங்கியும் முதல் முறை கல்லூரியில் சேர முடியாமல், இரண்டாம் வருடம் தான் பெரிய சிபார்சின் மூலம் சேர்க்கப்பட்டான். இது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வை. சங்கரன்] [24th July 1962

மணைக்கட்டு சம்பந்தமாக, மூலக்குறிச்சி கிராமத்தில் போதிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. பல வருஷ காலமாக கனம் செல்வராஜன் அவர்கள், சிதம்பரம் தீட்சிதர், முக்காணி பிராமணர் ஆகியோரைப் பின் தங்கிய வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று சொல்லி வருகிறார். ஏதோ பிராமணர் க்ஷேதர் என்று பெயர் வருகிறது என்ற காரணத்தினால் சர்க்கார் அசட்டை யாக இருந்துவிடக்கூடாது. உண்மையிலேயே பரிசீலித்துப் பார்த்தால் அவர்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கி இருக்கிறார்கள். அவர்களையும் பின்தங்கிய வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மெரிட் ஸ்காலர்ஷிப்பைப் பொறுத்தவரை, திறமையிருப்பவர்கள் எந்த வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் ஏழையாக இருந்தால் அந்த ஸ்காலர்ஷிப்பைக் கொடுக்கவேண்டும். திறமை இருந்தாலும் கூட, ஒரு சில வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற காரணமாக அவர்களுக்கு அளிக்காமல் விட்டு விடக்கூடாது. திறமையுள்ள மாணவர்கள் நல்ல நிலைமைக்கு வராவிட்டால் அது இந்த ராஜ்யத்திற்குத் தான் நஷ்டம் என்பதை உணர்ந்து ஏழை மாணவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர் களாக இருந்தாலும் திறமைசாலிகளாக இருந்தால் அவர்களுக்கு அவசியம் ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சலவை தொழிலாளர்கள், மருத்துவத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு, அவர் களுக்கு வேண்டிய கருவிகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. சுப்பிரமணியம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் பிரியப்படுகிறேன். இந்த வருஷம் இந்த மானியக் கோரிக்கை 356 லட்சம் ரூபாய் அளவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்ற வருஷம் 305 லட்சம் ரூபாய் மானியம் கோரிக்கை கேட்டார்கள். திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி அது 339 லட்ச மாகக் கூடியிருக்கிறது. இந்த இலாகாவுக்கு எவ்வளவு தொகை வேண்டு மானாலும் கொடுத்து நல்ல முறையில் வேலை செய்து வருகிறார்கள். 1954—55-ல் இந்தத் துறையில் ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவாக ஒதுக்கப் பட்டத்தொகை, படிப்படியாக அதிகமாகி நல்ல விதமாக நடவடிக்கைகள் எடுத்து வருவதை நாம் எல்லாரும் பார்க்கிறோம். ஹரிஜனங்ககள் சமூகம், கல்வி, பொருளாதார விஷயத்தில் மற்றவர்களுடைய நிலைக்கு உயரவேண்டுமென்ற குறிக்கோளுடன்தான் இவ்வளவு அதிகமான தொகை ஒதுக்கி நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். இருந்தாலும் கூட அவர்களுடைய குறைகளை நீண்ட நாட்களுக்குச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. முதலிலே, ஹரிஜனங்களுக்குத் தனியாகச் சலுகை கொடுப் பதற்கான காலத்தைப் பத்து வருஷம் என்று நிர்ணயித்திருந்தார்கள். இப்போது மேலும் 10 வருஷங்களுக்கு நீடித்திருக்கிறார்கள். அதில் இரண்டு வருஷங்கள் முடிந்து விட்டன. அதிகப்படியாக இருக்கும் வருஷங் கள் எட்டு வருஷங்கள் தான். ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஏற்பட் குறைகளை நாம் இந்த எட்டு வருஷங்களில் விரைவாக நீக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் இப்போதுள்ள நிலையை விட ஒன்றும் அதிகமாக முன்னேறிவிட மாட்டார்கள். இந்த எட்டு வருஷ காலம் முடிந்தவுடன் ஹரிஜனங்கள் மற்றவர்களுடைய நிலைக்கு உயர்ந்துவிட்டார்கள் என்று பின்னால் சொன்னால், அது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகத்தான் ஆகும். ஆகவே, இந்த வேலைகளைத் துரிதமாக, நல்ல முறையிலே நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு நான் சில யோசனை களைச்சொல்ல விரும்புகிறேன். அதைக்கருத்தில் வைத்து கனம் அமைச்சர் அவர்கள் இந்தக் காரியங்களையெல்லாம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையில், ஹரிஜன நல இலாகா டைரக்டர் அவர்கள் இந்தக் காரியங்கள் சரியாக நடைபெறுகின்றனவா என்று நேரடியாகப் பார்த்தாலும், ஜில்லாக்களைப் பொறுத்தவரையில் கலெக்டர் களின் நேரடிப் பார்வையில் இந்தக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

உண்மையில் ஹரிஜனங்களுடைய நிலையை அறிந்தவர்களாக இருந்தால், நல்ல முறையில் ஹரிஜன நல வேலைகளைச் செய்கிறார்கள். இல்லையென்றால் அவர்கள் சரியானபடி இந்தக் காரியங்களைக் கவனிப்பதில்லை. இதில் ஹரிஜன நல இலாகா டைரக்டருக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது. ஜில்லா கலெக்டர்கள், ஹரிஜனநல இலாகா டைரக்டரை விட சீனியராக இருக்கிறார்கள். அவர்களைக் கேட்கக் கூடிய அதிகாரமும் டைரக்டருக்கு இல்லை.

ஆகவே, கலெக்டர் மேல் அதிகாரம் வகிக்கக்கூடிய ஒரு மேல் அதிகாரியை டைரக்டராக்கவேண்டும். ஏற்கனவே இதை நான் வற்புறுத்திக் கூறி 10-30 a.m. யிருக்கிறேன். செகரட்டரி லெவலில் இருப்பவர்கள் டைரக்டராக இருந்து எக்ஸ்-அபிஷியோ செக்ரட்டிரியாக இருக்கலாம். அல்லது ரெவின்யூ போர்டு மெம்பர், சீனியர் மெம்பரை வைத்து அடிஷனல் சார்ஜ் கொடுத்து வேலை செய்யச் சொன்னால் கலெக்டர் மேல் அவர்களுக்கு அதிகாரம் செலுத்தி நல்ல முறையில் வேலைகள் செய்ய முடியும். அடுத்தபடியாக, தாலூக்காக்களில் சரியானபடி அக்விஸிஷன் வேலைகள் நடைபெறவில்லை என்றால் போதுமான ஸ்டாஃப் கிடையாது. ஆகவே தாசில்தார்களை அதிகப் படுத்தவேண்டும். ஒரு தாலூகாவிற்கு ஒரு தாசில்தாரும், சர்வேயரும் போட்டு வேலை செய்தாலொழிய மனைக்கட்டு ஆர்ஜித வேலைகள் நல்ல முறையில் நடைபெறாது. இதில் வேலை செய்பவர்களுக்கு 13 லட்சம் ரூபாய் செலவழிக்கிறோம். இன்னும் இரண்டு லட்சம் கூடுதலாகச் செலவு செய்வதால் கெடுதல் ஒன்றும் ஏற்பட்டு விடாது. பணம் கண்டு பிடிக்கவும் கஷ்டம் இல்லை. அடுத்தபடியாக, எந்தத் தாசில்தாரும் நான்கு மாதங்களுக்கு மேல் வேலை செய்வது கிடையாது. ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் வேலை செய்வது கிடையாது. ஹரிஜன இலாகா தாசில்தாருக்கு ஆறு தாலூகாக்கள் இருக்கின்றன. நான்கு மாதங்களில் அவர் தாலூக்காக்களை சுற்றிப் பார்க்கவே சரியாக இருக்கிறது. அதற்குக்கூட நேரம் இல்லை. அதற்குள் அவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றிப் போய் விடுகிறார்கள். தாசில்தாரும், ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் ஆறு மாதங்களுக்கு மேல் வேலை பார்த்தால், அந்த ஆறு மாதத்திற்கு மேல் வேலை பார்க்கும் காலத்தை எடுத்துக்கொள்வதில்லை. அது ரெகுலர் சர்வீஸாகக் கருதப் படவில்லை. ஆகவே, வரும்போது எப்பொழுது வெளியேபோகலாம் என்ற எண்ணத்துடன் தான் அவர்கள் வருகிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் தஞ்சாவூரில் ஒரு பத்து தாசில்தார்களாவது மாறியிருப்பார்கள். இதை வேண்டுமானால் வெரிஃபை செய்து கொள்ளலாம். அவர்களுக்கும் உற்சாகம் இல்லை. வேலைகளும் நடைபெறுவதில்லை. ஆகவே அவர்கள் எவ்வளவு நாட்கள் இருந்தாலும் அதை ரெகுலர் சர்வீஸாக மாற்றிவிட வேண்டும். இல்லையெனில், வயதான காலத்தில் அவர்கள் மேல்பதவிக்கு வர லாயக்கில்லாத காலத்தில் கொண்டு போடுகிறார்கள். அவர்களுக்கு என்ன அக்கறை இருக்கும்? ஏதோ காலத்தைத் தள்ளிக்கொண்டு போகவேண்டுமென்று தான் நினைக்கிறார்கள். இது நல்லதல்ல. ஹரிஜன நல இலாகாவில் நல்ல வேலை செய்யக்கூடியவர்களுக்கு உத்தியோக உயர்வில் பிரத்தியேக சலுகை காட்டவேண்டும். இல்லாவிடில் நல்ல வேலை செய்ய அவர்களுக்கு ஆர்வம் இருக்காது. ஹரிஜன நல் இலாகாவில் வேலை பார்ப்பவர்களுக்கு உத்தியோக உயர்வில் பிரத்தியேகச் சலுகை காட்டினால் தான் அவர்களுக்கு இன்ஸெண்டிவ் இருக்கும். அப்பொழுது தான் அவர்கள் நன்கு வேலை செய்வார்கள். இதை கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கல்வி விஷயத்தில் நல்ல சிரத்தை எடுத்துக்கொண்டு ஹாஸ்டல்கள் போன்றவை வைத்து பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்கிறார்கள். இதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். காலேஜ்களில் ஹரிஜனங்களுக்கு ரிசர்வேஷன், 16 சத விகிதம் ஒதுக்குகிறார்கள். ஆனால் இந்த பிரத்தியேகச் சலுகை எம்.ஏ., எம்.எஸ்ஸி வகுப்புக்குக் கிடையாது. டெப்டி கலெக்டர் வேலைக்கு எம்.ஏ. க்வாலிபிகேஷன்ஸ் கேட்கிறார்கள். படித்தால் தானே டெப்டி கலெக்டராக வர முடியும்? ஆகவே, இந்த எம்.ஏ., எம்.எஸ்ஸி. களிலும் ரிசர்வேஷன் கொடுக்க வேண்டும். அதோடு ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். குப் போக அவா உள்ளவர்களுக்கு தனி கோச்சிங் கொடுக்க ஏற்பாடு

செய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற சமூகத்தினர் போகிறார்கள். போயிருக்கிறார்கள். நம் சமூகத்தினர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்க்குப் போக கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு தனி கோச்சிங் கொடுக்க வேண்டியது அவசியம். பின்னர், சர்வீசிலும் போது மான அளவில் ஹரிஜனங்கள் நியமிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் என்னவென்று புரியவில்லை. சாதாரணமாக கிளார்க்காக செல்ல எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தால் போதும். சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்குப் போகலாம். ஆனால் ஹரிஜனங்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. இதை ஆராய்ந்து, கண்டு பிடிக்க ஒரு தனி ஆபீசர் போடப்போவதாகத் தெரிவித்தார்கள். தனி ஆபீஸருடன் நான்கைந்து நான் அபிஷியல்லேயும் போட்டு ஒரு கமிட்டி நியமித்து அக்கமிட்டி எல்லா டிபார்ட்மெண்ட்களையும் கவனித்து என்ன குறை இருக்கிறது என்று கண்டு பிடிக்கச் சொன்னால் நலமாயிருக்கும் என்பது என் அவா. ஆகவே, இதையும் செய்யவேண்டுமென் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி யடிக்கப்பட்டது) இரண்டு நிமிடங்கள் கூட. சமூகத் தடை ஒழிப்புச் சட்டம், தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இவைகள் ஏற்படுத்தப்பட்டு அவைகளை நல்ல முறையில் அமுலாக்க நாம் ஆசைப்படுகிறோம். சாதாரண கிராமப் புறங்களில் போலீசார்தான் இதைச் செய்து வருகிறார்கள். சட்டத்தினால் மட்டும் இந்தக் காரியத்தைச் செய்து விட முடியும் என்று நம்பக் கூடிய வன் அல்ல நான். ஜாதி ஹிந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் இடையே யுள்ள வேற்றுமையை நீக்க பிரசாரகர்களை வைத்துப் பிரசாரம் செய்து வருகிறோம். ஆனால், யாரைப் போட்டிருக்கிறார்கள். டெப்டி சேவக்கு களைப் போட்டிருக்கிறோம். அவர்களில் அநேகம் பேர்கள் ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஓரளவு நல்ல நிலைமைக்கு வந்தவர்களைக் கூட, ஜாதி பிரிவினையை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறவர்களிடம் பேசும்போது, வேற்றுமை மனப்பான்மை காட்டுகிறார்கள். என்னைப் போன்ற அளவில் இருக்கிறவர்கள் அவர்களைப் பார்த்தால் மரியாதை கொடுக்கத் தயங்குகிறார்கள். என்ன, எப்போது வந்தது, எப்போது ஊர் திரும்பிப் போவது என்று இப்படி அஃறிணைப் போட்டுப் பேசும் நிலை தான் இருக்கிறது. ஆகவே, டெப்டி சேவக் மூலம் பிரசாரம் செய்து, இதை நீக்குவது என்பது முடியவே முடியாது. டெப்டி சேவக் மூலம் இந்த வேலையை ஒருக்காலும் செய்ய முடியாது. காந்தி பக்தர்கள், ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று எண்ணம் உள்ளவர்கள் இன்னும் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்களுக்கு வசதியில்லாததால் அவர்கள் முன் வராதிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு சம்பளமோ அல்லது ஹான ரேரியமோ கொடுத்து ஒவ்வொரு ஜில்லாவிலும், ஜாதி ஹிந்துக்கள், பிரா மணர்கள் கொண்ட கமிட்டிகள் அமைத்து வேலை செய்யச் சொன்னால் நலமாயிருக்கும்.

அடுத்தபடியாக, வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்து கொடுப்பது, துரிதமாகச் செய்யப்பட வேண்டும். ஏனோ தானோ என்று செய்து கொண்டு போவதில் பிரயோசனமில்லை. இதற்கு, ஒரு திட்டம் போட்டுச் செய்யவேண்டும். தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், 1,500 மனுக்கள் வீட்டு மனைக்காக வந்திருக்கின்றன. ஒரு மாதத்திற்கு பத்து அவர்ட் தான் பாஸ் செய்கிறார்கள். இப்படியிருந்தால் இப்பிரச்னையை எப்போது தீர்ப்பது? வருடத்திற்கு இரண்டு தாலுகாக்களை எடுத்துக் கொள்ளவேண்டும். அங்கு மனைக்கட்டு இல்லாமல் இருப்பவர்களுக்கு மனை கட்டுகள் வழங்க முயற்சி செய்ய வேண்டும். ஒரு ஜில்லாவில் 12, 14 தாலூக்காக்கள் இருக்கலாம். இப்படி செய்து கொண்டுபோனால் ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் ஆகுமே என்று கூறலாம். அவர்கள் ஆயிரக் கணக்கான வருடங்களாக கஷ்டப்பட்டு விட்டார்கள். ஆகவே அவர்கள் கூடுதல் ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் கஷ்டப்படுவது அதிகமில்லை. இந்த அடிப்படையில் திட்டமிட்டு செய்தால் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும். திரு. சுப்பையா அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கே ஆர்ஜிதம் செய்து கொடுத்து விடவேண்டுமென்று. இரண்டு வருட காலத் திற்கு அப்புறப்படுத்தக்கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறார்கள். அதற்கு மேல் அவர்களுக்கு ஆர்ஜிதம் செய்து கொடுக்க முயற்சி எடுத்துக்

24th July 1962] [திரு. ரா. சுப்பிரமணியம்]

கொள்ளவேண்டும். மனைக்கட்டுகள் கட்டிக்கொடுப்பதில் ஒரு பெரிய மாறுதலைச் செய்யவேண்டும். 750 ரூபாயாக இருந்ததை ஆயிரமாக அதிகப் படுத்தியிருக்கிறோம். அதனால் பிரயோஜனமில்லை. அவர்களிடம் ஒரு தன்னம்பிக்கையை உண்டுபண்ணவேண்டும். ஹவுஸ் ஸைட்ஸ் வாங்கிக் கொடுத்து தாங்களே கட்டிக்கொள்ளும் ஒரு தன்னம் பிக்கையை ஏற்படுத்த வேண்டும். சுவர் எழுப்பி விட்டால் 300 ரூபாய் கொடுத்து அவர்களுக்கு மற்ற சாமான்களை வாங்கிக்கொடுத்து கட்டிக் கொள்ளச் சொன்னால் அதிகம் பேர்கள் கட்டுவதற்கு வசதியாக இருக்கும். இப்பொழுது செய்வதைப் போல் செய்துகொண்டு போனால் ஒரு சிலருக்கு நன்மை செய்யமுடியுமே தவிர மற்றவர்களுக்கு நன்மை செய்ய முடியாது. பாலங்கள், கிணறுகள், பள்ளிக்கூடங்கள் இவை எல்லாம் ப்ளாக் லெவலில் ப்ளாக் ஆபீசரே கட்டிக்கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்திருக் கிறோம். (மணியடிக்கப்பட்டது.)

*** திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம்:** கனம் சபா நாயகர் அவர்களே, அரிஜன நல இலாகா மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நமது மாகாணத்தில் அரிஜன இலாகா மிகவும் நல்ல முறையில் சேவை செய்து வருகிறது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால், மிகவும் பின்தங்கிய வகுப்பினராக இருக்கக் கூடிய முக்குலத்தோரை மிகவும் பின்தங்கிய வகுப்பில் சேர்க்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாய் இருக்கிறது. இந்த மாகாணத்தில் அதிக ஜனதொகையினராக இருக்கக்கூடிய ஏழை முக்குலத்தோர்களுக்கு கல்வி வசதி, மற்ற வசதிகள் பின் தங்கின வகுப்பினருக்கு கிடைக்கக் கூடிய சலுகைகள் போன்று இவர்களுக்கும் கிடைக்கக்கூடிய நிலை இல்லா மல் இருக்கிறது. குறிப்பாக முக்குலத்தோரில் இருக்கின்ற மாணவர்கள் மேல் படிப்பு—அதாவது இன்சினியரிங், மெடிகல் போன்ற படிப்புகள் படிப்பதற்கு இப்போது அவர்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் இருக்கின்றது. குறிப்பாக தற்போது முக்குலத்தோர் வகுப்பைச் சேர்ந்த ஒரு சில மாணவர்கள் இன்சினியரிங், மெடிகல் போன்ற வகுப்புகளுக்கு மனு செய்திருந்தும் அவர்களை மெடிகல் இன்சினியரிங் காலேஜ்களில் சேர்க்காததின் காரணமாக அவர்கள் மிகவும் கஷ்டமுற்றிருக்கிறார்கள். முக்குலத்தோரை சேர்ந்தவர்கள் மிகவும் பின்தங்கியநிலையில் இருக்கின்ற வர்கள் என்று தெரிந்தும், அவர்களை மிகவும் பின் தங்கிய வகுப்புப் பட்டியலில் சேர்க்காமல் இருப்பதின் காரணமாக, அவர்கள் பல கஷ்ட நஷ்டங்களை அடைய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, முக் குலத்தோர் வகுப்பாரை மிகவும் பின் தங்கிய வகுப்பில் சேர்த்து அவர் களுக்கு வேண்டிய எல்லா சலுகைகளையும் அரசாங்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதைப் போலவே, மற்றும் பின்தங்கிய வகுப்பில் சேர்க்கவேண்டிய சில ஜாதியினரும் இருக்கிறார்கள், அவர்களையும் மிகவும் பின்தங்கிய வகுப்பில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்விதம் சேர்த்துக் கொண்டால் தான் ஜனநாயக நாட்டில் பின்தங்கியவர் கள் எல்லோருக்கும் நல்ல வாய்ப்பு அளிப்பதற்கு இடமிருக்குமே தவிர ஒரு சில குறிப்பிட்ட வகுப்பினரை மட்டும் பின்தங்கிய வகுப்பில் சேர்த்துக் கொண்டு மற்றவர்களுக்கு முன்னேற வாய்ப்பில்லாமல் இருப்பது நியாயம் இல்லை. பின்தங்கிய வகுப்புக்கள் அபிவிருத்தி அடைவதற்கும் ஏதுவாக இருக்காது. ஆகவே, அவர்களையும் மிகவும் பின்தங்கிய வகுப்பில் சேர்க்கப் படவேண்டிய அத்தனை ஜாதியினரையும் எடுத்துக் கொண்டுமிகவும் பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு எல்லாச் சலுகை களும் அளிக்கப்படவேண்டும். அப்படி இல்லையென்றால் இந்த நாட்டி லிருக்கின்ற ஜனத்தொகை வீதாச்சாரத்தில் ஏழைகளாக எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், நடுத்தரமானவர்கள் எத்தனைபேர், வசதி படைத்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் என்று கணக்கிட்டு, எல்லா ஜாதியி லுள்ள எல்லா ஏழைகளுக்கும் சகோதரத்துவ அடிப்படையில் சமமான அளவில், சோஷியலிஸ அடிப்படையில் எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் கிடைக்கும்படிச்செய்தால் தான் இந்த நாட்டில் இருக்கின்ற பிற்பட்டவர் வர்களும் முற்போக்கு அடைய முடியும். இல்லை என்றால் முற்போக்கு அடைந்திருக்கின்றவர்களே சில சாதகங்களை அடைந்து கொண்டிருக்கின்

ருர்கள். ஜனநாயக நாட்டில் எந்த ஜாதியாக இருந்தாலும் சரி, எல்லா வகுப்பிலுள்ள ஏழைகள் எத்தனை பேர்கள் இருக்கின்ருர்கள் என்று கணக்கிட்டு அதன் அடிப்படையில் சலுகைகளைச்செய்து கொடுத்தால் தான் இந்த நாடு முன்னேற முடியும் என்பதை நான் கூறிக் கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய வகுப்பினர் இருக்கின்ற பகுதியிலும், அரிஜன மக்கள் இருக்கின்ற பகுதியிலும் அரிஜன ஹாஸ்டல்கள் மிகவும் பின்தங்கியவர்கள் ஹாஸ்டல்கள் போதிய அளவுக்கு இல்லை. இன்னும் கூடுதலான ஹாஸ்டல்களை ஏற்படுத்தவேண்டும். குறிப்பாக கிழக்கு ராமனதபுரம் ஜில்லாவில், அரிஜன ஹாஸ்டல்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. திருவாடானை தாலுகாவை எடுத்துக்கொண்டால், ஒரு அரிஜன ஹாஸ்டல் தான் இருக்கிறது. இது போதாது, இன்னும் நாலைந்து ஹாஸ்டல்களாவது ஏற்படுத்தினல் தான் மிகவும் பிற்பட்டிருக்கின்ற கிழக்கு ராமனதபுரம் பகுதியிலுள்ள மக்கள் குறிப்பாக திருவாடானை தாலுகாவிலுள்ள மக்கள், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தமக்கள் அரசாங்கம் கொடுக்கின்ற சலுகைகள் மூலம் பலன் பெற முடியும். அதோடு கல்வித் துறையிலும் நல்ல முன்னேற்றம் அடைய முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முன்னல் எடுத்துச் சொன்ன விஷயங்கள் எல்லாம் மிகவும் முக்கியமானவை என்று கருதி, குறிப்பாக எங்கள் பகுதியில் அரிஜன ஹாஸ்டல்கள் அதிகமாக ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் எனக்கருதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. எஸ். சின்னையன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையை நான் ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் உடையவனுக இருக்கின்றேன். இந்த மான்யக் கோரிக்கையை நான் மிகவும் அன்போடு வரவேற்கின்றேன். அப்படி வரவேற்கின்ற நேரத்தில் எனக்கு மகிழ்ச்சியும் தென்பும் ஏற்படுகின்றது என்று ஏன் சொல்லுகிறேன் என்ருல், கனம் அமைச்சர் அவர்கள் அவர்களது பிரசங்கத்தின் தொடக்கத்தில் "அரிஜனங்களின் நலனையே முக்கியமாக கருதி தீண்டாமை ஒழிப்புக்கு வழிகோலிய அண்ணல் காந்தியடிகளின் சேவைக்கு நன்றி தெரிவித்துக்கொள்வது இச்சமயத்தில் நமக்கிருக்கும் ஒரு முக்கிய கடமையாகும்" என்று சொல்லியிருக்கிருர்கள். இதை நினைக்கின்ற பொழுது உண்மையிலேயே எனக்கு தெம்பும் உற்சாகமும் ஏற்படுகின்றது. 15,20 ஆண்டுகளுக்கு முன்னல் அரிஜனங்கள் எங்கேயாவது செல்லவேண்டும் என்று சொன்னல் பல கிராமங்களில் அரிஜன மக்கள் அடி, உதை பட வேண்டியநிலை வரும். என்னுடைய வாழ்க்கையிலேயே கண்ணரக் கண்டிருப்பது, நானே அனுபவித்திருப்பது இவைகளை சொன்னல் ஆச்சரியமாக இருக்கும். நான் ஒரு கிராமத்தில் சைக்களில் போய்க்கொண்டிருந்தபோது சைக்கிளையும் பிடுங்கி என்னையும் அடித்து உதைத்து தள்ளக்கூடிய ஒரு நிலைமை அன்றைக்கு இருந்தது. இன்று அந்த நிலை மாறி அதே கிராமத்தில் சாதாரண அரிஜன் கூட தாராளமாக எந்தவிதமான பயமும் இல்லாமல் சைக்களில் செல்லுவதற்கு ஒரு மார்க்கம் இருக்கின்றது என்று சொன்னல் அது மகான் காந்தி அடிகளின் சேவையினல் ஏற்பட்டதை தவிர வேறென்றும் இல்லை. இதை நினைக்கிற பொழுது உள்ளபடியே பெருமைப்படுகிறேன், சந்தோஷப் படுகிறேன், என்னுடைய வாழ்க்கையில் இம்மாதிரி அனுபவித்ததின் காரணமாக நான் இதைப் பெருமையாக சொல்லுகின்றேன். அதே நிலையில் கனம் அமைச்சர் அவர்களும் இருந்தவராதலாலும், அவர்கள் இம்மாதிரிப்பட்ட நிலைகளை எல்லாம் நன்ருக அறிந்தவர்களாதலாலும்தான் அவர்கள் தனது பேச்சில் அண்ணல் காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டியது நம்முடைய கடமை என்று சொல்லியிருக்கிருர்கள். மகான் காந்தியடிகள் அரிஜனங்களுக்கு சேவை செய்ததோடு நின்றுவிடவில்லை, இந்த நாட்டிலுள்ள இந்துக்களுக்கு எல்லாம் சாஸ்திரங்களை எல்லாம் எடுத்துச்சொன்னர்கள்.......

"வேதத்திலில்லை கீதையிலில்லை—வேறுள்ள
சாஸ்திரம் யாருக்கினி—சாதித்து
யாரையும் சண்டாளனென்றிடும்
சாஸ்திர சத்திய சம்மதமோ...."

என்று இந்த நாட்டிலிருக்கின்ற மக்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டினார்கள். அதோடுமட்டுமல்ல....

நால்வர் உரைத்த தேவாரத்திலில்லை
நந்தன் குலத்தினை நிந்தை சொல்லல்
பால்வரும் ஆள்வார்—பாசுரத்திலுமில்லை
பாணர் வளர்ந்ததைக் கோணலெனல்....

என்று இந்த உண்மையான தத்துவங்களை எல்லாம், இந்த நாட்டு மக்கள் மத்தியில் பரப்பி, மக்கள் எல்லாம் காந்தியடிகளின் கொள்கையை பின் பற்றி அந்தக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, காங்கிரஸ் மகா சபையின்சார்பில், காங்கிரஸ் தொண்டர்கள் எல்லாம் செய்த சேவையின் பலனைத்தான் இன்றைக்கு என் போன்ற சாதாரண ஊழியர்கள் எல்லாம் எந்த இடத்திற்குப் போவதற்கும், எந்த இடத்தில் உலாவுவதற்கும் எந்த இடத்திலும் சரிசமமாக போய்வருவதற்கு வாய்ப்பும் வலிமையும் ஏற்பட்டிருக்கிறது. அதற்கான முறையில் இன்று காங்கிரஸ் அரசாங்கம் ஆணித் தரமாக சகல காரியங்களையும் செய்து வருகிறது. இந்த அரிஜன சமூகத்திற்காக நமது அரசாங்கம் செய்திருக்கின்ற ஒவ்வொரு வேலைத்திட்டங்களையும் எடுத்துப் பேசவேண்டுமென்று சொன்னால் மணிக்கணக்கில் பேச வேண்டும். கனம் சபாநாயகர் அவர்கள் கொடுத்திருக்கும் நேரம் மிகவும் குறைவு. ஆகவே இந்த நேரத்தில் அவற்றை எல்லாம் எடுத்துப் பேச முடியாது. இருந்தாலும் கூட சில விஷயங்களைச் சொல்லித்தான் ஆகவேண்டும். ஏனென்று சொன்னால் ஒவ்வொரு துறையை எடுத்துக்கொண்டாலும், அன்றைக்கு 20 வருஷங்களுக்கு முன்னால் இருந்த நிலையும் பார்த்துவிட்டு இப்போது இருக்கின்ற நிலையை பார்க்கின்ற பொழுது....

" நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்க களியாட்டம்.....

என்று சொல்லக்கூடிய அளவுக்கு, எந்தத் துறையைப் பார்த்தாலும் இந்தக் களியாட்டத்தைப் பார்க்க முடியும். எந்த ஊரை எடுத்துக்கொண்டாலும் சரி, எந்த வீதிகளை எடுத்துக்கொண்டாலும் சரி, ஒவ்வொரு துறையிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்க முடியும், தைரியமாக சொல்ல முடியும். அந்த அளவுக்கு அரிஜனங்களுடைய முன்னேற்றம் வளர்ந்திருக்கின்றது, வளர்ச்சி அடைந்து கொண்டே வருகிறது. இதற்கெல்லாம் அடிகோலாக இருப்பது இந்த அரசாங்கம் தான் என்பதை யாரும் மறுத்துச் சொல்லிவிட முடியாது. ஆகையால் தான் நான் பெருமையும் பூரிப்பும், தெம்பும் அடைகிறேன் என்று சொன்னேன். இவ்வளவு அதிகமான சலுகைகள் இருந்தாலும் கூட ஒரேயடியாக இந்தச் சமுதாயம் அத்தனையும் முன்னேறி விட்டது என்று சொல்லிவிட முடியாது. இன்னும் பல துறைகளில் இந்த மக்கள் முன்னேற வேண்டியிருக்கிறது. தீண்டாமை என்பது இன்று இன்னும் சற்று கடுமையாகத்தான் பல கிராமங்களில் இருக்கின்றது. இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் நன்றாகக் கவனித்து ஆவன செய்யவேண்டும்.

அதோடு இந்தத் தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயத்திலே அருந்ததியர்கள் என்று சொல்லக்கூடிய சக்கிலியர்கள் மிகவும் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள். இந்த அரிஜன் வெல்ஃபேர் கமிட்டி ரிப்போர்ட், 1948 என்ற புத்தகத்திலே 19வது பக்கத்தில் பார்த்தால் நல்ல முறையில் அருந்ததியர்களைப்பற்றி விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஹரிஜன சமுதாயத்தில் மிகவும் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கக்கூடிய இவர்கள் கல்வி மற்றும் இதரத் துறைகளில் மிகவும் பிற்போக்காக இருக்கிறார்கள்—அவர்கள் நிலையை கனம் அமைச்சர் அவர்கள் நன்றாகக் கவனித்து வருகிறார்கள். இன்னும் அதிகப்படியாக முழுக்கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், ஹரிஜன இலாகா மூலமாக நடத்தும் பள்ளிகள் அப்படியே இருக்கவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். ஏனென்றால் ஹரிஜன நலப் பள்ளிகளில் அங்கே இருக்கிற ஹரிஜன மக்கள் நமக்காக ஏற்பட்ட ஒரு பள்ளி என்று ஆவேசமாக, ஊக்கமாக வந்து அந்தப் பள்ளிகளில்

அதிக மாணவ-மாணவிகள் படிக்கிறார்கள். அதையெல்லாம் ஆங்காங்கு இருக்கும் யூனியன்களுக்குக் கொடுத்துவிட்டால் அத்தகைய ஊக்கமும் உற்சாகமும் வராது. ஆகையால், ஹரிஜன இலாகா பள்ளிகள் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்காமல் ஹரிஜன இலாகா மூலமாகவே நடத்தப் படுவதாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல டெபுடிசேவக்குகளை வைத்துக்கொண்டு இந்தத்தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்தை நடத்தி விட முடியாது. டெபுடி சேவக்குகள் நல்ல முறையில் வேலை செய்ய ஆங்காங்கு இருக்கிற ஜில்லா அதிகாரிகள் அவர்களை அதிமாகக் கண்காணிக்கவேண்டும். தினந்தோறும் திண்ணையில் தூங்கிவிட்டு மாதம் ஆனால் சம்பளம் வாங்கும் நிலையில் டெபுடி சேவக்குகள் இருக்கிறார்களே தவிர, உண்மையில் எதற்காக அவர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற தத்துவத்தை அவர்கள் உணராமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் விஷயத்தில் அந்த அளவிலே மாவட்டங்களில் இருக்கிற ஹரிஜன நல அதிகாரிகள் மிகவும் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. கே. பி. பழனிசாமி :** கனம் தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன நல மான்யத்தின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

நமக்கு சுதந்திரம் கிடைத்து 14 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 14 ஆண்டுகளில் ஓரளவுக்கு ஹரிஜன மக்கள் முன்னேற்றத்தைக் கண்டிருக் கிறார்கள். 1962-63ம் ஆண்டுக்கு ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக ரூ. 3,56,39,200 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மான்யம், ஹரிஜனங்கள் குறிப்பாக கல்வியில் முன்னேறவும், அவர்களுக்கு மனைக்கட்டுக்கள் வழங்க வும், இன்னும் ஹரிஜன விவசாயிகளுக்கு கிணறுகள் வெட்டிக் கொடுக்கவும், இந்த மாதிரியான முன்னேற்றகரமான வேலைகள் செய்ய ஒதுக்கப்பட்டி ருக்கிறது. இதிலே சற்றுக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் பண்டைய காலத்தில் ஹரிஜன மக்கள் பலவிதக் கஷ்டங்களுக்கு உட்பட்டி ருந்தாலும்கூட, 10-12 ஆண்டு காலத்தில் சர்க்காரினால் கொடுக்கப்படுகிற சலுகைகள் காரணமாக, சர்க்காரினால் தீண்டாமை ஒழிப்புக்காகச் செய்யப் படும் காரியங்கள் காரணமாக இன்றைய தினம் ஹரிஜன மக்கள் முன் னேற்றம் கண்டிருக்கிறார்கள். குறிப்பாக இன்னும் சற்றுத் தீவிரமான கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக நம்முடைய சட்டம் நமக்கு உதவியாக இருந்தாலும், சட்டத்தினால் மாத்திரம் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது. மக்களுடைய மன மாற்றம் மிகவும் அவசியம். இதற்காக காந்திமகானுடைய லட்சியத்தை அடையும் அளவிலே ஹரிஜன தினம் கொண்டாடுகிறோம். ஒவ்வொரு ஜில்லாவிலும் குறிப்பாக கலெக் டர், அவருக்குக் கீழே உள்ள அதிகாரிகள், ஹரிஜனநல அதிகாரிகள், தாலுக்கா தாசில்தார் எல்லோரும் சேர்ந்து கொண்டு நல்ல ஆலோசனை களையும் போதனைகளையும் அப்போது எடுத்துக் கூறினால் தீண்டாமை ஒழிப்புக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆகவே இந்த முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட ஒரு சமுதாயம் முன்னேற வேண்டுமானால் கல்வி அவசி யம். கல்விக்காக 1961-62-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 28·06 லட்சமாகும். ஆனால் இந்த வருஷம்—1962-63ம் வருஷம்—சுமார் ரூ. 21 லட்சம் என்று குறைத்திருக்கிறார்கள். அதனால் சுமார் 8 லட்சம் ரூபாய் துண்டு விழு கிறது. போன வருஷம் இருந்த ஜனத்தொகையை விட இந்த வருஷம் ஜனத்தொகை அதிகமாக இருக்கும் என்ற காரணத்தினால் இந்த வருஷத் தில் போன வருஷத்தைவிட அதிகமாக மாணவர்கள் படிக்க முன் வருவார் கள். வருஷாவருஷம் மக்களுக்குப் படிக்க வேண்டும், நாகரீகமாக வாழ வேண்டும் என்ற ஆர்வமும் உற்சாகமும் அதிகமாகும்போது ஒதுக்கப்படக் கூடிய தொகை அதிகமாக இருக்க வேண்டும். ஹரிஜனங்களுக்கு சலுகை கள் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எல்லோருக்கும் ஒரே மாதிரிச் சலுகை கொடுக்கப்படுகிறது என்று சொல்லி கொள்ள விரும்பு கிறேன். வருவாய் ரூ. 1,500க்குக் குறைவாக இருந்தால் எல்லோருக்கும்

24th July 1962] [திரு. கே. பி. பழனிசாமி]

சம்பளம் இல்லாமல் படிக்க வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஹரி ஜனங்கள் விஷயத்திலாவது இதைக் கொஞ்சம் மாற்றி அமைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். கோவை போன்ற நகரங்களில் ஒவ்வொரு வரும் ரூ. 130, ரூ. 150 என்று சம்பாதிக்கிறார்கள். அதாவது ரூ. 1,500 வருஷ வருமானம் என்று வைத்திருப்பதைவிட அதிகமாக வாங்குகிறார்கள். அவர்களுக்குச் சம்பளத்தைத் தவிர வேறு சொத்து இருக்காது. கட்டாய மாக அவர்கள் விஷயத்திலாவது ரூ. 2,000 என்று வரம்பு வைத்து அதை அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்லாமல் வீடுகள், மனைக்கட்டுக்கள் இவைகளுக்காக ரூ. 16 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் சொன்ன மாதிரி இதற்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது ஏதோ சிலபேர் அந்த நிலங்களில் விளைச்சல் அதிகமாக வரும் என்று அப்ஜெக்ஷன் செய்தால் அதை விட்டு விட்டுப் பக்கத்து ஊரில் 3—4 மைல் தள்ளி வேறு இடங்களைப் பார்த்துக் கொடுக்கிறார்கள். அதனால் மக்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. இந்த மாதிரி இடங்களில் நன்றாகக் கவனித்து அவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு உத்தியோகங்கள், உத்தியோக உயர்வு எல்லாம் கொடுப்பதில் சென்ட்ரல் கவர்ன்மெண்டில் ப்ரொபோர்ஷன் வைத்துக் கொடுக்கிறார்கள். லோக்கல் கவர்ன்மெண்ட், பஞ்சாயத்துக்கள், முனிசி பாலிட்டி ஆகிய துறைகளில் விகிதாசாரம் வைத்துக் கொடுப்பதில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். அதையும் நல்ல முறையில் கொடுக்கச் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. மீ. அழகர்சாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் வைத்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து எனது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இதிலே ஹரிஜனங்களுக்காக மனைக்கட்டுகளை ஆர்ஜிதம் செய்வதில் மிகக் கால தாமதம் ஏற்படுகிறது. இதையே எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்கள் வற்புறுத்தினார்கள். சில இடங்களில் ஆர்ஜிதம் செய்யப் பட்ட நிலங்கள்கூட ஓரிரண்டு வருஷமாகப் பிரித்துக் கொடுக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. இந்த இரண்டு விஷயங்களை யும் துரிதமாகப் பார்த்து, ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களைப் பிரித்துக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜன மாணவ விடுதிகளுக்குக் கொடுக்கப்படக்கூடிய தொகையை எடுத்துக் கொண்டால் மாணவன் ஒருவனுக்கு ரூ. 15 என்று கொடுக்கிறார்கள். 10—15 வருஷத்துக்கு முன்பே இந்தத் தொகையைத் தான் கொடுத்து வந்தார்கள். இப்போது விலைவாசிகள் ஏராளமாக ஏறி யிருக்கிறது. இந்த நிலையிலேகூட ரூ. 15 கொடுப்பது என்பது மிகமிகக் கட்டு படியாகாததாக இருக்கிறது. ஆகவே இதைக் குறைந்தது ரூ. 20 ஆகவாவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முறை யிலே மலை கிராமங்களில் நடத்தப்பட்டுவரக் கூடிய மாணவ மாணவிகள் விடுதிகளுக்கு 20 சதவிகிதமாவது அதிகப்படியாகக் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கீழ்ப்பழனிமலைப் பகுதிகளிலே பளியர், புலையர் என்று இரு வகுப்பைச் சேர்ந்த ஆதிவாசிகள் குடியிருக்கின்றனர். அவர்களுக்குப் பல நல்ல காரியங்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. கடந்த 10 ஆண்டுக் காலத்திலே அங்கு வியக்கத்தக்க பல காரியங்கள் நடந் திருக்கின்றது. பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பாக இந்தச் சமூகத்திலே ஓரிரு படித்தவர்களைக்கூட பார்க்க முடியாத ஒரு நிலைமை இருந்தது. ஆனால், இன்று அந்தச் சமூகத்திலே இருந்து நூற்றுக் கணக்கான மாணவ, மாணவிகள் ஆரம்பப் பள்ளிகளிலே படித்து வருகின் றார்கள். ஐம்பது, அறுபது பேர்கள் உயர்நிலைப் பள்ளிகளிலே படித்து 11-00 a.m

வரும் காட்சியையும் நாம் காண்கின்றோம். கீழ்நாட்டிலே எந்த முறையிலே பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த மாணவர்களிலே 15 சதவிகிதம், முற்போக்கு வகுப்பைச் சேர்ந்தவர்களிலே 10 சத விகிதமும் எப்படிச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்களோ, அதே முறையிலே இந்த ஆதிவாசிகள் ஆஸ்டலிலும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆதிவாசிகளுக்கு இப்போது வாங்கிக் கொடுக்கக்கூடிய மாடுகள், அவர்களுக்கு எந்த வகையிலும் பிரயோஜனப்படுவதில்லை. ஆகவே அங்குள்ளவர்களுக்குக் குதிரைகள் வாங்கிக் கொடுத்தால், சாமான்களை ஏற்றிக்கொண்டு போவதற்கு வசதியாக இருக்கும். அந்தப் பிரதேசத்திலே உள்ளவர்கள் சாமான்களைக் கொண்டு வருவதற்கு, இப்படிக் குதிரைகளைத்தான் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். ஆகவே, அவர்களுக்கு மாடுகளுக்குப் பதிலாகக் குதிரைகள் உடனடியாக வாங்கிக் கொடுத்தால், அது மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, அதையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த பாரஸ்ட் மைனர் பிராடியூசைப்பற்றிச் சொல்லும்போது எங்கள் பகுதியிலே இதைச் சில்லரை மகசூல் என்று சொல்வார்கள். கடுக்காய் போன்றவைகள் காட்டிலே தானாகவே விளையக்கூடிய பொருள்கள். இவைகளை இப்போது ஏலத்தில் விட்டுக் கொண்டு வருகின்றார்கள். இந்த மாதிரி காண்ட்ராக்ட் விடும்போது, இங்கு செயல்பட்டுக் கொண்டு வரும் ஆதிவாசிகள் சங்கங்களுக்குக் கடந்த சில ஆண்டுகளிலே போன சராசரி தொகையைக் கணக்கிட்டு, ஏலமின்றி இந்த மாதிரியான சங்கங்களுக்குக் குத்தகை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு இப்போது தனியாக நாம் காலனிகள் கட்டிக் கொடுக்கப் போவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டு இருந்தாலும், இப்போது இருக்கக்கூடிய சேரிகளிலே எல்லோருக்கும் பயன்படக்கூடிய ஒரு முறையிலே சாக்கடை வசதி போன்ற சில வசதிகளைச் செய்து கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ரெ. தங்கவேலு :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மானியத்தை ஆதரிக்கின்ற வகையிலே ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகின்றேன். தமிழ்நாடு சர்க்கார் அரிஜன மக்களின் முன்னேற்றத்திற்காகப் பெரும் பணியாற்றி வருகின்றது என்பதை நாம் அறிவோம். இந்த நாடும் அறியும். அதற்காக அரிஜன மக்கள் என்றென்றும் தமிழ்நாடு சர்க்காருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

குடியிருப்பு மனைக்கட்டு விஷயத்தில் நம்முடைய சர்க்கார் இப்போது மூன்று செண்டு நிலங்களைத்தான் அவர்களுக்கு ஆர்ஜிதம் செய்து கொடுக்கின்றது. இது உள்ளபடியே பற்றாக் குறையாக இருக்கின்றது. ஆகவே, இந்த மூன்று செண்டு நிலத்திற்குப் பதிலாக ஐந்து செண்டு நிலம் கொடுக்கக்கூடிய வகையிலே இதை மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தாற்போல், கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலே அரிஜன மக்களுக்காக நம்முடைய சர்க்கார் நல்ல பணி செய்திருக்கின்றார்கள். இதில் கல்வர்ட் கட்டுவது, அரிஜனங்களின் முன்னேற்றத்திற்காகப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவது போன்றவைகள் மிகவும் முக்கியமானது. ஆனால் சமீபத்திலே நம்முடைய சர்க்கார் அதாவது ஏப்ரல் மாதத்திலே எம்.எஸ். 1000 என்று ஒரு ஜீ.ஒ. போட்டார்கள். அதன்படி அரிஜனங்களுக்கு இந்த கல்வர்ட் கட்ட வேண்டுமென்று சொன்னால், அதற்காக இந்த அரிஜன இலாகாவிலே கொடுக்கப்பட்டு வந்த 40 சதவிகிதம் மானியம் கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்து யூனியனைச் சென்று கேட்டதில், அரிஜன வெல்பேர்

24th July 1962] [திரு, ரெ. தங்கவேலு]

இலாகா கொடுக்கும் இந்த 40 சதவிகிதம் மானியத்தை நிறுத்திவிட்டார்கள் என்று கூறினார்கள். ஜில்லா வெல்பேர் ஆபீசரைப் போய் கேட்டால்; இந்த ஜீ.ஓ. எம்.எஸ். 1000 வந்திருக்கிறதே, அதைப் பாருங்கள் என்று கூறுகிறார்கள். எனவே, இந்த ஜீ.ஓ. எம்.எஸ். 1000-ஐ உடனடியாக ரத்து செய்து, சர்க்கார் அரிஜன இலாகாவிலே இருந்து கொடுத்த இந்த 40 சதவிகிதம் மானியத்தைக் கொடுப்பதற்கான வழிவகையைச் செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, சீப் செகரடரி, அடிஷனல் டெவலப்மெண்ட் கமிஷனர், டைரக்டர் ஆப் அரிஜன் வெல்பேர் ஆகியோரும் இதுபற்றி கலந்து பேசி, ஆவன செய்ய வேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அரிஜன மாணவர்களை ஆஸ்டல்களில் சேர்த்து வந்தோம். அவர்கள் மூன்று படிவங்களில் ஒருமுறை தவறி இருந்தாலும்கூட, இந்த ஆஸ்டல்களிலே நாம் சேர்த்து வந்தோம். அதற்கான விதி அப்போது இருந்தது. ஆனால், சமீபத்தில் ஒரு ஜீ.ஓ. போட்டிருக்கிறார்கள். இந்த மூன்று படிவங்களுக்குள் ஒருமுறை பெயிலாகி விட்டாலும்கூட, அவர்களை ஆஸ்டலில் சேர்த்துக்கொள்வதற்கு வசதி செய்யப்படவில்லை. இப்படி இருப்பதால், அந்தச் சட்டத்தின்படி அந்த ஜீ.ஓ.-வில் ' டீ-மாரலைசிங் எப்பக்ட் ' உருவாகின்றது என்று சொல்லப்பட்டிருக்கிறது . . .

கனம் திரு. பூ. கக்கன் : இந்த மாதிரி சட்டம் அரசாங்கத்திலே இல்லை. நாங்கள் அம்மாதிரி ஜீ.ஓ. போடவில்லை. மொத்தமாக, இப்படிப் பெயிலாகி இருந்தால் அவர்களைச் சேர்க்கலாமா, அது பயன்தருமா என்பதாகக் கவனிக்க வேண்டும் என்றுதான் சொல்லியிருந்தோம். இடம் கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. அப்படி ஒரு ஜீ.ஓ.-வும் போட்டு அனுப்பவில்லை.

திரு. ரெ. தங்கவேலு: நான் ஆஸ்டல் கமிட்டி மெம்பராக இருக்கின்றேன். இம்மாதிரி ஒரு ஜீ.ஓ. போட்டிருக்கிறார்கள். கலெக்டர் அவர்கள் இப்படி ஒரு ஜீ.ஓ. இருப்பதாகப் படித்துக் காட்டினார்கள். அந்த ஜீ.ஓ.—விலே "டீ—மாரலைசிங் எ.·.பெக்ட்" ஏற்படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. இப்படி மூன்று படிவங்களில் ஒரு முறை பெயிலானால் சேர்த்துக் கொள்ள முடியாது என்றிருக்கிறது என்ற காரணத்திற்காகச் சொன்னேனே தவிர, இப்படிப் பரீட்சையிலே பெயிலாகின்றவர்களுக்கு நான் பரிந்து பேசுவதற்காக வரவில்லை. இதிலே ' டிசர்விங் ' கேஸ்கள் இருந்தால், அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அதிலே ஒரு ' ஆல்டரேஷன் ' அல்லது ' அமெண்டுமெண்ட் ' செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, இந்த அரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்களாக மாறி விடுவதால், அரிஜன இந்துக்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் அவர்கள் ' கன்வர்ட் ' ஆகிவிட்ட பிறகு கொடுப்பதில்லை. ஆகவே, இப்படி ' கன்வர்ட் '-டான அரிஜன கிறிஸ்தவர்களுக்கும் சலுகைகள் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோன்று இன்றைக்கு சர்க்கார் மிகத் தீவிரமாக அரிஜன முன்னேற்ற வேலைகளிலே ஈடுபட்டு பணியாற்றிக் கொண்டு வருகின்றார்கள். இதே நேரத்தில் ஒரு தாலூகாவில் அசைன்மெண்டோ, அக்விசிஷனோ அல்லது சப்–டிவிஷனோ செய்ய வேண்டுமானால், அதிலே மிகவும் கால தாமதம் ஏற்படுகின்றது. ஆகவே, அதற்காக ஒரு தாலூகாவுக்கு ஒரு ஸ்பெஷல் தாசில்தாரை நியமித்து, ஆக்க வேலைகள் நல்ல முறையிலே நடைபெறுவதற்கு வழிவகைகள் செய்யவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பப்ளிக் சர்வீஸ் கமிஷனை எடுத்துக் கொண்டால், அரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ' டோடல் எக்செம்ப்ஷன் ஆப் ஏஜ் ' கொடுக்கின்றது. ஆனால், பாலிடெக்னிக் போன்ற டெக்னிகல் பள்ளிகளிலே சேர்க்க வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய வயதிலே 2, 3 வருஷத்

திற்குத் தான் எக்செம்ப்ஷன் கொடுக்கின்றார்கள். ஆகவே, இதற்கும் 'டோடல் எக்செம்ப்ஷன் ஆப் ஏஜ்' கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இப்பொது ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதிலே மிகவும் கால தாமதம் ஏற்படுகின்றது. ஆகவே, இந்த ஸ்காலர்ஷிப்புகள் உடனடியாகச் சீக்கிரம் காலாகாலத்தில் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். கடைசியாக, சென்ற மாதம் லோக் சபையில் அகில இந்திய டிப்ரஸ்ட் அண்டு பாக்வோர்ட் கிளாஸ் கமிஷன் செகரடரி அவர்கள் ஒரு சிபார்சை லோக் சபையில் வைத்திருக்கிறார். அந்தச் சிபார்சுகளை எல்லாம் நம்முடைய சர்க்கார் கவனித்து, அதிலே கண்டுள்ள சில நல்ல கொள்கைகளை நம்முடைய மாகாணத்திலே நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எல். ஆனந்தன் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேசுவதற்கு நான் முன் வந்திருக்கின்றேன். கள்ளக்குறிச்சி தாலூகாவில் 150,000 அரிஜனங்கள் வசிக்கின்றார்கள். அப்படி இருந்தும் மேற்படி தாலூகாவில் 60 மாணவர்களுக்கு ஒரு விடுதியும், 25 மாணவிகளுக்கு ஒரு விடுதியும் தான் இப்போது இருக்கின்றது. ஆகவே, மேற்படி தாலூகாவில் குறைந்த பட்சம் 100 மாணவர்களுக்கும் 100 மாணவிகளுக்கும் ஆஸ்டல் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்வதோடு, சின்னச்சேலம், சங்கராபுரம், ரிஷிவந்தியம், அரியலூர், தியாகதுருகம் போன்ற உயர்நிலைப் பள்ளிகள் இருக்கும் இடங்களிலேயும், ஆஸ்டல் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மேற்படி தாலூகாவில் அரிஜனங்கள் குடியிருக்கும் இடம் ரொம்பவும் நெருக்கடியாகவும், பாதை வசதி இல்லாமலும் இருக்கின்றது. அங்கு வீட்டு வசதி வேண்டுமென்று சர்க்காருக்கு விண்ணப்பித்த போதிலும், சுமார் 10, 15 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அது சரியான முறையிலே கவனிக்கப்படவில்லை. உதாரணமாக, கச்சராபாளையம், கள்ளக்குறிச்சி, எடுத்துவாய்நத்தம், தென்கீரனூர், வடதொரசலூர், கடுவானூர், சீர்பூநந்தல் போன்ற பகுதிகளிலே இது சரியான முறையிலே செய்யப்படவில்லை. ஏன் சொல்கிறேன் என்றால் 1952-ம் ஆண்டில் இந்தக் கிராமங்களுக்கு இம்மாதிரி வசதிகள் செய்து தரவேண்டும் என்று விண்ணப்பித்திருந்தும், 1962 வரையில் ஒன்றும் கவனிக்கப்படவில்லை. ஆகையால், சர்க்கார் இதைக் கவனித்து உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கள்ளக்குறிச்சி தாலூகாவில் கல்விராயன் மலையில் ஜடையக்கவுண்டன் ஜாகீர், அரியகவுண்டன் ஜாகீர், குரும்பக்கவுண்டன் ஜாகீர் ஆகிய மூன்று ஜாகீர்கள் இருக்கின்றன. அந்த மூன்று ஜாகீர்களிலும் கல்வி வசதியே கிடையாது. அப்படியிருக்கும் காலத்தில் 1956-ல் எங்கள் ஜில்லா கலெக்டர் ஹென்ரீ பீட்டர் அவர்களை மேற்படி மலைப் பிராந்தியங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு ஒரு மகாநாடு நடத்தி அங்குள்ள மக்களின் குறைகளை அப்பொழுது தெரியப்படுத்தினோம். அதன்பேரில் சுமார் 17 பள்ளிக்கூடங்கள் அங்கே திறக்கப்பட்டன. மேற்படி 17 பள்ளிக்கூடங்களையும் ஒரு வருஷத்திற்குக் கூட சரியான முறையில் நடத்த முடியவில்லை. காரணம் ஆசிரியர்கள் சென்று பணிபுரிய அங்கு சரியான வசதிகள் இல்லாததுதான்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

ஆகவே, அந்த மலையடிவாரத்தில் இருக்கும் பரிகம், பாலப்பட்டு போன்ற கிராமங்களில் உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்படுவதோடு, ஆங்காங்கு மலை ஜாதியினர்களுக்கு ஹாஸ்டல்களும் திறக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

24th July 1962] [திரு. எல். ஆனந்தன்]

அதோடு மட்டுமல்லாமல் இந்த மலை ஜாதியினர்களைப் பிற்பட்ட இனத் தவர்களோடு சேர்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அதுமாத்தரமல்ல. ஹரிஜனங்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு முன்பு ரூ. 1,000 அளிக்கப்பட்டது. இப்பொழுது அது ரூ. 150 ஆக மாற்றப்பட்டிருக்கிறது. இது அங்குள்ள ஹரிஜனங்களுக்குப் போதாது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அதை ரூ. 250 ஆக மாற்றி, அங்குள்ள ஏழை உறரிஜனங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. சி. ம. அம்பிகாபதி : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகள்சொல்ல ஆசைப்படுகிறேன். கடந்த 10 ஆண்டு காலமாக ஹரிஜன நல இலாகா தமிழகத்தில் ஹரி ஜன மக்களுடைய முன்னேற்றத்தில் மிக கவனமும் அக்கறையும் கொண்டு நல்ல முறையில் பணி புரிந்து வந்திருக்கிறது, ஹரிஜனங்களிடத்திலே நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதற்காக கனம் அமைச்சர் அவர்களையும், அந்த இலாகா டைரக்டர் அவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் இருக்கும் முன்னேற்றத்தையும் எங்கள் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய முன்னேற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தஞ்சை மாவட்டத் திலுள்ள ஹரிஜனங்களுடைய முன்னேற்றம் அவ்வளவாக இல்லை என்று தான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. அந்தப் பகுதியில் நீண்டகாலமாக படிக்காதவர்கள், மிகவும் ஏழைகள், விவசாயிகள், கட்டுப்பட்டு அடிமை வேலை செய்தவர்கள். அவர்கள் எல்லோரும் கம்யூனிஸ்டு கிஸான் விவ சாயச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் காரணத்தினால், நமது சர்க்கார் செய்துவரும் சாதனைகளைக் கண்டு அரசாங்கத்திற்கு ஆதரவாக காங்கிரசுக்கு வந்துவிட்டார்கள் என்று ஒரு சிலரை அவர்கள்அடிப்பது, ஜாதிக் கட்டுப்பாடு செய்வது, நீர், நெருப்பு கொடுக்காத அளவுக்குக் கட்டுப்பாடு, பெண் கொடு பது, எடுப்பதில் கட்டுப்பாடு என்ற முறையில் இந்த விதத்தில் தொல்லைகள் கொடுத்து, அவர்கள் பலவிதமான இன்னல்களை அனுபவித்து வருகிறார் கள். இதை அங்குள்ள அதிகாரிகள் நன்றாக உணர்வார்கள். இது சம்பந்தமாக கனம் அமைச்சர் அவர்களுக்கு அதிகப்படியான மனுக்களும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கல்வித் துறையிலே ஹரிஜனங்களுக்கு அதிகப்படியான முன்னேற்றத்தைக் காண்பிக்கும் நமது தமிழகச் சர்க்கார், மெடிகல் காலே ஜில் படிக்கும் ஹரிஜன மாணவர்கள் ஹாஸ்டலில் தங்கியிருந் தால், மாதா மாதம் அவர்களுக்கு டைரக்டரிடமிருந்து ரெகமெண்டே ஷன் அனுப்பத் தவறிவிட்டால், ஹாஸ்டலிலிருந்து அந்த மாணவர்களை வெளியே அனுப்பி மீண்டும் அடுத்த மாதத்திற்கு ரெகமெண்டேஷன் வாங்கிக் கொடுக்குமாறு கேட்கிறார்கள். நேற்று முன்தினம் சில மாண வர்கள் இதை என்னிடம் குறிப்பிட்டார்கள். முதல் மாதத்தில் டைரக்டர் ரெகமெண்டேஷன் அனுப்பிவிட்டால், இறுதியாக ஒரு வருஷம் வரையில் அதை 'கன்பர்ம்' செய்து அப்படியே நீடிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஹரிஜனங்களுக்கு வீட்டுமனை வழங்குவது போன்ற பிரச்னைகளில் கவனம் செலுத்துவதில் அதிகாரிகள் மிகவும் காலதாமதம் செய்துவருகி றார்கள் என்ற குற்றச்சாட்டை எனக்கு முன்பு பேசிய கனம் உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்த நேரத்தில் அதிகாரிகளுடைய நிலையையும் நாம் கவனிக்க வேண்டும். நான்கு தாலுகாக்களுக்கு ஒரு ஸ்பெஷல் தாசில்தார், ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு ஸ்பெஷல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆகியோர்களைப் போட்டு வேலை செய்ய சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த நான்கு தாலுகாக்களிலும் ஏறத்தாழ ஒரு மாதத்திற்குக் குறைந்தது 200 மனுக்களாவது வந்துகொண்டிருக்கின்றன. அத்தனையும் அவர்கள்

பரிசீலனை செய்து ' அவார்டு ' பாஸ் பண்ண வேண்டும். கிராம அதிகாரிகள் கர்ணம், மணியக்காரர்கள் போன்றவர்கள் தகுந்த நேரத்தில் இந்த உத்தியோகஸ்தர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை. இதற்குக் காரணம் இந்த அதிகாரிகளுக்கு கிராம அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க எந்த அதிகாரமும் கிடையாது. கிராம அதிகாரிகள் தாலூகா ஆபீஸிலிருந்து தாசில்தார் கொடுக்கும் ஆணைகளை நிறைவேற்றுவதிலும், அவர்கள் அனுப்பும் சர்குலர், அறிக்கை முதலியவைகளுக்குத் தகுந்தாற்போல் வேலை செய்வதிலும் தான் ஈடுபடுகிறார்களே தவிர, ஸ்பெஷல் ஹரிஜன வெல்பார் தாசில்தாருக்கும், ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கும் அவர்கள் தக்க நேரத்தில் ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை. "டோபோ ஸ்கெட்ச்" முதலியவைகள் கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதினால், அவர்கள் மாதத்திற்கு 4, 5 அவார்டுகள் தான் கொடுக்கும்படியான நிலைமை ஏற்படுகிறது. அவர்கள் அவார்டு பாஸ் செய்து, அது கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்படுகிறது. பிறகு அங்கிருந்து வருவதற்கு 7, 8 மாதங்கள் ஆகிறது. உதயமார்த்தாண்டபுரம் என்ற கிராமத்தில் ஹரிஜனங்களுக்கு நிலம் ஜாரி செய்யவேண்டும் என்று எட்டு மாதங்களுக்கு முன்பு அவார்டு பாஸ் செய்து அனுப்பியும், அது இங்கே ' பெண்டிங்காக ' இருப்பதாக அங்கிருக்கும் தாசில்தார் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இதைத் துரிதமாகச் செய்யவேண்டும். தாசில்தாருக்கு ஜீப் வசதி இருந்தால் மிகவும் நலமாக இருக்கும். போய்வருவதற்கு வசதி இல்லாத காரணத்தினால், சில பகுதிகளில் பஸ் போக முடியாத காரணத்தினால் கிராமப் பகுதிகளுக்கு மாட்டுவண்டி வைத்துக்கொண்டு போக வேண்டியிருக்கிறது. மாட்டு வண்டியில் போய்வருவதென்றால் ஒரு கிராமத்திற்குப் போய்வருவதற்கு ஒரு நாள் ஆகிறது. இதையெல்லாம் துரிதமாகச் செய்யவேண்டுமென்றால், தாசில்தாருக்கு ஜீப் வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராம அதிகாரிகளை அவர்களோடு ஒத்துழைக்கும்படி செய்வதற்கு, இந்த அதிகாரிகளுக்கு சில அதிகாரங்களை வழங்கினால் நன்றாக இருக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

கனம் உதவி சபாநாயகர் : இந்த விவாதத்தில் அதிகமான அங்கத்தினர்கள் பங்குகொள்ளவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஒரு அங்கத்தினர் சொன்னதையே மீண்டும் திருப்பிச் சொல்லாமல், சுருக்கமாக விஷயங்களை எடுத்துச் சொன்னால், எல்லா அங்கத்தினர்களும் விவாதத்தில் பங்கு எடுத்துக் கொள்ள முடியும். ஆகையால் 5 நிமிஷங்களுக்குள் ஒவ்வொரு அங்கத்தினரும் தன் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை அனுசரித்து சில வார்த்தைகள் கூறுகிறேன். நம்முடைய தேசத்தில் தீண்டாமை ஒழிய வேண்டும் என்ற நல்ல கொள்கையைக் கொண்டு வந்தார் மகாத்மா காந்திஜி அவர்கள். அதைப் பின்பற்றி நம்முடைய அரசாங்கம் அநேக சட்டங்களை வகுத்திருக்கிறார்கள். முக்கியமாக மக்களிடையே மனமாற்றம் இருந்தால் தான் தீண்டாமை ஒழியும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்காகத் தான் நமது நாட்டில் துணை சேவகர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, இந்த நிலையை மக்களிடையே சொல்லி, தீண்டாமையை ஒழிப்பதற்கு நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். உதாரணமாக, மக்களிடையே இந்த உணர்ச்சி ஏற்படுவதற்காக பல நாடகங்களைக் காண்பித்தும் பல படங்களைக் காட்டியும், இன்னும் அநேக துறைகளில் நல்ல முறையில் பொது பஜனைகள் செய்தும் வருகிறார்கள். எல்லோருக்கும் ஒன்றாகச் சேர்த்து விருந்து வைப்பது ரொம்பவும் முக்கியம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் தீண்டாமை ஒழிப்பு நல்ல முறையில் முயற்சி செய்து வருகிறார்கள். இது விஷயத்தில் ஒரு கிராமத்திற்கும், இன்னொரு கிராமத்திற்கும் போட்டியை உண்டாக்கி, அதிலே திறமை படைத்த கிராமத்திற்குப் பரிசு கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளுகிறேன், அதே

24th July 1962] [திரு. கி. நாராயணசாமி பிள்ளை]

போல ஹரிஜனக் காலனிகளை சுத்தமாக வைத்திருப்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட வேண்டும். அப்பொழுது அவர்கள் சுகாதார முறைப்படி தங்களுடைய வீடுகளை வைத்திருப்பார்கள். இதே போன்று தீண்டாமை ஒழிப்பிற்குத் தனியார் துறையிலே கூட ஹரிஜன சேவா சங்கம், இன்னும் "ஷெட்யூல்டு காஸ்டு பெடரேஷன்" என்றெல்லாம் ஆரம்பித்திருக்கிறார்கள். அவைகளை நான் வரவேற்கிறேன்.

என்னயிருந்தாலும், கல்வித் துறையிலே ஹரிஜன மக்கள் முன்னேறினால்தான், மற்ற மக்களோடு சமமாக வாழ முடியும் என்ற ஒரு நம்பிக்கையில் அரசாங்கம் கல்வித் துறையிலே கோடிக்கணக்கான ரூபாய் செலவுசெய்து ஹரிஜனங்களுக்கு இலவசமாகப் படிப்பு கற்றுக்கொடுப்பதோடு உயர்ந்த படிப்புக்கும் உபகாரச் சம்பளம் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு மதிய உணவும் கொடுக்கிறார்கள். ஹரிஜன மாணவர்களுக்கும் உடை கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன். கல்லூரிகளில் அவர்களுக்கென்று இடம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன மக்கள் முன்னேறுவதற்கு விவசாயத் துறையை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்தக் கூடிய வகையில் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் மாடு வாங்குவதற்கும், விதை வாங்குவதற்கும், உழவுக் கருவிகள் வாங்குவதற்கும் நபர் ஒன்றுக்கு ரூ. 400 கடன் கொடுத்து வருகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதேபோல ஹரிஜன மக்கள் விவசாயம் செய்யப் பாசன வசதிக்காக கிணறு வெட்டுவதற்கு ரூ. 1,000 கடன் கொடுக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். மேலும், பாய் முடைவதற்கும், மர வேலை செய்வதற்கும், இன்னும் செங்கல் தயாரிப்பதற்கும் பல கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். அவற்றை நான் வரவேற்கிறேன். ஹரிஜனங்களுக்குப் பல தொழில்களிலே பயிற்சி அளிப்பதற்குச் சில பயிற்சி சாலைகளையும் சர்க்கார் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அவர்கள் குடிசைத்தொழில்களிலே ஈடுபடுவதற்குத் தனியாக மானியம் ஒதுக்கி, வேண்டிய உதவிகளைச் செயய்வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அவர்கள் வசிக்கும் காலனிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தென்னாற்காடு ஜில்லாவிலே கம்மாவரத்தில் நரிக்குற மங்கலம் என்ற ஒரு காலனியை ஏற்படுத்தி, அங்கே நரிக்குறவர்கள் வசிப்பதற்குப் பல வசதிகளையும் சர்க்கார் ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுடைய பிள்ளைகள் கல்வி பயில ஒரு பள்ளிக்கூடத்தையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். மேலும் அவர்கள் விவசாயம் செய்வதற்காக நிலங்களை ஒதுக்கி, ஆர்டீஷியன் கிணறுகளை அமைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார்கள். அதேபோன்று ஹரிஜனங்கள், பின் தங்கியவர்கள், இவர்களின் முன்னேற்றத்திற்காக பால் வாங்கும் சங்கங்களை ஏற்படுத்தி, மாடுகள் வாங்குவதற்காக அவர்களுக்குச் சர்க்கார் கடன் வசதி அளித்து வருகிறார்கள். இந்த முயற்சிகளையெல்லாம் நான் பாராட்டுகிறேன். ஹரிஜனங்களுக்காகப் போடப்படும் திட்டங்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால், ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டு ஹரிஜன வெல்பேர் ஆபீசர்களையும் ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு ஹரிஜன வெல்பேர் தாசில்தாரையும், பிர்க்காக்களுக்கு ஒரு ஹரிஜன வெல்பேர் ரெவின்யூ இன்ஸ்பெக்டரையும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு இங்கே பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்த கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*** திரு. அ. ராகவ ரெட்டி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாகாணத்திலே சென்ற 15 ஆண்டுகள் காலமாக ஹரிஜன மக்களுக்கும், பிற்பட்டவர்களுக்கும் நமது சர்க்கார் பல சலுகைகளை அளித்து வருகிறார்கள். இப்பொழுதும் அளித்துக் கொண்டுதான் வருகிறார்கள். ஆனால் எவ்வளவோ செய்தும், அவர்களின் குறைகள் ஆயிரக்

கணக்கில் இருப்பதால், இந்த உதவி எல்லாம் ஏதோ ஒரு மூலேக்குப் போவதுபோல் அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லே. குறிப்பாக, கிராமங்களிலே உள்ள ஹரிஜன காலனிகளுக்குச் செல்லும்பொழுது, இன்னும் பல இடங்களிலே தண்ணீர் வசதிசெய்து கொடுக்கப்படவில்லேயென்று சொல்லுகிறார்கள். இதை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன். கல்வி, மற்றும் இதர சௌகர்யங்களே அவர்களுக்குச் செய்வதற்கு முன்னுல் ஒரு குடும்பத்துக்கு 5 செண்ட் நிலமாவது கொடுத்து, வீட்டு வசதியையும் குடிதண்ணீர் வசதியையும் செய்து கொடுத்து பிறகு மற்ற சலுகைகளேக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களேக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்காக ஒரு தனித் திட்டம் போட்டு எந்தெந்த கிராமங்களிலே அந்த குறைகள் இருக்கின்றன என்று பார்த்துச் செய்ய வேண்டும். உதாரணமாக, நான் வசிக்கும் பாலவாக்கம் கிராமத்திலே ஹரிஜன மக்கள் வீட்டு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதைப் பற்றி சென்ற 4 வருடங்களாகச் சொல்லியும், இப்பொழுது அந்த விஷயம் செங்கற்பட்டு ஜில்லாக் கலெக்டர் ஆபீசிலே பெண்டிங்காக இருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். நான் எம்.எல்.ஏ. ஆன பிறகு ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் இதைப் பற்றிச் சொன்னேன். உடனடியாகக் கவனிப்பதாகச் சொன்னுர்கள். இது வரையிலும் ஒன்றும் செய்யப்படவில்லே. கூடிய சீக்கிரத்தில் அங்கேயுள்ள ஹரிஜன மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பள்ளிகளிலே படிக்கும் மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் வசிக்கும் இடம் 5 மைல்களுக்கு அப்பால் இருந்தால்தான் இந்த வசதி கொடுக்கப்படுகிறது என்று கேள்விப்படுகிறேன். அப்படி இல்லாமல் உண்மையாகவே கஷ்டப்படுகிற மாணவர்களுக்கு, 5 மைல்களுக்கு உட்பட்டு இருந்தாலும்கூட, இந்த வசதியை அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறைந்த நேரமே ஒதுக்கப்பட்டிருப்பதால், இத்துடன் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

கனம் உதவி சபாநாயகர் : இம்மாதிரி எல்லா அங்கத்தினர்களும் நடந்து கொண்டால் நன்றாக இருக்கும்.

*** திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன நலத்துறை மானியத்தை முழுமனதுடன் வரவேற்கிறேன். மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்கள் இதுவரையிலும் எந்த அங்கத்தினரும் பேசாத புதிய விஷயத்தைப் பற்றிப் பேசச்சொன்னார்கள். அந்த வகையிலே இங்கே பேசப்படாத ஒரு சில விஷயங்களேப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜன மக்கள் சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், உத்யோகத் துறையிலும் முன்னேற்றமடைய வேண்டுமென்று நமது தலேவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சேவையானது இப்பொழுது தான் பலன் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. இன்னும் ஹரிஜனங்களுக்கு அதிகமான சலுகைகளேக் கொடுக்க வேண்டிய நிலேமை இருக்கிறது. கல்வித்துறையை எடுத்துக் கொண்டால் இன்று ஹரிஜன மாணவர்களுக்கு பல வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இருந்தாலும்கூட அவர்கள் முன்னுக்கு வருவதிலே பல கஷ்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. குறிப்பாக உயர்நிலேப் பள்ளியிலே படிக்கும் மாணவர்களுக்குச் சம்பளச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் ஸ்பெஷல் பீஸ் என்று வைத்து மாணவர்களிடம் இருந்து வசூலிக்கிறார்கள். அதைக் கட்டுவதற்குக் கூட அவர்களிடத்தில் பணம் இல்லே. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் இத்தகைய நிலே இருக்கிறது. இரண்டு மூன்று பெற்றோர்கள் என்னே அணுகினார்கள்.

24th July 1962] [திரு ஏ. ஆறுமுகம்]

என்ஞல் அதிகமாகப் பணம் கொடுக்க முடியாத நிலையிலே, ஒவ்வொரு வருக்கும் ஒரு ரூபாய் கொடுத்து, " நீங்கள் விறகு வெட்டியாவது உங்களு டைய குழந்தைகளைப்படிக்க வையுங்கள் " என்று சொல்லி அனுப்பினேன். மேலும் ஹரிஜன மாணவர்கள் புத்தகம் வாங்குவதற்கும் பணம் இல்லாமல் கஷ்டப்படுகிருர்கள். ஏதோ ஓரளவுக்கு முன்னேற்றமடைந்திருந் தாலும், ஒரு சில கஷ்டங்களும் அவர்களுக்கு இருக்கின்றன. நமது சர்க்கார் எவ்வளவோ கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்கிருர் கள். ஹரிஜன மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்குவதற்கும் ஸ்பெஷல் பீஸ் கட்டுவதற்கும் உதவி செய்தால் அதனல் நஷ்டம் வந்து விடாது. இப்பொழுதுதான் நமது நாட்டிலே அதிகமான ஏழை மக்கள் படிப்பதற்கு வந்திருக்கிருர்கள். அப்படிப்படிக்கும்பொழுது, 1-வது பாரத்திலிருந்து 3-வது பாரம் வரையினும், அல்லது 4-வது பாரத்திலிருந்து எஸ்.எஸ்.எல்.ஸி. வரையிலும் இரண்டு தடவைகள் தவறிவிட்டால், ஹாஸ்டலில் இருந்து கொண்டே படிக்கும் நிலைமை மாறி, ஹாஸ்டலை விட்டுப் போக வேண்டு மென்று ஒரு புது உத்தரவு போட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆனல் கனம் அமைச்சர் அவர்கள் அம்மாதிரி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை யென்று சொல்லுகிருர்கள். சமீபத்திலே திருவண்ணமலை டெபுடி கலெக் டர் அவர்களே என்னிடத்தில் இம்மாதிரி தவறிய மாணவர்களுக்கு ஹாஸ்டலிலே இடம் கிடையாது என்று சொன்ஞர்கள். இதைத் திட்டவட்ட மாக விளக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கல்லூரிகளில் படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. நான் படிக்கும் பொழுது கஷ்டப்பட்டு வாங்க வேண்டிய நிலைமை இருந்தது. ஆனல் இப்பொழுது படிக்கும் மாணவர் கள் புண்ணியம் செய்தவர்கள். 3 மாதத்தில் உபகாரச் சம்பளம் வந்து விடுகிறது. அதற்குச் சர்க்காரை நான் பாராட்டுகிறேன்.

நம்முடைய சர்க்கார் பல வதிகள் தற்போது செய்திருக்கிருர்கள். பப்ளிக் சர்விஸ் கமிஷன் ஆரம்பித்து கிட்டத்தட்ட 30 வருடங்கள் ஆகின்றன. ஹரிஜன மக்களிலே பலர் சிறந்த அட்மினிஸ்டிரேடர்களாகவும் சிறந்த அறிவாளிகளாகவும் இருக்கிருர்கள் என்பதை நான் சொல்லி இந்தச் சபை தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இன்று ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகள் பல இலாக்காகளிலே தலைவர்களாக இருந்து சிறந்த பணி புரிந்து வருகிருர்கள். அப்படி இருந்தும் இது வரையிலும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒருவரைக் கூட பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அங்கத்தினராகப் போடாமல் இருந்ததற்கு என்ன காரணமோ தெரியவில்லை.

கனம் உதவி சபாநாயகர் : யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனிலே திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் அங்கத்தினராக இருந்தார்.

திரு. ஏ. ஆறுமுகம் : ஆமாம், மதிப்பிற்குரிய சிவசண்முகம் பிள்ளை அவர்கள் அங்கே அங்கத்தினராக இருந்தார். அந்த இடமும் இப்பொழுது காலியாக இருப்பதாகத் தெரிகிறது. அந்த இடத்திலேயும் ஒரு ஹரிஜன வகுப்பு அங்கத்தினரைப் போடுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நம்முடைய சர்வீஸ் கமிஷனிலே உடனடியாக ஒரு ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவரைப் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கனம் அமைச்சர் அவர் களுக்கு நமது முதல் அமைச்சர் இடத்தில் நல்ல செல்வாக்கு இருக்கிறது. உடனடியாக இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 11-30 a.m.

கிராமங்களிலே பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் பல வேலைகள் செய்யப்படுகின்றன. ஆனல் தீண்டாமையை எடுத்துக் கொண்டால், ஹரி ஜனங்களுக்கும் ஜாதி ஹிந்துக்களுக்கும் இடையே அதிகமான முன்னேற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இன்னும் கொஞ்சம் வேற்றுமை இருந்து கொண்டேதான் இருக்கிறது. பஞ்சாயத்துத் நிர்வாகத்திலே ஹரிஜனங்களை மயக்கி பஞ்சாயத்துத் தலைவராக வந்து விட்டாலும் கூட,

ஹரிஜனங்களுக்காக ஏதாவது ஒரு காரியம் செய்யவேண்டுமென்று சொன்னால் தயக்கம் ஏற்படுகிறது. ரோடு வசதி, குடி தண்ணீர் வசதி, மின்சார வசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். எவ்வளவு பெரிய குடும்பத்தில் பிறந்த பஞ்சாயத்துத் தலைவராக இருந்தாலும், ஜாதி ஹிந்து என்ற காரணத்தினால், ஹரிஜனங்களுக்கு முதலிடம் கொடுப்பது கிடையாது. அது மட்டுமல்ல. ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுக்கிறோம் என்று சொல்வதால் பத்து அல்லது பதினைந்து வருடங்களாக இருக்கக் கூடிய இடங்களிலிருந்து ஹரிஜனங்களை வெளியேற்றுகிறார்கள். இதை உடனடியாகத் தடுக்க வேண்டும். ஹரிஜனங்களுக்கு முன்னேற்ற வேலை களைச் செய்து வருவதால் பல இடங்களில் அவர்கள் புறம்போக்கு நிலங் களில் இருந்தால் கூட அவர்களை வெளியேற்றுகிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களில்கூட அவர்களைக் காலி பண்ண வேண்டும் என்று சொல்லு கிறார்கள். ஆகவே, இந்த நிலைமை ஏற்படாமல் ஹரிஜனங்களை வெளி யேற்றுவதைத் தடுத்து அவர்களை வெளியேற்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதி மலையாளப் பகுதி என்று சொல்லுவார்கள். நாங்கள் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் மலை அதிகமாக இருப்பதால் அந்தப் பகுதிகளில் வாழ்கின்றவர்களை மலையாளிகள் என்று சொல்வதுமுண்டு (சிரிப்பு). நாங்கள் எல்லோரும் மலை மேல் வாழ்கிறோம். அதாவது ஜவ்வாது மலைக்குப் பக்கத்தில் நாங்கள் வாழ்ந்து வருவதால் எங்களை மலையாளிகள் என்றுதான் அழைப்பார்கள் அந்தப் பக்கங்களில். அப்படிப் பட்ட பழக்கம் அங்கு உண்டு. அங்குள்ள மலை வாசிகளுக்கு ரோடுகள் கிடையாது. அங்கு ரோடுகளைப் போடவேண்டும் என்று சொன்னால் அதற்கு பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் பாரஸ்ட் டிபார்ட்மெண்டிலும் ரோடுகள் போட்டுக் கொடுப்பதாகவே இல்லை. சுதந்திர சர்க்கார் வந்த பிறகாவது அங்குள்ள வர்களுக்கு ரோடுகள் போட்டுக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளு கிறேன். அப்படிப் போட்டுக் கொடுத்தால் தான் அங்கே உற்பத்தியாகக் கூடிய தானியங்களை அங்குள்ள மலைவாசிகள் கீழே கொண்டு வந்து விற்று தங்களுடைய வாழ்க்கையை நல்ல முறையில் முன்னேற்றமடையச் செய்து கொள்ள முடியும். ஆகவே, அந்த மலைபகுதி கிராமங்களை ஒன்று சேர்க்கக்கூடிய அளவில் ரோடுகளைப் போட்டுக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில் மலைப்பகுதிகளாகிய ஜவ்வாது மலைப் பகுதிகள் செங்கம் தாலுகா, போளூர் தாலுகா, திருப்பத்தூர் தாலுகா போன்ற பகுதிகளை ஒன்றாகச் சேர்த்து ஒரு தாலுகாவாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படித் தனியான தாலுகாவை அமைத் துக் கொடுத்தால் நல்ல முறையில் முன்னேற முடியும். அங்கு தானிப்பா டியில் லம்பாடி ஜாதியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கும் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் கனம் ஹரிஜன இலாகா அமைச்சர் அவர் களால் கொண்டுவரப்பட்டிருக்கிற ஹரிஜன மானியக் கோரிக்கையை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் ஹரிஜனங் களுடைய நிலைமையைப் பண்டைக் காலத்திலேயே அறிந்து அவர்களை முன் னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று அதற்காகத் தொகைகளை ஒதுக்கி அவர்களை முன்னேற்றமடையச் செய்து வருகிறார்கள். அவர்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்று கருதி அவர்களை முன்னேற்றமடையச் செய்தால் தான் நாம் சுதந்திர அடையலாம் என்ற கொள்கையில் இதை ஒரு முக்கியமான கொள்கையாக காந்திஜி அவர்கள் கொண்டு வந்து அந்த முறையில் ஹரிஜனங்களை முன்னேற்றமடையச் செய்ய வேண் டும் என்று திட்டம் வகுத்தார். அந்த முறையில் இன்றைய தினம்

24th July 1962] [திரு கா. நா. பழனிசாமி கவுண்டர்]

ஹரிஜனங்களும் மற்ற சமூகத்தைப் போல் சரிசமாக வாழவேண்டும் என்பதற்காக அதற்கு வேண்டிய தொகையையும் ஒதுக்கி அவர்கள் சார்பாகச் செலவு செய்தும் வருகிருர்கள். அந்த முறையில் அவர்களும் நல்ல முறையில் முன்னேற்றமடைந்து தான் வருகிருர்கள். அதற்காக கனம் ஹரிஜன இலாகா அமைச்சரையும் அந்த இலாகாவில் பணியாற்று கிற அதிகாரிகளையும் நான் பாராட்டுகிறேன். எனக்கு முன்னதாகப் பேசிய கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள் "கடந்த பன்னிரெண்டு ஆண்டுக் காலத்தில் ஹரிஜனங்கள் நல்ல முறையில் வளர்ச்சி பெற்றிருக்கிருர்கள்" என்று. அதைக் கண்டு பாராட்டுவதாகவும் சொன்னுர்கள். என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றுல், இந்த பன்னிரெண்டு ஆண்டுகளில் எந்த அளவுக்கு முன்னேற்ற மடைந்திருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு முன்னேற்றமடையவில்லை என்பதுதான். சர்க்கார் இலாகாவில் ஹரிஜனங்கள் முன்னேற்றம் அடைந்திருக்கிருர்கள் என்று சொன்னுல் சில உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தில் இருப்பதால் சில இடங்களில் முன்னேற்ற மடைந்திருக்கலாம். சில அங்கத்தினர்கள் சட்டசபைக்கு வந்திருப்பதால் முன்னேற்ற மடைந்திருக்கிருர்கள் என்று சொல்லலாமே தவிர, மற்றப்படி அவர்கள் கிராமங்களில் எந்த விதத்திலும் முன்னேற்றமடைந்த தாகத் தெரியவில்லை. சாதாரணமாக கிராமங்களில் பார்த்தால் அவர்கள் எந்த விதத்திலும் முன்னேற்றமடையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஹரிஜனங்களுக்கு இப்பொழுது எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்து கொண்டு தான் வருகிறோம். இருந்தாலும் அவர்களிடையே இன்னும் முன்னேற்றம் காணப்படவில்லை. ஆகவே அவர்கள் நல்ல வகையில் முன்னேற்றமடைவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு என்று மூன்று கோடி அறுபது ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக சொன்னுர். அப்படி ஒதுக்கியிருந்தும் அதை நல்ல முறையில், அவர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் செலவு செய்ய வேண்டும். அதில் முக்கியமானது அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்கு நிலம் கொடுப்பது. ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைக்கட்டுகள் வழங்குவது ஒரு முக்கியமான பிரச்னை. ஆகவே, இதற்கு சர்க்கார் முதலிடம் கொடுக்க வேண்டும். அத்துடன் மற்ற வசதிகளையும் அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்கள் முன்னேற்றமடைந்திருக்கிருர்கள் என்று சொன்னுல் சட்டசபை அங்கத்தினர்களாகவும் சில உத்தியோகஸ்தர்களாகவும் மட்டும் வந்தால் போதாது. கிராமங்களில் முன்னேற்றம் காண வேண்டும். பழைய காலத்தில் இருந்த நிலைமையிலேயே தான் இப்பொழுதும் கிராமங்களில் அவர்கள் இருக்கிருர்கள். கிராமப் பகுதிகளில் அவர்கள் முன்னேற முடியாமல் இருக்கிருர்கள். ஆகவே, பல விதத்திலும் அவர்களுக்குச் சலுகைகளைக் கொடுத்து அவர்களை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுக்குத் தொகை ஒதுக்கி செலவு செய்யும்போது, அதைப் பரவலான முறையில் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஹரிஜனங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கி எல்லா இடங்களிலும், நகரங்களிலும் அவர்களுக்கு இட வசதி செய்து கொடுக்க வேண்டும். வீடுகள் கட்டிக்கொள்வதற்கு தொகை உதவி செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றும் அவர்கள் மற்ற சமூகத்துடன் சரிசமமாக வாழ்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

ஹரிஜனங்களுக்கு நாம் எத்தனையோ சலுகைகளைச் செய்து வருகிறோம். அவைகள் அவர்களுக்கு தெரியாமலே இருக்கின்றன. கல்விச் சலுகை கொடுக்கிறோம். மற்றும் பலவகைகளில் சலுகைகளைக் கொடுக்கிறோம். அவைகள் எல்லாம் அவர்களுக்குத் தெரியாமலேயே போய்விடுகின்றன. இலவசக் கல்வி கொடுக்கிறோம், வீட்டு வசதி செய்து கொடுக்கிறோம். இவைகள் அவர்களுக்குத் தெரியாமலேயே போய்விடுகின்றன. மற்றும் ஹரிஜனங்களுக்கு உதவியாக மாடுகள் வாங்கிக்கொடுக்கிறோம். ஆனுல், அவற்றில் 100-க்கு 90 சதவிகித மாடுகள் மிராசுதார்களிடத்தில்தான்

இருக்கின்றன. பத்து சதவிகித மாடுகள்தான் ஹரிஜனங்களிடத்தில் இருக்கின்றன. ஒன்று முதல் ஐந்து ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்குத்தான் மாடுகள் வாங்கிக் கொடுக்கவேண்டும். மற்றவர்களுக்குக் கொடுப்பது சரியல்ல. மாடு வாங்கிக் கொடுக்கும் திட்டம் வெறும் திட்டம்தான். இதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பி. அப்பாவு : சட்ட மன்றத் துணைத்தலைவர் அவர்களே, ஹரிஜன நல மானிய கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்கள் கூடுமான வரையில் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நில ஆர்ஜிதம் செய்வதில் எவ்வளவு காலதாமதம் ஆகிறது என்பதைப் பற்றியும் விளக்கமாக இந்த அவையில் பல ஆண்டுகள் எடுத்துக்கூறியும் அதில் எந்தவிதமான முன்னேற்றத்தையும் காண முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னதாக நில ஆர்ஜிதம் செய்தும் இன்னும் அவற்றை பகிர்ந்து கொடுக்காமல் இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது ஆர்ஜிதம் செய்கிற நிலங்கள்கூட அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். அதனால், வேலை அதிகமாக ஆகிறது. அதன் காரணமாக குறைந்த விலையில் நிலத்தை வாங்கி ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு ஏக்கர் நிலம் சுமார் மூவாயிரம் ரூபாய்க்குமேல் போகாமல் குறைந்த விலையில் வாங்கவேண்டும். அப்படிக் குறைந்த விலையில் அதிகப்படியான நிலத்தை வாங்கி அதிகம் பேர்களுக்குக் கொடுக்கவேண்டும். இது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். சில இடங்களில் சுடுகாடுகளுக்கு நில ஆர்ஜிதம் செய்கிறார்கள். இன்னும் எவ்வளவோ கிராமங்களில் சுடுகாடுகளுக்கு நில ஆர்ஜிதம் செய்யாமல் தள்ளிப் போட்டுக்கொண்டே வருகிறார்கள். சில இடங்களில் சுடுகாடுகளுக்கு கூட ரோடுகள் இல்லாத நிலைமையில் இருப்பது வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது. குறிப்பாக, இதைப்பற்றி எடுத்துச் சொல்லியும் சில இடங்களில் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. ஹரிஜனங்களுக்கு கிணறுகளை வெட்டிக்கொடுத்தால் அது வெட்டி முடிந்த பிறகு அதைப் பழுது பார்ப்பது யார் என்பது தெரியவில்லை. அதைப் பழுது பார்ப்பது யார் என்ற விளக்கம் இன்னும் தெரியவில்லை. ப்ளாக் டெவலப்மெண்ட் சம்பந்தமாகவா என்று கமிஷனரை கேட்டால் தனக்கு சம்பந்தம் இல்லை என்று அவர் சொல்லிவிடுகிறார். ஆகவே யார் அதைப்பழுது பார்ப்பது என்பது விளக்கமாகத் தெரியவில்லை. ஆகவே, அதை யார் பழுது பார்க்கவேண்டும் என்பதைப்பற்றி நிர்ணயம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உடை வழங்குவது சம்பந்தமாக, பெண்களுக்கு இரண்டு பாவாடைகளும் சட்டைகளும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது உடைகள் வழங்குவதைப் பற்றி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விடுதிகளில் தங்கும் மாணவர்களுக்குக் கொடுப்பதாகவும் கூறியிருக்கிறார். ஆகவே, இன்னும் அதிகப்படியாக உடைகளை வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பால் வழங்கும் சங்கங்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அந்தவிதத்தில் பலவித சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். அதற்குக் கடன் உதவியும் கொடுத்து வருகிறார்கள். அந்த முறையில் கடந்த ஆண்டு இரண்டு லட்சத்துத் தொண்ணூறு ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது 1962-63 ம் ஆண்டுக்கு லட்சத்தி அறுபதாயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஹரிஜனங்கள் இந்தத் தொகையை நம்பிக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சங்கங்களுக்கு மாடுகளைக்கொடுத்து அங்கிருந்து அவர்கள் மாடுகளை வாங்கி ஜீவனம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து ஆக வேண்டும்—ஆகவே, அதிகத் தொகை ஒதுக்கி சங்கங்களை பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்

24th July 1962] [திரு பி. அப்பாவு]

கூட்டுறவு விவசாயம் என்ற முறையில் ஹரிஜனங்களுக்கு ஒதுக்கக்கூடிய நிதியை மாடுகளுக்கென்றும், கிணறுகளுக்கென்றும் கொடுத்துவிடுகிறார்கள். இந்த ரீதியில் இருக்கக்கூடாது. ஹரிஜனங்களுக்கு ஒதுக்கக் கூடிய தொகையை அவர்களுக்கே கொடுக்க வேண்டும். அப்படி இல்லாத காரணத்தினால் அவர்கள் வருத்தப்படுகிறார்கள். திருப்தி அடைவதில்லை. அதை மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய திரு. ஆறுமுகம் அவர்கள் கூட சொன்னதுபோல ஹரிஜனங்களுக்கு ஏமாற்றம் இல்லாதவகையில் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக மெட்ராஸ் பப்ளிக் சர்விஸ் கமிஷனில் 30 ஆண்டு காலமாக எந்த ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவர் ஒருவருக்கும் அங்கத்தினராக இருக்க பிரதிநிதித்துவம் அளிக்கவில்லை. யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷனில் இருப்பதாகச் சொல்லலாம். இருந்தாலும் இங்கே போடாதது வருந்தத்தக்கது. ஆகவே இனியாவது ஒரு ஹரிஜனருக்கு மெட்ராஸ் பப்ளிக் சர்விஸ் கமிஷன் மெம்பராக இருக்கவாவது பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன மானியத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். சேலம் ஜில்லாவில், ஏற்காடு செல்வராயன் மலையில் இருக்கின்ற வசதியின்மையைப் பற்றி நான் சில வார்த்தைகள் பேச விழைகிறேன். அங்கே மலைசாதி மக்கள் வசிக்கிறார்கள். ஒரு வசதியும் அங்கே கிடையாது. குறிப்பாக ரோடு வசதி இல்லாததால் அவர்கள் படுகிற கஷ்டம் மிக அதிகம். ஏற்காட்டில் இருந்து இருபது மைல் தொலைவில் கொட்டச்சேரி என்ற கிராமம் இருக்கிறது. கொட்டச்சேரியில் இருந்து கால்நடையாகவேதான் மக்கள் ஏற்காடு போகவேண்டியிருக்கிறது. அதோடு சந்தைக்குப் போவதாக இருந்தாலும் பலாப்பழம், கொய்யாப்பழம், ஆரஞ்சிப்பழம் இவற்றைத் தூக்கிக்கொண்டு கால்நடையாகவே தான் போக வேண்டியிருக்கிறது. வண்டி வசதி போக ரோடு இல்லை. கொட்டைச்சேரியிலிருந்து நாலு மைலில் பூமனூர் வழியாக மஞ்சேருக்கு வழி செய்துகொடுத்தால் நாலு மைல் ரோடு போட்டால் சேலம் வர வசதியாக இருக்கும்.

மேலும் அங்கேயிருக்கிற ஊர்களில் பள்ளிக்கூட வசதி கிடையாது. இரண்டு மைல், மூன்று மைல் என்று காலில் நடந்து பள்ளிக்கூடம் போகவேண்டியதாக இருக்கிறது. அங்கங்கே பள்ளிக்கூடம் ஏற்படுத்தினால் தான் அந்த மலைவாசி மக்கள் படிக்க வசதி ஏற்படும்.

இன்னும் ஒவ்வொரு கிராமத்திலும் ஆஸ்பத்திரி வசதி கிடையாது. ஏற்காட்டுக்கு செத்துப்போனால் தூக்கிக்கொண்டு போவார்களே, அதுமாதிரியாக பாடை கட்டித் தூக்கிக்கொண்டு போகிறார்கள். நான் கூட பார்த்தேன், மேலே குழந்தை எட்டிப் பார்க்கிறது. "என்ன இப்படி" என்றால் "சீக்கு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகிறோம்" என்கிறார்கள். ரோடு வசதி இல்லாததால் வண்டியில் போக முடியவில்லை. தலையிலே தூக்கிக்கொண்டு போகிறார்கள். நான் கூட புலியூர் என்ற இடத்தில் ஆஸ்பத்திரி வைக்க வேண்டுமென்று சொன்னேன். ஆகட்டும் ஆகட்டும் என்கிறார்களே தவிர, அதிகாரிகள் ஒன்றும் ஏற்பாடு செய்வதில்லை. அது இன்னும் கவனிக்கப் படவில்லை. இன்னும் பெண்கள் குளியாமல் இருந்தால்கூட ஆஸ்பத்திரி வசதி இல்லாமல் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். அவர்களை எப்படித் தூக்க முடியும் ?

அதோடு கண்டிஷன் நிலத்தில் மூன்று வருடம், நான்கு வருடம் ஏரு ஓட்டிக்கொண்டிருந்தவர்களைக் கூட திடீரென்று கர்ணம் நிலத்தை விட்டுவிடச் சொல்கிறார். வேறு ஒருத்தருக்கு கொடுக்கிறார். சர்க்கார் உங்களுக்குக் கொடுக்கச் சொல்ல வில்லை என்கிறார். இதனால் சண்டை—மாஜிஸ்ட்ரேட்டு கோர்ட்டுக்குப் போகவேண்டியிருக்கிறது. என் தொகுதியில் ஓமலூர், தேஸ்பட்டி இங்கே நிறைய நிலம் இருக்கிறது. இந்தமாதிரி கர்ணம் மாற்றிவிடுகிறார். கலெக்டரிடம் கூட சொன்னேன். இப்படி இருந்தால் உடனே கர்ணத்தை மாற்றி வேறு ஒருவரைப் போடவேண்டும்.

இந்தமாதிரி நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கவேண்டும்· என் தொகுதிக்கு கனம் ராமையா அவர்கள் வந்தார்கள். வேறு அமைச்சர்கள் வரவில்லை. அவரிடம் அங்கே இருக்கிற கஷ்டங்களை எல்லாம் சொன்னோம். மின்சார வசதி அங்கே கிடையாது. போடுவதாகச் சொன்னார்கள். வரவில்லை. பஸ் வந்துவிட்டது.

கனம் திரு. பூ. கக்கன் : நான் கூட உங்கள் தொகுதிக்கு வந்திருக்கிறேன்.

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் : நீங்கள் ஏற்காடு வந்தீர்கள். வரவில்லை யென்று சொல்லவில்லை. நான் குடியிருக்கிற ஊருக்கு கனம் ராமையா அவர்கள் வந்தார்கள் என்று சொன்னேன். அங்குள்ள மக்களது கஷ்டங்களை எல்லாம் போக்கி, வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. க. ர. நல்லசிவம் :** மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, இன்று ஹரிஜன முன்னேற்றத்திற்காக கல்வித்துறையில், பொருளாதாரத் துறையில், சமூகத் துறையில் குறிப்பாக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த பட்ஜெட்டிலே கூட $3\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, அவர்களுடைய நலத்திற்காக. அவர்களுடைய நிலையை மாற்றுவதற்கு இது மட்டும் போதுமானது அல்ல. அதை எல்லோரும் உணர்வார்கள். நான் ஒரு குறிப்பிட்ட யோசனை ஒன்றைச் சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நாம் செய்திருக்கக்கூடிய ஏற்பாடுகள் பொருளாதாரத் துறையில் அவர்களுக்குச் சிறிய அளவு பயன்படுகிறது. இருந்தாலும் சாதியால் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகளை, தீண்டாமை மனப்பான்மையை ஒழிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அதற்கு தீவிரமன ஒரு, நடவடிக்கையை தைரியமாக மேற்கொள்ளவேண்டும். கேரள சர்க்கார் கூட சமீபத்தில் ஓர் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. உயர்ந்த சாதிக்காரர்களுக்கும், தாழ்ந்த சாதிக்காரர்களுக்கும் இடையிலே திருமணம் நடைபெறுகின்ற முயற்சிக்கு உற்சாகம் அளிக்க அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும். இது நீண்டகால கோரிக்கையாக இருக்கிறது. கல்யாணம் செய்துக்கொள்வதற்கு உற்சாகம் அளிப்பதோடு மட்டும் போதாது. அவர்கள் நிம்மதியாக, வாழ வழிவகை செய்தாகவேண்டும். இன்றைக்கு ஹரிஜனங்களில் இருந்து படித்து மேல் நிலைக்குப் போகிறவர்கள்கூட தங்களை ஒரு தனி சாதியாகவே நினைத்துக்கொள்கிறார்களோ என்று நான் நினைக்கிறேன். காரணம் கிராமாந்திரங்களில் நான் பார்க்கிறேன். மற்றவர்களை நாம் எப்படித் தாழ்ந்தவர்களாக நினைக்கிறோமோ அப்படியே தான் அவர்களும் ஊரில் உள்ள ஹரிஜனங்களை நினைக்கிறார்கள். இந்த நிலையில் மாற்றம் காணவேண்டுமென்றால் நிச்சயமாக தாழ்த்தப்பட்டவர்கள் சமூகத்திற்கும், உயர்ந்த சமூகத்திற்கும் திருமணப் பிணைப்பு ஏற்பட்டாகவேண்டும். இன்றைக்குச் சிலர் கலப்புத் திருமணத்தை—அதுவும் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறவர்கள் பாஷனாகக் கருதலாம். ஆனால் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் அதுமாதிரியாக மணந்துகொண்டால் சமூகத்தால், பொருளாதார வகையால் பாதிக்கப்படாத அளவுக்கு அரசாங்கம் உதவியும், உற்சாகமும் அளிக்க திட்டவட்டமாக முன்வரவேண்டும். அப்போதுதான் நல்ல மாற்றம் ஏற்படும் என்று நினைக்கிறேன்.

புறம்போக்கு நிலங்களைப் பொறுத்தவரையில் சுமார் 6இல் ஒரு பங்கு தான் ஹரிஜனங்களுக்குப் பட்டா செய்யப்பட்டிருக்கிறது. உண்மையில் வேறு எவருக்கும் முன் பாத்யதை கொடுக்காமல் ஹரிஜனங்களுக்கு மட்டும் தான் முதற் சலுகையாக இந்தப் புறம்போக்கு நிலங்களை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். சில இடங்களில் அதிகாரிகள் இது சம்பந்தமாக நடவடிக்கையே எடுப்பதில்லை. இதிலும் அவர்களிடையே சாதி மனோபாவம் இருக்கிறதோ என்று நினைக்கிறேன். இதுபோன்ற விஷயங்களில் கனம் அமைச்சர் அவர்கள் தீவிர கவனம் செலுத்தவேண்டும். கடைசியாக நான் சொல்ல விரும்புவது குடியிருப்பு மனைகள் வழங்குவதில் பணக்காரர்களிடம் இருக்கும் நிலத்தை, வசதியுள்ளவர்களிடம் இருக்கும்

24th July 1962] [திரு க. ர. நல்லசிவம்]

நிலத்தை எடுத்துக்கொடுப்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் ஒரு எக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கக் கூடியவர்கள் நிலத்தை எடுத்துக்கொடுப்பது என்றால் அதில் சில சிக்கல்கள் வருகின்றன. ஹரிஜனங்கள் நிலம் வேண்டும் என்கிறார்கள். இவர்களோ எங்களிடம் இருப்பதை எடுத்துக் கொள்ளாதீர்கள் என்கிறார்கள். இது கனம் அமைச்சர் அவர்களுக்கு மட்டும் சிக்கலான பிரச்னை இல்லை. எனக்கும் கூட அந்தச் சிக்கல் ஏற்படும். மற்ற அங்கத்தினர்களுக்கும் கூடத்தான் ஏற்படும். சமீபத்தில் பாராளும் மன்றத்தில் நில ஆர்ஜித சட்டத்தைத் திருத்தப்போவதாகத் தெரிகிறது. அப்படியானால் நமது அரசாங்கம் திட்டவட்டமாக 5 ஏக்கர் நிலத்திற்கு உட்பட்டவர்கள் பேரில் கை வைக்கக் கூடாது என்ற அளவில் அந்தச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. நில ஆர்ஜித சட்டத்தில் என்ன என்ன சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நான் அனுபவபூர்வ மாக உணர்ந்திருக்கிறேன். பாராளும் மன்றத்தில் வரக்கூடிய நில ஆர்ஜித சட்டத் திருத்த மசோதாவில் நமக்குத் தேவையான சில திருத்தங்களைச் செய்வதற்கு நம்முடைய ராஜ்ய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

கனம் உதவி சபாநாயகர் : கனம் அங்கத்தினர் திரு. சி. சிவசுப்பிர மணியம் இப்பொழுது பேசலாம். ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் நான்கு நிமிஷங்களில் உரையை முடிக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*** திரு. சி. சிவசுப்பிரமணியன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை நான் மனமார வரவேற்கிறேன். இந்த மான்யத்தைப் பார்த்து மற்ற ஜாதி ஹிந்துக்களில் பலர் என்ன நினைக் கிறார்கள் என்றால், ஹரிஜனங்களுக்கு அதிகமான சலுகை கிடைத்துவிட்டது என்று நினைக்கிறார்கள். அது சரியல்ல. ஹரிஜன மக்கள் பொருளாதாரத் துறையிலும், கல்வித் துறையிலும் மற்ற எல்லாத் துறைகளிலும் உயரும் வரையிலும் இந்தச் சலுகை நீடிக்கப்படவேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களில் ஹரிஜனங்களுக்கு எல்லாவிதமான சலுகைகளும் கொடுத்துவிட்டதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். பஞ்சாயத்தில் உள்ள எல்லாச் சலுகைகளையும் ஜாதி ஹிந்துக்கள் பெறும் வகையில் பஞ்சா யத்துத் தலைவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். பல இடங்களில் இதை நான் கண்டிருக்கிறேன். குடி தண்ணீர் டாங்குகள் கட்டி, பைப் மூலமாகத் தண்ணீர் வழங்குவதை ஜாதி இந்துக்கள் இருக்கும் தெருவோடு நிறுத்தி விட்டார்கள். ஹரிஜன மக்களாகிய நாங்களும் பஞ்சாயத்து மெம்பராக இருந்தாலும், எங்கள் தெருவுக்கு தண்ணீர் சப்ளை நீடிக்கவில்லை. இதில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. ஹரிஜனங்களுக்காக என்னென்னவோ செய்வதாகச் சொல்கிறார்களேயொழிய, பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில், ஹரிஜனங்களுக்கு நன்மை செய்யப்படுவதில்லை. கிராமப் புறங்களில் இம்மாதிரிதான் நடந்துகொண்டிருக்கிறது. இதை நம்முடைய அமைச்சர் அவர்கள் கண்காணித்து ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ரோடு போடுவதிலும் கூட, ஜாதி இந்துக்கள் இருக் கும் தெரு வரையில் கல் அடிக்கிறார்கள், கப்பி அடிக்கிறார்கள், ரோட்டைச் சீர்ப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால், சேரிக்கு ரோடு போடுவது கிடையாது. ஆகவே, ஹரிஜனங்களுக்காக ஏற்பட்ட எல்லா சலுகைகளையும் ஹரிஜன நல இலாகா மூலமாகவே எங்களுக்குச் செய்யப்படவேண்டும். ஹரிஜனங் களுக்காக என்று பஞ்சாயத்துக்கு ஒதுக்கும் தொகையையும், நிச்சயமாக ஹரிஜனநல இலாகா மூலமாகவே செலவு செய்து, ஹரிஜனங்களை முன் னேற்ற வேண்டுமென்று நான் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து மூலமாக ஹரிஜனங்களுக்கு எந்தவிதமான சௌகரியமும் கிடைக்காது, எந்தவிதமான சலுகையும் கிடைக்கவில்லை. எல்லா சலுகை களையும் ஹரிஜன நல இலாகா மூலமாகவே செய்யவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமையானது இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. மதுவிலக்கு பற்றி எப்படி அடிக்கடி அமைச்சரவை மதிப்பிட்டு, கணக்குப் போட்டு, அறிக்கை கொடுக்கிறார்களோ, அதுபோலவே, தீண்டாமை ஒழிப்பு பற்றியும் கணக்கிட்டு, அறிக்கை கொடுக்க வேண்டும். தீண்டாமை எங்கும் பரவிக் கொண்டிருக்கிறது. டெபுடி சேவக்குகள் பற்றிக் குறிப்பிடப்பட்டது. டெபுடி சேவக்குகள் செய்யும் வேலையைவிட இந்தச் சட்டசபை மெம்பர்கள் வருஷத்திலே ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் தீண்டாமை ஒழிப்புக்காக ஒதுக்கி வேலை செய்வார்களானால், நிச்சயமாகத் தீண்டாமை நாட்டைவிட்டே ஒழிந்துவிடும். அதைச் செய்யவேண்டும் என்று சட்டசபை மெம்பர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே மெம்பர்கள் பெரிதும் அக்கறை செலுத்தினால், தீண்டாமை நிச்சயமாக ஒழிந்துவிடும். இதில் அமைச்சர் அவர்களும் நல்ல நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜன நலப் பள்ளிக்கூடங்களில் புத்தகங்கள் காலா காலத்தில் கிடைக்கவில்லை. பள்ளிக்கூடம் திறந்து மூன்று நான்கு மாதங்கள் கழித்துத் தான் புத்தகங்கள் வருகின்றன. முன்னாலேயே திட்டம்போட்டு புத்தகத்தை வாங்கி வைத்திருந்து பிள்ளைகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு வழங்குவது பற்றி எல்லோரும் பேசினார்கள். ஹரிஜனங்கள் தெருவிலே ஜாதி இந்துக்களில் பலர் மனைக்கட்டு வாங்கியிருக்கிறார்கள். ஹரிஜனங்கள் வேலை செய்துகொண்டிருந்தால் குடியிருக்கலாம். வேலையை விட்டு நின்றுவிட்டால் அவர்களை அங்கிருந்து வெளியேற்றி விடுகிறார்கள். நாற்பது வருஷங்கள், 50 வருஷங்கள் குடியிருந்து வந்த இடத்தைக்கூட காலி செய்யும்படி சொல்லி ஹரிஜனங்கள் வெளியேற்றப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதையும் கண்காணித்து எங்கெங்கு ஹரிஜனங்கள் வசிக்கிறார்களோ அந்த இடத்தை அவரவர்களுக்கே ஜாரி செய்துகொடுக்க உத்தரவு போடும்படியாக அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

காடுகளில் ஹரிஜன மக்கள் ஐந்து வருஷங்களுக்கு மேல் பயிரிட்டு வந்திருக்கிறார்கள். காட்டிலாகாவினர் அவர்களை வெளியேற்றத் திட்டம் போட்டிருக்கிறார்கள். குத்தம்பாக்கத்தில், ஹரிஜன மக்கள் பயிரிட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கிருந்து அவர்கள் வெளியேற்றப்படத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தை ஹரிஜன மக்கள் இரண்டு முதல் ஐந்து வருஷங்கள் பயிரிட்டிருந்தால், அதை அவரவர்களுக்கே ஜாரிசெய்து கொடுக்கும்படியாக நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏரிப் புறம்போக்கில் பயிரிட்டால், அதை ஏரிப் புறம்போக்கு, நீர்ப் பிடிப்பு என்று சொல்லி ஹரிஜனங்கள் வெளியேற்றப்படுகிறார்கள். தண்ணீர் எவ்வளவு பிடிக்குமோ அதை மட்டும் வைத்துக்கொண்டு, மற்ற இடங்களை ஹரிஜனங்களுக்கு ஜாரி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஹரிஜன நல இலாகாவில் வயதானவர்களைப் போட்டால், கிராமப்புறங்களுக்கு அவர்களால் போகமுடிவதில்லை. ஆகவே, வயதானவர்களை ஹரிஜன நல இலாகாவுக்குப் போடவேண்டாமென்று சொல்லிக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரித்து என் உரையை முடிக்கின்றேன்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். காங்கிரஸ் அரசாங்கம் ஹரிஜன மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக கல்வித் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பல கோடிக் கணக்கான ரூபாய்களை அவர்களுக்காக ஒதுக்கியிருப்பதைக் கண்டு நான் பாராட்டுகிறேன்.

கல்வித்துறையை எடுத்துக் கொண்டால், சிறு குழந்தைகளுக்கு வேண்டிய புத்தகம், ஸ்லேட், துணி மணிகள் அத்தனையும் வாங்கிக் கொடுக்கிறோம், துணிகள் வாங்கிக் கொடுப்பதில் பணத்தைச் செலவு செய்

24th July 1962] [திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்]

கிறோம். ஆனால், போதுமான அளவுக்குத் துணி நாம் எடுப்பதில்லை. அதனால் முழங்கால் அளவுக்குப் பாவாடை, சுருக்கம் இல்லாத பாவாடை தான் தைக்க முடிகிறது. தேவையான அளவுக்குத் துணி எடுத்து, சரியான முறையில் தைத்துக் கொடுத்தால் குழந்தைகள் பார்ப்பதற்குச் சற்று அழகாக இருக்கும்.

கல்லூரிகளில் பல மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். மெடிகல் காலேஜிலும் படிக்கிறார்கள். மெடிகல் காலேஜில் படிக்கும் மாணவர்கள் ஒரே ஸப்ஜெக்ட்ஸ் மூன்று ஆண்டுகளாகப் பரீட்சையில் தேறுமல் இருக்கிறார்கள். மெடிகல் காலேஜில் படிக்கும் 78 மாணவர்கள் என்னிடம் வந்தார்கள். அவர்களைப் பார்த்து நான், "என்னப்பா, பாஸ் பண்ணுமல் கேவலப்படுத்தி விட்டீர்களே" என்று கேட்டபோது, "நாங்கள் என்ன செய்வோம்? புத்தகம் வாங்குவதற்கு ஆயிரம் ரூபாய் வேண்டும். அதைக் கொடுத்து புத்தகம் வாங்காமல் இன்னும் இருந்துகொண்டிருக்கிறோம், புத்தகம் வாங்காத காரணத்தால்தான் நாங்கள் 'பெயில் ஆய்விட்டோம்" என்று என்னிடம் முறையிட்டார்கள். ஆகையால், இம்மாதிரி கல்லூரிகளில் படிக்கிறவர்கள் குறிப்பாக மருத்துவக் கல்லூரியில் படிக்கிற ஹரிஜன மாணவ மாணவிகளுக்கு முதல் ஆண்டிலேயே அவர்களுக்கு வேண்டிய புத்தகங்களை வாங்கிக்கொடுத்தால் அவர்கள் பரீட்சையில் பெயில் ஆகாமல் இருக்க நல்ல வாய்ப்பு உண்டாகும் என்பதை இங்கே இருக்கும் சுகாதார அமைச்சர் அவர்களுக்கும், ஹரிஜன நல அமைச்சர் அவர்களுக்கும் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை நகரில் சைதாப்பேட்டையில் எம். ஸி. ராஜா ஹாஸ்டல் இருக்கிறது. அந்த ஹாஸ்டலிலிருந்து மாணவர்கள் கல்லூரிக்குப் போய்ச்சேர பஸ்களை நம்பியிருக்கிறார்கள். பஸ்கள் சரிவரக் கிடைக்காததால், காலா காலத்தில் அவர்கள் கல்லூரிக்குப் போக முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, எம். ஸி. ராஜா ஹாஸ்டலிலிருந்து ஸ்பெஷல் வான் மூலமாகப் பிள்ளைகளைக் கல்லூரிகளுக்குக் கொண்டுசெல்வதற்கு ஏற்பாடு செய்தால், அவர்கள் இன்னும் நன்றாகப் படிக்க வசதி ஏற்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். பஸ் நெருக்கடியின் காரணத்தால்தான் இதை நான் சொல்கிறேன்.

சர்வீஸ் கமிஷனைப்பற்றி எல்லோரும் கூறினார்கள். ஹரிஜனங்களுக்கு என்று டெபுடி கலெக்டர், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் போன்ற பதவிகளுக்கு இடம் ஒதுக்கியிருந்தும், இப்படிப்பட்ட பதவிகளுக்குத் தேர்தல் நடக்கிற சமயத்தில், "ஹரிஜன சமூகத்தில் திறமையானவர்கள் இல்லை, தகுதியானவர்கள் இல்லை" என்று சொல்லப்பட்டு, ஐந்து வருஷங்களாக டெபுடி கலெக்டர், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவிகளுக்கு ஹரிஜனங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவில்லை. தகுதி இல்லை, திறமை இல்லை என்று ஹரிஜனங்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இந்தச் சமூகத்தில் தகுதியும் திறமையும் உள்ளவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்க, இப்படிச் சொல்லி, அவர்களைப் பெரிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்காமலிருப்பது நம்முடைய அரசாங்கத்திற்கு நல்லதல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலைமை நீடிக்கக்கூடாது. எப்படியும் சர்வீஸ் கமிஷனில் ஒரு ஹரிஜன மெம்பர் கண்டிப்பாகப் போட்டாகவேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

ஹரிஜனங்களில் எத்தனையோ பேர்கள் அரசாங்க மான்யத்தைப்பெற்று படிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் ரூ. 500-க்கும் அதிகமாகச் சம்பளம் பெறுபவர்களிடமிருந்து சம்பளத்தில் ஐந்து சத விகிதம் பெற்று மெரிட் ஸ்காலர்ஷிப் கொடுக்க நாம் ஏற்பாடு செய்தால், இன்னும் நன்றாக அமையும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

நில ஆர்ஜிதத்தில் மிகவும் நெருக்கடி ஏற்படுகிறது. அதைப்பற்றி எல்லா கனம் அங்கத்தினர்களும் குறிப்பிட்டுவிட்டார்கள். யாரிடத்திலிருந்து கன்செண்ட் லெட்டர் வாங்கிக்கொடுத்தாலும்கூட தாமதம் ஏற்படுகிறது. இது வரை எப்படியிருந்தாலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திற்குள் எப்படியாகிலும் எல்லா ஹரிஜன மக்களுக்கும் நிலம் ஆர்ஜிதம்

செய்யப்பட்டுக் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்த ராஜ்யத்திலுள்ள எல்லா ஹரிஜன மக்களுடைய சார்பிலும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

12–00 noon. * **திரு. வி. எஸ். அருணசலம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் ஹரிஜன மானியத்தை ஆதரித்து என்னுடைய அனுபவக் கருத்துக்கள் சிலவற்றை இங்கு சொல்ல பிரியப்படுகிறேன். இங்கு பேசிய அங்கத்தினர்கள் அத்தனை பேரும் ஹரிஜனங்களுடைய வாழ்க்கைத் தரம் உயர, காருண்யம் பொருந்திய காந்தியடிகளின் அடிச்சுவட்டில் வந்த இந்த சர்க்கார் நல்ல முறையிலே வழி வகைகளைச் செய்து வருகிறார்கள் என்பதை எடுத்துச் சொன்னார்கள். இந்த ஹரிஜன நல இலாகா நல்ல முறையிலே நடப்பதை யாரும் மறுக்க முடியாது. அது நல்ல முறையிலே நடந்தாலும் அவர்களுக்கு இன்னும் போதிய நிதி கொடுக்கவேண்டுமென்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

குறிப்பாக, குடிமனைகளை எடுத்துக்கொள்வோமானால், நல்ல முறையில் ஹரிஜனங்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். ஆனால் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் தாமதம் ஏற்படுகிறது. அதை வற்புறுத்த ஆசைப் படுகிறேன்.

அடுத்து, மாணவர்கள், பள்ளிகளிலே படிக்கிறவர்களுக்கு வருவாய் அடிப்படையிலே சம்பளச் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது. வருவாயின் எல்லையை 1,500 ரூபாயிலிருந்து 2,000 ஆக உயர்த்த வேண்டுமென்று ஹரிஜன மக்களின் சார்பில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பஞ்சாயத்து ராஜ்யமானது கிராம மக்களின் நன்மைக்காக நல்ல முறை யில் செயல்பட்டு வருகிறது. நல்ல ஒரு கருத்தோடு பஞ்சாயத்து ராஜ்ய த்தை நம்முடைய ராஜ்யத்திலே கொண்டு வந்தார்கள். புறம்போக்கு நிலங்களையெல்லாம் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்து விட்டதாகச் சொல்கிறார்கள். 15 வருஷங்கள், 20 வருஷங்கள் எல்லா ஏழை மக்களா லும் அனுபவித்து வந்த புறம்போக்கு நிலங்களையும் பஞ்சாயத்து எடுத்துக் கொண்டு அந்த மக்களை அங்கிருந்து விரட்டுகிறார்கள். என்னுடைய தொகு தியில் 480 எக்கர் புறம்போக்கு நிலங்களில் 20 வருஷ காலமாக ஏழைகள் பயிரிட்டு வந்தார்கள். அவர்களுக்கு எந்தவித எச்சரிக்கையும் செய்யாமல் டிராக்டர்கள் வைத்து அந்த நிலத்தைச் சமப்படுத்தி, 20 எக்கர் நிலத்தில் மாஞ்செடி வைக்க உத்தரவு வந்து விட்டது என்று சொல்லி, பஞ்சாயத்துத் தலைவர் மாஞ்செடிகளை அதிலே வைத்தார். இதை நான் ஹரிஜன நல இலாகா டைரக்டர் அவர்களிடம் சொன்னேன். அவர் நேரில் அந்தக் கிராமத்திற்குச் சென்று, அங்கிருக்கும் நிலவரத்தைப் பார்த்து, உண்மை யை அறிந்து செடிகள் வைத்திருக்கும் நிலங்கள் போக மீதி நிலங்களை அந்த ஏழை மக்களுக்கே கொடுத்துவிடமேண்டுமென்று சொல்லிவிட்டுப் போனார். ஆனால், மறு நாளே அந்த நிலங்களிலும் பஞ்சாயத்துத் தலைவர் அவர்கள் செடி வைக்க ஆரம்பித்து விட்டார்கள். இதை நான் முன்பே அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இப்படிப்பட்ட சில அட்டூழியமான காரியங்கள் பஞ்சாயத்துத் தலைவர் களால் செய்யப்படுகிறதாகையால், புறம்போக்கு நிலங்களைப் பஞ்சாயத்துத் தலைவர்களிடம் ஒப்படைக்கக்கூடாது என்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தொழில் பேட்டைகளில் 1½ வருஷ காலம் தொழிற் கல்வி பயின்று வந்த பிறகு அவர்கள் கொடுக்கும் சர்டிபிகேட் தகுதியில்லாதது என்று கூறி சில தனிப்பட்ட பாக்டரிகளில் வேலை கொடுக்க மறுக்கிறார்கள். இது பற்றி முதல் அமைச்சர் அவர்களிடத்திலும் கூட இரண்டொரு முறை கூறியிருக்கிறேன். இந்த இலாகா அமைச்சர் அவர்கள் இதிலும் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

24th July 1962]

*** திரு. கே. பொன்னையா:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த ஹரிஜன மானியத்தின் தொகை அதிகரிக்கப்பட்டு நல்ல முறையில் சேவை செய்து வருவதற்காக அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட இலாகாவினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். நேரம் குறைவாக இருப்பதால் சில யோசனைகளை மட்டும் கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

கிராமங்களிலிருந்து, தாலூகா தலைநகரம், ஜில்லா தலைநகரம், மாகாண தலைநகரம் ஆகியவற்றில் மக்கள் குடியேறி வருகிறார்கள். கிராமங்களில் போதுமான வேலை வாய்ப்புக் கிடையாது. எலக்ட்ரிசிடி வருவதற்கு முன்பு ஹரிஜனத் தொழிலாளர்கள் பண்ணைகளில் வேலை செய்து வந்தார்கள். எலக்ட்ரிசிடி வந்த பிறகு அந்த வேலை கூடக் கிடையாது. ஆகவே, அவர்கள் பட்டணத்தைத் தேடிப் போகிறார்கள். கிராமங்களிலிருக்கும் புறம்போக்கு நிலங்களையும், கோவில் நிலங்களையும் அந்த ஹரிஜனங்களுக்குக் கொடுத்து கூட்டுறவுப் பண்ணை மூலம் பயிர் செய்ய வழிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்களுக்குக் கிராமங்களில் வேலை இருக்கும் பட்சத்தில் பட்டணங்களைத் தேடிப் போகமாட்டார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

மில்கள், பாக்டரிகள் போன்றவற்றையெல்லாம், பப்ளிக் செக்டாரிலும், பிரைவேட் செக்டாரிலும் நிறைய நடத்துகிறார்கள். அவற்றில் எல்லாம் ஹரிஜனங்களுக்கென்று 10, 15 சத விகிதமாவது வேலை வாய்ப்புக் கொடுக்கவேண்டும். சில மில்களுக்கு கவர்ன்மெண்ட் எய்டு கொடுத்தும் கூட, ஹரிஜனங்களுக்கு வேலை கொடுப்பதில்லை. அந்த மில்லின் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. இதையும் மனதில் கொள்ளவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனப் பையன்கள் பியூன் வேலைக்கும், வாச்மேன் வேலைக்கும் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து வைக்கிறார்கள். ஹரிஜனங்கள், ஹரிஜனங்கள் அல்லாதவர்கள் எல்லோருக்கும் சேர்த்து ஒரே "பானல்" ஆகத் தான் அங்கு வைத்திருக்கிறார்கள். அதனால் ஹரிஜனப் பையன்களுக்கு அதிகமாக வேலை கிடைப்பதில்லை. ஆகவே, முழுவதையும் ஹரிஜனப் பையன்களுக்கென்றே வைத்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் "பாரஸ்ட் மைனர் ப்ராடக்ட்" என்று "ஹில் டிரைப்சுக்காக" ஒரு சொஸைடி வைத்திருக்கிறார்கள். அதில் ஹில் டிரைப்சாக இருக்கக்கூடியவர்களையே டைரக்டர்களாகப் போட்டிருக்கிறார்கள். அதிலிருந்து ஆறு, ஏழாயிரம் ரூபாய் வரை சீனியர் இன்ஸ்பெக்டரால் ஏமாற்றப்பட்டு அந்தப் பணம் இன்னும் கிடைக்கவில்லை. எம்.எல்.ஏ-க்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் ஆகியோரை அந்த சொசைடியில் போட்டால் ஹில் டிரைப்ஸ் இந்த மாதிரி ஏமாற்றப்படாமல் இருப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஹில்டிரைப்சுக்கு ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்ட் கொடுக்கும் கூலி மிகவும் குறைவு. பக்கத்திலுள்ள கேரளா ஸ்டேட்டில் ஒரு நாளைக்கு ஆணாக இருந்தால் $2\frac{1}{2}$ ரூபாயும், பெண்ணாக இருந்தால் $1\frac{1}{2}$ ரூபாயும் கொடுக்கப்படுகிறது. நம்முடைய ராஜ்யத்தில் $1\frac{1}{2}$ ரூபாய், $\frac{3}{4}$ ரூபாய் வீதத்தில் தான் கொடுக்கப்படுகிறது. அந்தக் கூலி இந்தக் காலத்தில் கட்டுப்படியாகாது. அவர்களுக்குக் கூலியை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் பென்ஷனுக்காக வரக்கூடிய அப்ளிகேஷனில் பாதிக்கு மேல் ஹரிஜன மக்களுடைய அப்ளிகேஷன் தான். இதுவரை ஒரு அப்ளிகேஷன் கூட டிஸ்போஸ் செய்யப்படவில்லை. ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு அதிக "ஸ்டா··ப்" கொடுத்து சீக்கிரமாக அவற்றை டிஸ்போஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் நகரமானது ரொம்ப முன்னேறிக்கொண்டு வருகிறது. நிறைய "பவுண்டரிஸ்" ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஹரிஜனப் பையன்கள் 4-வது, 5-வது, 6-வது பாரங்கள் வரை படித்து விட்டு வேலை இல்லாமல் சுற்றிக்கொண்டு வருகிறார்கள். மதுரையிலும், சென்னையிலும் உண்டாக்கி

யிருப்பது போல், இண்டஸ்ட்ரியல் ஹாஸ்டல் ஒன்றைக் கோயம்புத்தூரிலும் ஆரம்பித்தால் ஹரிஜன மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. ப. கா. முத்துவேலப்ப கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தீண்டாமை ஒழியவேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் கோவில்களில் எல்லாம் ஹரிஜனங்களை விட்டதோடு கூட அவர்கள் சமுதாயத்திலே உயரவேண்டுமென்பதற்காகவும் பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஆனால், இன்னும் கூட சில காப்பிக்கடைகளில் அவர்களைச் சமமாக உள்ளே விடாமல் புறக்கணித்து வருகிறார்கள். கோபிசெட்டிப்பாளையத்திற்கு அடுத்த கரட்டுப்பாளையம்புதூரில் உள்ள காப்பிக் கடையில் ஹரிஜன மக்கள் காப்பி குடிக்கச் சென்றபோது கொடுக்க முடியாது என்று விரட்டியடித்ததாக எனக்கு ஒரு விண்ணப்பமும், கோபிச்செட்டிப்பாளையம் டிவிஷனல் ஆபீசர், டெபுடி கலெக்டருக்கு ஒரு விண்ணப்பமும் அனுப்பியிருக்கிறார்கள்.

இந்த மாதிரி அவர்கள் காப்பிக் கடைகளில் சமமாக உட்கார்ந்து காப்பி சாப்பிடமுடியாது அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆகவே ஹரிஜனங்கள் எல்லோருடனும் ஒன்று சேர்ந்து காப்பி குடிக்கவும், சமமாக வாழவும் வேண்டிய சட்டத்திட்டங்களை வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். லோயர் பவானி அணைக்கட்டினால் பாதிக்கப்பட்ட மக்கள் பக்கத்திலுள்ள ராஜா நகர், சிக்கரசம்பாளையம், புதூர், பீர்கடவு போன்ற இடங்களுக்குச் சென்று வாழ்கிறார்கள். அங்கு ஹரிஜனங்களுக்கு சர்க்கார் பூமிகள் பட்டாக்கள் செய்து கொடுக்கப்பட்டன. அங்கு இந்த ஹரிஜனங்கள் சிவாஜிநாமா கட்டி பத்து பதினைந்து ஆண்டுகளாக விவசாயம் செய்துகொண்டு வருகிறார்கள். அப்படியிருந்தும் ஏழெட்டு ஹரிஜனக் குடும்பங்களை, சில அதிகாரிகளால் தூண்டப்பட்டு அவர்கள் பட்டாவை வேறு சிலருக்கு மாற்றியிருக்கிறார்கள். அதன் காரணமாக அந்த ஹரிஜன மக்கள் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அவர்களுக்குத் திரும்பி வாங்கிக்கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். விவசாயத் துறையில் ஈடுபட்டு இருப்பவர்கள், இதே போன்று அவர்கள் பட்டாவையும் மாற்றிவிடுவார்களோ என்று அச்சப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மாதிரி கஷ்டம் வராமல் தடுக்கவேண்டும். வீடு கட்டுவதற்கான பூமியை ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் விஷயத்தில், குறிப்பிட்ட பூமிகளை எங்களுக்கு வாங்கித் தரவேண்டுமென்று ஹரிஜனங்கள் கேட்கிறார்கள். பின்னர், சில முற்போக்காளர்களின் தூண்டுதலினால் அவர்களில் சிலர் எங்களுக்கு இந்த பூமி வேண்டாமென்று மறு விண்ணப்பம் போடுகிறார்கள். ஆகவே, ஹரிஜனங்களில் சிலர் அந்த பூமியைச் கேட்கிறார்கள். சிலர் வேண்டாமென்று தூண்டுதல் காரணமாகச் சொல்கிறார்கள். அதனால் ஒன்றுமே செய்யாமல் இருந்து விடுகிறார்கள். அதன் காரணமாக, ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அங்குள்ள மக்கள், ஏழைகள், ஒன்றும் அறியாதவர்கள், அப்பாவிகள். ஆகவே, யார் விண்ணப்பித்தாலும் சரி, விண்ணப்பிக்காவிட்டாலும் சரி, அவர்களுக்கு ஒதுக்கப்படும் நிலத்தை எக்காரணத்தைக் கொண்டும் மாற்றாது அவர்களுக்கே ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் ஹரிஜனங்களை ஏமாற்றி ஒரு ரூபாய்க்கு ஒரு வாரத்திற்கு ஒரு அணு வட்டி வாங்குகிறார்கள். வருடத்திற்கு ரூபாய்க்கு $3\frac{1}{4}$ ரூபாய் வட்டியாகிறது. அவர்கள் ஒன்றும் அறியாதவர்கள். ஆகவே தான் கல்வி மிக முக்கியம் என்று நான் கூறுகிறேன். இப்படி ரூபாய்க்கு $3\frac{1}{4}$ ரூபாய் வட்டி வாங்கி அந்த ஏழை மக்களின் இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள். ஆகவே, அங்கு இப்படி அதிகப்படியாக வட்டி வாங்கக்கூடாது என்று அதற்கு வேண்டிய சட்டத்தை ஏற்படுத்தி, அப்படி வட்டி வாங்கினால் அவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்படும் என்று சட்டம் இயற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. பி. ஜெயராஜ் :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் ஹரிஜன நல மானிய கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஹரிஜனத்

24th July 1962] [திரு. பி. ஜெயராஜ்]

துறையில், ஹரிஜனங்களுக்கு வழங்குகிற சலுகைகள் பாதிக்கப்படுகிற அளவில் இருக்கின்றன என்பதைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் கூறினார்கள். நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. குறிப்பாக ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருந்த திட்டத்திற்கு இன்று மத்திய சர்க்காரால் மான்யம் வழங்கப்படவில்லை என்று ரத்து செய்யப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அது நல்லதொரு திட்டம். அதை ரத்து செய்யவேண்டிய அவசியமில்லை. ஒரு சில இடங்களில் மாற்றுக் கட்சிக்காரர்கள் துஷ்பிரசாரம் செய்த காரணத்தினால் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை நிறுத்தி விட்டது சரியல்ல. அதை மாற்றி ஹரிஜனங்களுக்கு மான்யமாக வழங்கி செலவிடப்போவதாகக் கேள்விப்படுகிறேன். மகிழ்ச்சி. ஹரிஜன மானியம் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது பூராவும் ஹரிஜனங்களுக்குச் செலவிடப்படவில்லை. 2 கோடி தான் ஹரிஜனங்களுக்கு செலவு செய்யப்படுகிறது. பாக்கி,பிற்பட்ட வகுப்பினருக்கும், நிர்வாகச் செலவிற்கும் போகிறது. ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்படும் தொகை பூராவும் அவர்களுக்கே நல்ல முறையில் செலவிடப்பட்டால் தான் அவர்கள் வசதி பெற்று வாழ முடியும்.

அடுத்தபடியாக, இந்த மனைக்கட்டுகள் வழங்குவதில், அது ஆர்ஜிதம் செய்யப்படுவதில் மாறுதல் செய்யவேண்டும். தஞ்சை ஜில்லாவில் 12 தாலூகாக்கள் இருக்கின்றன. அங்கு ஒரே ஒரு டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபீசர் தான் இருக்கிறார். மனைக்கட்டுகள் வழங்க ஒரு தாசில்தார், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் போடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு ப்ரபோஸல்ஸ் போடுகிறார்கள் என்று கவனித்தால் மிகக் குறைவு. மாதத்திற்கு குறைந்த அளவு இவ்வளவு ப்ரப்போஸல்ஸ் போட்டாக வேண்டுமென்று கடுமையான உத்தரவு போட்டால் தான் இந்தப் பிரச்னையை ஓரளவு சமாளிக்க முடியும். கடுமையான உத்தரவு இல்லாததால் ஏதோ ஒன்றிரண்டு என்று போட்டு விட்டுப் போய் விடுகிறார்கள். இதனால் நான் முயற்சி செய்து ஆறு வருடங்களில் நான்கு கிராமங்களில் தான் பட்டா வழங்க முடிந்தது. சர்க்காருக்கு வேலைத் தொந்தரவு இருக்கலாம். ஆகவே, மனைக்கட்டுகள் ஹரிஜனங்களுக்குச் சிக்கிரமாக, வெகு துரிதத்தில் வழங்குவதற்குள்ள ஏற்பாடுகளை செய்யவேண்டும். அதற்கு வேண்டிய மாறுதல்களை உடனடியாகச் செய்தால்தான் இந்த மனைக்கட்டுகள் வழங்கும் பிரச்னை எளிதில் தீர முடியும். பெரிய ஜில்லாவிற்கு இரண்டு டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபீசர்களைப் போடவேண்டும். அதோடு ஒரு சட்டசபைத் தொகுதிக்கு என்று ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் போடவேண்டும். அத்துடன் டிவிஷனுக்கு ஒரு தாசில்தார் இல்லாவிடில், ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கேட்டால், "நான் அந்தப் பகுதிக்கு சென்றிருந்தேன், அதை அங்கு செய்திருக்கிறேன்" என்றெல்லாம் சால்ஜாப்பு சொல்வார்கள். ஆகவே ஒரு தொகுதிக்கு ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்று போட வேண்டும்.

அடுத்தபடியாக பெரிய ஜில்லாக்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும். ஒரு டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீசரினால் அந்த ஜில்லா வேலைகள் முழுமையும் பார்க்க முடியவில்லை. கல்வி, கல்வர்ட் எல்லா வேலைகளையும் அவரே பார்க்க வேண்டியிருக்கிறது. ஹரிஜன பாடசாலைகளுக்குக் கட்டிடம் கட்டுவதை பஞ்சாயத்து யூனியனிடம் விடப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படிச் செய்வதால் பஞ்சாயத்து யூனியன் பங்குத் தொகை.......

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜன பாடசாலைகளை ஹரிஜன நல இலாகா கட்டுகிறது. பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்படவில்லை.

திரு. பி. ஜெயராஜ் : 15 நாட்களுக்கு முன்னர் அங்குள்ள டீ.டபிள்யூ.ஓ. கல்வர்ட்டும், ஹரிஜன பாடசாலைகளுக்கும் கட்டிடம் கட்ட பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்பட்டு விட்டது என்று சொன்னார்கள். ஹரிஜன நலத் துறையே இதைப் பார்த்துக்கொள்ளலாம். பின்னர், மின்சாரம் வழங்குவதில் ஷரிஜனங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. பட்ஜெட்டிலும், மற்ற நேரங்களிலும், பஞ்சாயத்து போர்டால், ஜாதி இந்துக்கள் தெருக்களுக்குத்தான் மின்சாரம் வழங்கப்படுகிறது. ஹரிஜனங்களுக்கு எந்த ஊரிலும் கிடைத்ததாகத் தெரியவில்லை. அத்

துடன் **I.A.S., I.P.S.** களாக ஹரிஜனங்கள் வருவதற்கு அதிகப்படியாக சர்க்கார் உதவி புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். **(அடுத்த மெம்பர் அழைக்கப்பட்டார்.)**

* **திருமதி. அ. கிருஷ்ணவேணி :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த ஹரிஜன மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏழை ஹரிஜன மக்கள் சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைவதற்கு பாடுபட்டு வந்த மகாத்மா காந்தியடிகள் கூறிய வாக்கை நிறைவேற்றி வரும் தமிழ்நாட்டு தவப் புதல்வர் நமது முதலமைச்சர் அவர்கள் இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் பதவியிலிருந்து பார்வையில்லாத ஹரிஜன மக்களுக்கு, பார்வை அளிக்கின்ற முறையில் பல வசதிகளை செய்து கொடுத்து வருகிறார்கள். ஏழை ஹரிஜன மக்களுக்கு இருக்க வீடு, மாணவ மாணவிகளுக்கு இலவச உணவு, உடை, விவசாயத்திற்கு இனும் மாடுகள், இன்னும் இது போன்ற பல சலுகைகள் அளித்து வருகிறார்கள். இதற்காக நமது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை ஜில்லாவில் ரிசர்வ் தொகுதியாக இருப்பது ஆண்டிப்பட்டி, சோழவந்தான், மேலூர், போன்ற இடங்கள் அடங்கியிருக்கின்றன. மேலூர், சோழவந்தானைப் பொறுத்தவரையில் அங்கு சிறிது நீர்வளம் இருப்பதால் அங்குள்ள ஹரிஜன மக்கள் ஏதோ ஓரளவுக்கு தொழில் வசதியில் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துகொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எங்கே முன்னேறியிருக்கிறார்கள் ? எல்லா இடங்களிலும் இருப்பதுபோல்தான் அங்கேயும் இருக்கிறார்கள்.

திருமதி. அ. கிருஷ்ணவேணி : என்னுடைய ஆண்டிப்பட்டித் தொகுதியை எடுத்துக் கொண்டால் அது மிகவும் வறண்ட பிரதேசமாக இருக்கிறது. அங்குள்ள ஹரிஜன மக்கள் கிணற்றுத் தவளைகளைப் போல்தான் பொருளாதார முன்னேற்றமின்றி பாமர மக்களாக இருந்து வருகிறார்கள். அங்குள்ள மக்கள் பொருளாதாரத் துறையிலோ அல்லது தொழில் துறையிலோ எந்த விதமான முன்னேற்றமும் அடையாமல் இருக்கிறார்கள். எங்கள் ஆண்டிப்பட்டி பகுதியைப் பொறுத்தவரையில் அங்கு கடமலைக்குண்டு, வருஷநாட்டில் பருத்தி சாகுபடி அதிகமாக செய்யப்பட்டு வருவதால், அங்கிருந்து அதிகமான அளவில் பருத்தி வெளியூர்களுக்கு ஏற்றுமதியாக போய்க்கொண்டிருக்கிறது. இந்த பருத்தியை உபயோகிக்க இந்த ஆண்டிப்பட்டி பகுதியிலேயே தொழில் முன்னேற்றத்தை கொண்டு வர முடியும். அதற்கு கனம் தொழில் அமைச்சர் அவர்களும், கனம் விவசாய அமைச்சர் அவர்களும் தயவுசெய்து ஆண்டிப்பட்டி பகுதியில் வைகை அணைக்கு அருகே ஒரு கூட்டுறவு ஆலையை ஏற்படுத்தினால் அங்குள்ள பாமர ஏழை ஹரிஜன மக்கள் சகலவழிகளிலும் முன்னேற்றம் அடைவார்கள். ஆகவே இதை நன்றாக பரிசீலனைசெய்து அங்கு ஒரு கூட்டுறவு ஆலையை ஏற்படுத்தவேண்டும் என்று ஆண்டிப்பட்டியிலுள்ள ஏழை ஹரிஜன மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். இதற்காக சர்க்கார் கொடுக்கும் ஈவுத் தொகைக்கு சரியான பங்குத் தொகையை அங்குள்ள மக்கள் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை ஹரிஜன மக்கள், பலர் புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால் இந்த நிலங்களெல்லாம் அவர்களுக்கு பட்டாசெய்து கொடுக்காமல் இருப்பதால், இதிலிருந்து கிடைக்கின்ற வருவாயைக் கொண்டே தண்டத் தீர்வையை கொடுக்கவேண்டியிருக்கிறது. அவ்விதம் கொடுக்க முடியாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இந்த நிலங்களை எல்லாம் விவசாயம் செய்கின்ற ஹரிஜன மக்களுக்கு ஜாரி செய்து பட்டா கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆண்டிப்பட்டியிலுள்ள உயர்நிலைப் பள்ளியில், பக்கத்திலிருந்து ஐந்தாறு மைல் தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து மாணவிகள் இங்கு வந்து படிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதனால்

பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே ஹரிஜன மாணவிகளுக்கு என்று ஆண்டிப்பட்டியிலேயே ஒரு ஹரிஜன மாணவிகள் ஹாஸ்டலும், எமுமலையில் ஒரு மாணவர் விடுதியும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விவசாய அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் அங்கத்தினர்களுக்கு கொடுத்திருக்கின்ற புத்தகத்திலே எம்மான் காந்தியடிகளுக்கு நன்றி செலுத்த வேண்டியது நம்முடைய கடமையாகும் என்று சொல்லியிருப்பது மிகவும் பொருத்தமானதாகும். ஹரிஜனங்கள் என்றால், கடவுளுடைய குழந்தைகள் என்றாகிறது. ஆயிர மாயிரம் ஆண்டுகளாக சமூகத்தில் பிற்போக்கு நிலையில் அமுக்கப்பட்ட ஒரு சமூகத்தை ஹரிஜன் என்ற பெயரிட்டு அதற்கு கை கொடுத்து விழிப் படைய செய்தார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்தக் கடவுளின் குழந்தைகள் இன்று காமராஜின் குழந்தைகளாக ஆக்கப்பட்டு பலவிதமான சலுகைகளை அளித்துக்கொண்டு வருகிறோம்.

அடுத்தப்படியாக நேற்று எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர் திரு. மாதாகவுடர் அவர்கள் சொன்னது மாதிரி இந்த நீலகிரி பிரதேசம் இதிலும் எப்போதும் இருப்பதுபோல் "எக்ஸ்ஸெப்ட் நீலகிரிஸ்" (நீலகிரி நீங்கலாக) என்று தான் இருக்கிறது. இரண்டாவது பக்கத்தில் இந்தத் துறையில் ஹரிஜன நல அதிகாரிகளை நியமிப்பதில், மற்ற மாவட்டங்களில் எல்லாம் டெப்யூடி கலெக்டர் அந்தஸ்தில் இருப்பவர்களைத்தான் நியமிக்கிறார் கள். ஆனால் எங்கள் மாவட்டத்தில் மட்டும் தாசில்தார் அந்தஸ்தில் இருப்பவர்களைத்தான் நியமிக்கிறார்கள். ஏன் இந்த பாரபட்சம் எங்கள் ஜில்லாவுக்கு மட்டும் காட்டப்படுகிறது என்பதை மிகவும் தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன். தாசில்தார் லெவலில் இருக்கக்கூடிய இந்த அதி காரி ஏதாவது அரிஜன நலத்திற்காக ஒரு காரியம் செய்யவேண்டுமென்றால் கலெக்டரிடத்தில் போய் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் உதகைக்கு வந்திருந்தபோதும், அங்கு நடந்த மகாநாட்டிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நீலகிரி ஜில்லா வுக்கும் டெப்யூடி கலெக்டர் அந்தஸ்திலுள்ள ஒருவரை அரிஜன நல அதி காரியாக போடுங்கள், அதிலும் முக்கியமாக ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்த ஒரு டெப்யூடி கலெக்டரை போடுங்கள், அப்படிப்போட்டால் இன்னும் அதிக மான வேலைகள் நடக்கும் என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய ஞாபகத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு மனைகள், பூமிகள் ஒதுக்குகின்ற விஷயத்தில் எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில், 10 ஆண்டுகளாக, 9 ஏக்கர் 98 சென்ட்தான் அக்வொயர் செய்திருப்பதாக சொல்லப்பட்டி ருக்கிறது. ஆனால் எங்கள் ஜில்லாவில் 20 ஆயிரம் ஏக்கர் சர்க்கார் பூமி என்க் ரோச்மெண்ட் கணக்கில் இருக்கிறது. சர்க்கார் கணக்கே 20 ஆயிரம் ஏக்கர் என்றால், கணக்கிற்கு வராதது எவ்வளவோ. ஹரிஜனங்களுக்கு மலைப்பிராந்தியத்தில் பூமிகளை கொடுப்பதற்கு வசதியில்லை என்று குறிப் பில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்து நான் வருத்தப்படுகிறேன். இந்த சர்க்கார் பூமிகளை எல்லாம் தாராளமாக ஏழை மக்களுக்கு கொடுக்கலாம். குடி நீர் வசதி செய்து கொடுக்கலாம், புறம்போக்கு நிலங்களை எல்லாம் பட்டா செய்து கொடுக்கலாம். அவ்விதம் ஒன்றும் கொடுக்கப்படாமல், இந்தமாதிரி குறிப்பில் சொல்லுவதால் மட்டும் அங்குள்ள மக்களை திருப்தி படுத்திவிட முடியாது. இதை அமைச்சர் அவர்கள் சற்று சிந்திக்கவேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பக்கத்தில் மலைப்பக்கத்தில் தொதுவர்கள் (தொடாக்கள்) ஒரு சில குடும்பங்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். வெளியேயிருந்து வருகின்ற யாத்ரீகர்கள் உதகைக்கு வந்தால், இவர்களை ஒரு காட்சிப் பொருளாக வந்து பார்த்துக்கொண்டு போகிறார்கள்.

[திரு டி. கார்சா கவுடர்] [24th July 1962

"வானிஷிங் டிரைப்ஸ்" என்று ஒரு சினிமா கூட எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட குடும்பங்கள் மேக நோயினுல் அழிந்து கொண்டிருக்கின்றன. இவர்களுக்கு உதவி செய்வதற்காக, ஏதாவது நோய் ஏற்பட்டால் இவர்களைக் கவனிப்பதற்காக ஒரு வண்டி கொடுக்கப் பட்டது. இந்த வண்டி இரண்டு வருஷமாக வேலை செய்வதில்லை. ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்கவில்லை, கிடைத்தவுடன் சரி செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்கவே கிடைக்காது. இஞ்சின் பூராவும் பழுதடைந்துவிட்டது. இனிமேல் இதை மாற்றி அமைப்பது என்பது முடியாது. இதைப்பற்றி ஜில்லா டெவலெப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் சொல்லியிருக்கிறேன். ஆகவே உடனடியாக இந்த இனத்தவர்களுக்கு என்று தனியாக ஒரு "வில்லிஸ் ஸ்டேஷன் வாகன்" வாங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவில் மிகவும் பிற்பட்ட சமூகத்தினராக இருக்கும், நான் சேர்ந்திருக்கும் படகா சமூகத்தை "மலை ஜாதியினர்" என்ற இனத்தின் கீழ் கொண்டுவாருங்கள் என்று கேட்டிருந்தோம். எங்கள் பக்கத்தில் இந்த சமூகத்தில் ஏழ்மை அதிகமாக இருக்கிறது. பொருளாதார துறையில் இவர்களிடம் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை: ஆகவே மலைஜாதியில் சேர்த்து சலுகைகள் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருந்தோம். ஆனுல் திடீரென்று, லிஸ்டைப் பார்த்தால், படகா சமூகத்தினரை "அதர் பாக்வேர்ட் கம்யூனிட்டி" என்று காட்டியிருக்கிறுர்கள். யாரைக் கேட்டுக்கொண்டு இவ்விதம் திருத்தினுர்கள் என்று தெரியவில்லை. படகா சமூகத்தினர் "எலிஜிபில் கம்யூனிட்டியாக இருந்தவர்களை இப்போது "அதர் பாக்வேர்ட் கம்யூனிட்டி" என்று சேர்ப்பதற்கு யாரையும் ஆலோசனை கேட்டுக்கொள்ளவில்லை. இது முறையல்ல. ஆகவே படகா சமூகத்தினரை "எலிஜிபில் கம்யூனிட்டியாக" காட்ட வேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன நலத் துறை மான்யக் கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன்.

இந்த ஹரிஜன முன்னேற்றத் திட்டகமானது நமது மாநிலத்திலே
12-50 p.m. செவ்வனே நடைபெற்று வருகிறது. அதற்காக இந்தத் துறை அமைச்சருக்கும் இலாகா அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது இந்தத் துறையில் கொடுக்கப்படும் ஸ்டேட், சென்ட்ரல் ஸ்காலர்ஷிப்புக்காக, பிற்போக்கான இனத்தவருக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் கம்மியாகக் காணப்படுவதால் அது அதிகமாக ஒதுக்கப் படுவதோடு, இதில் என்.ஜி.ஓ.க்கள், வில்லேஜ் ஆபீஸர்கள் ஆகியவர்களின் குழந்தைகளுக்கு என கணிசமான தொகை ஒதுக்கப்படவேண்டுமென்றும், மேலும் ஃபர்ஸ்ட் கிளாஸ், செகண்டு கிளாஸில் பாஸ் செய்கிற ஹரிஜன எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்களுக்கு கோல்ட் அண்டு சில்வர் மெடல்கள் கொடுப்பது மாதிரி பிற்பட்ட ஜாதியினரைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கொடுத்து அவர்களை ஊக்குவிக்கவேண்டுமென்றும், ஒவ்வொரு தாலுகா ஹெட் க்வார்ட்டர்ஸிலும் ஹரிஜன கேர்ல்ஸ் ஹாஸ்டல் ஆரம்பிக்க வேண்டுமென்றும், வீடு கட்டும் திட்டமானது சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் நீடிக்கப்படவேண்டுமென்றும், சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்தும் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப் படும் வட்டியில்லாக்கடன் தொகையை மான்யத் தொகையாக மாற்றி அமைக்க வேண்டுமென்றும், 500 ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு ஹரிஜன காலனிக்கும் அறிவு வளர்ச்சிக்காகவும், பொழுதுபோக்குக் காகவும் ஒரு ரேடியோவை அவர்களுக்குக் கொடுத்து வசதி செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், காண்டலா என்று ஒரு சமுதாயம் இருக்கிறது. அது பாக்வேர்ட் கிளாஸில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் தேவ காண்டலா என்ற சமுதாயம் ஃபார்வேர்ட் கிளாஸில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த

24th July 1962] [திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்]

இரண்டு சமுதாயத்திற்கும் எந்த விதமான வித்தியாசமும் இல்லாமல் இருப்பதால் தேவ காண்டலா சமுதாயத்தை பாக்வேர்ட் க்ளாஸில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. ஏ. எஸ். தட்சிணுமூர்த்தி கவுண்டர் :** கனம் சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, இன்று வந்திருக்கிற ஹரிஜன மான்யக் கோரிக்கையை நான் வரவேற்கிறேன். காரணம், இதைப் போன்ற ஒரு புண்ணியமான காரியம் உலகத்திலே வேறு ஒன்று இருக்கவே முடியாது. இதில் அபிப்பிராய பேதமே இருக்காது என்று நினைக்கிறேன். அப்பர் சுவாமி சொன்னுர் :—

" அங்கமெலாம் குறைந்து அழுகு தொழு நோயராய்
ஆ உரித்துத்தின்று உழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே ".

அந்தப் பாசுரத்தின் பொருள் என்னவென்றால், மனிதனிடத்திலே ஒரு நல்ல பண்பு வளர்ந்துவிட்டதேயானல் இந்த உயர்வு–தாழ்வு என்கிற பேதாபேத உணர்ச்சி இயற்கையாகவே மறைந்து விடும் என்பது தான். அந்த வகையிலே பார்க்கும்போது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் அடிமைப்பட்டும் அவல நிலையிலும் கிடந்த மக்களின் நிலையை கொஞ்ச ஆண்டுகளுக்கு முன் வந்த காந்திஜி அவர்களால்தான் புரிந்து கொள்ள முடிந்தது. காரணம், அவர்கள் ஒரு அருளாளர் ஆனதால் அந்த விதமான அருள் உணர்ச்சி வந்தது. அவர்கள் இந்த ஹரிஜன மக்கள் முன்னேறக்கூடிய வழிவகைகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அரும்பாடுபட்டார்கள். அதைக் குறிப்பிடுவதற்காகவே அவர்களால் நடத்தப்பட்ட வார சஞ்சிகைக்கு " ஹரிஜன் " என்று பெயர் வைத்திருந்தார்கள். ஹரிஜன மக்களை இந்த சட்ட மன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்வது, இரவில் படுக்கப்போகும்போது காந்திஜி அவர்களைச் சற்று நினைத்துவிட்டுப் படுக்கவேண்டும் என்பதாகும். " நினைத்துப் படுங்கள் " என்று சொல்வது வழக்கம். அந்த முறையில் அவ்வளவு கடமைப்பாடு உண்டு காந்திஜி அவர்களின் பேரில். அவர் இல்லாமல் போயிருந்தால் ஹரிஜன மக்களுக்கு முன்னேற்றமே ஏற்பட்டிருக்காது என்று நான் சத்தியமாகக் கூறுகிறேன். இதை எந்தக் கோயிலில் வேண்டுமானலும் போய்ச் சொல்லலாம். காந்திஜியிடத்தில் இருந்து வந்த தத்துவம் காங்கிரஸ் மகா சபையின் வேலையாகப் பிரதி பலித்தது. அப்படிப் பிரதிபலித்த சக்தியை காங்கிரஸ் வாயிலாக இயங்கும் அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இந்த ஆண்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி கொஞ்சம் குறைவு என்றே கருதுகிறேன். இன்னும் கொஞ்சம் அதிகமான தொகையை ஹரிஜன முன்னேற்றத்திற்கு ஒதுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் குறைந்தது 25 ஆண்டு காலத்திற்காவது இந்த மாதிரி வழிவகைகள் அமைத்தால்தான் சற்று அளவுக்காவது ஹரிஜன மக்கள் முன்னேற்ற மடைவார்கள் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமாக கல்வி வகை, அடுத்து பொது சுகாதார வகை இவைகளில் முன்னேற்றம் 1–8 பங்குதான்—பாவனையில் இருக்கிறது. இன்னும் 7–8 பங்கு முன்னேற்றம் அடைய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். பொது சுகா தார அமைப்பு, பொருளாதார வழிவகைகள் ஆகியவைகளிலெல்லாம் அதிகமான அளவில் முன்னேற்றம் ஏற்பட முயற்சி செய்தால்தான் முடியும் என்ற நிலை இருப்பதை அரசாங்கம் உணர்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சட்டத்தின் மூலமாக கலப்பு மணம் கொண்டு வந்தால் பரவாயில்லை என்று ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். கண்டிப்பாக இதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அவர்களுக்காக உணர்வு வரவேண்டுமே தவிர, ஒரு பையனைப் பார்த்து இந்தப் பெண்ணை மணம் செய்துகொள் என்றோ, ஒரு பெண்ணைப் பார்த்து இந்தப் பையனை மணம் செய்துகொள் என்றோ சொல்ல முடியாது. சட்ட வாயிலாக

முடியாது. இதையெல்லாம் அவரவர்கள் உணர்ந்து, அனுபவ வாயிலாக நடக்கவேண்டும். நல்ல சூழ்நிலை ஏற்பட்டு இந்த மக்கள் நல்ல பண்புகளை, நல்ல கல்வியை, நல்ல சுகாதாரத்தை பெற்று வளர்த்துக்கொண்டால் இயற்கையாகவே அந்த நிலைமை வந்து விடும். ஆகையால் நல்ல பண்புகளை ஹரிஜன மக்களிடத்தில் உருவாக்கும் முறையில் நமது காரியங்கள் அமையவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இன்னும் சற்று அதிகமான தொகையை ஒதுக்க வேண்டுமென்று கூறி எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. அ. துரைசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஹரிஜன நல இலாகா மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்று தமிழ் நாட்டிலே 1,123 பள்ளிகள் ஹரிஜன நல இலாகாவினால் நடத்தப்படுகின்றன. இதில் 832 ஹரிஜன நலப் பள்ளிகள், 257 ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் பள்ளிகள், 34 ஆதிவாசிகள் பள்ளிகள், ஆக, மொத்தத்தில் 1,123 பள்ளிகள் ஹரிஜன நல இலாகாவினால் நடத்தப்படுகின்றன. அந்தப் பள்ளிகளை சமீபத்தில் பஞ்சாயத்து யூனியன்களிடத்தில் ஒப்படைத்து விடலாம் என்று கருதுவதாகக் கேள்விப்பட்டேன். ஹரிஜன நல இலாகாவே நடத்துகிற காரணத்தினால் அங்கு இருக்கிற பெற்றோர்களும், அந்தப் பள்ளிகளில் வேலை செய்கிற ஆசிரியர்களும் ஹரிஜன மக்களாகவே போடப்படுவதால், "நம் சமுதாயத்திற்காக இந்தப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன" என பெற்றோர்களும், ஹரிஜன மாணவர்களின் முன்னேற்றத்திற்குத்தான் வேலை செய்கிறோம் என ஆசிரியர்களும் முயற்சிக்கின்ற காரணமாக அதிக அளவில் குழந்தைகள் பள்ளிக்கு படிக்க வந்து அவர்கள் முன்னேற வாய்ப்பு இருக்கிறது. ஆகையால் இந்தப் பள்ளிகளை பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றாமல், ஹரிஜன நல இலாகாவே நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழ்நாடு பூராவிலும் 303 ஹாஸ்டல்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு 21 ஹாஸ்டல்களைத் திறக்கப் போவதாகவும் சொன்னார்கள். மிக மகிழ்ச்சி. மேலும் இன்னும் அதிக அளவுக்கு ஹாஸ்டல்களை வசதியுள்ள இடங்களிலெல்லாம் ஏற்படுத்தி தகுதியுள்ள ஹரிஜன மாணவர்கள் அதிகப்படியாக ஹாஸ்டலில் சேர்ந்து படிக்க வசதி செய்யவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் குறிப்பாக எனது தாலுக்காவில் ஆரகளூர், தம்மம்பட்டி, பெத்துநாயகன்பாளையம் ஆகிய மூன்று இடங்களிலும் ஹாஸ்டல்களை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹாஸ்டலில் மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ரூ. 15 இந்த ஆண்டு முதல் ரூ. 16 ஆக உயர்த்தப்பட்டிருந்தாலும் இந்த உயர்த்தப்பட்ட தொகை போதாது. குறைந்தபட்சம் ரூ. 20 அல்லது 25 கொடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன மக்கள் முன்னேற வேண்டுமென்று சொன்னால் கல்வியில் மாத்திரம் முன்னேறினால் போதாது. பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டும். அப்போதுதான் சமுதாயத்தில் புதிய மாறுதலைக் காண முடியும். ஒவ்வொரு ஜில்லாவின் தலைநகரிலும் குறைந்தது 500 ஹரிஜன மாணவர்களுக்கு தொழிற் நுணுக்கப் பயிற்சி அளிக்க பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு அவர்களுக்கு கட்டாயம் வேலை வாய்ப்பும் அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு பூராவும் பரவலாக சிறுசிறு கைத்தொழில்கள் ஏற்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான பங்குத் தொகையை சர்க்காரே கொடுத்து அதிலே உற்பத்தி செய்யப்படுகின்ற சரக்குகளை வாங்குவதற்கோ, அல்லது விற்பதற்கோ உண்டான பொறுப்புக்களையும் இந்த சர்க்காரே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே விவசாய நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்கங்கள் இன்று இந்த ஹரிஜன இலாகாவால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த விவசாயப் பண்ணைகள் உண்மையிலேயே ஏழை

களாக உள்ள நிலமில்லாத விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு இன்றையத் தினம் நல்ல முறையிலே அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டத்தை உடனடியாக தமிழ்நாடு பூராவுக்கும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்பது என்னுடைய கருத்தாக இருந்தாலும், ஆத்தூர் தாலுகாவிலே சுமார் 22 பண்ணைகள் ஆரம்பிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டு, சென்ற ஆண்டு சுமார் 7 பண்ணைகளே ஆரம்பிக்கப்பட்டிருப்பதால், உடனடியாக எல்லாப் பண்ணைகளையும் ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மற்றொரு கருத்து என்னவென்றால், இப்போது எங்கள் தாலுகாவில் தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தினால், அவைகளை மொத்தமாக சேர்த்து மேலும் இதுபோன்ற பண்ணைகள் ஆரம்பிக்க சர்க்கார் முன்வரவேண்டுமென்பதாகும். அதோடு மட்டுமல்ல, கூட்டுறவு முறையிலே ஹரிஜனங்கள் சேர்ந்து பஸ் ரூட் கொடுக்கவேண்டுமென்று கேட்கின்றபோது, ஹரிஜனங்களுக்கு பஸ் பர்மிட் கொடுப்பதற்கு எவ்வித விசேஷ சலுகையும் இல்லாத காரணத்தினால், அவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, இப்படி ஹரிஜனங்கள் கூட்டுறவு முறையிலே விண்ணப்பித்துக் கொண்டால், அதற்கு முதற் சலுகை கொடுக்க வேண்டுமென்று சட்டத்தை திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின்மீது நான் பேசும்போது, ஹரிஜனங்களுக்கு செய்ய வேண்டிய எல்லாத் தேவைகளையும், அவர்களுக்குச் செய்ய வேண்டிய எல்லா வசதிகளும் பூராவாக செய்யவேண்டும், அதற்குத் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. அதிலும், முக்கியமாக இடம்பெற வேண்டியது குடியிருப்பு மனை வசதியாகும். இந்தக் குடியிருப்பு மனை வசதி இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலேயும் நிறைய செய்யப்பட்டிருக்கின்றது என்று பெருமைபட சொல்லப்படுகின்றது. ஆனால், அதற்குப் போதுமான புள்ளி விவரங்கள் கிடையாது. எவ்வளவு பேர்களுக்கு வீட்டு வசதி இன்னும் போதாது, எவ்வளவு பேர்களுடைய குறைகளை இதுவரையிலே நாம் போக்கி இருக்கிறோம் என்பதற்கான புள்ளி விவரம் கிடையாது. இவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, இவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது, இவ்வளவு ஏக்கர் நிலம் இதுவரையிலே ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது, அதனாலே, இவ்வளவு பேர்கள் பயனடைந்து இருக்கின்றார்கள் என்பதற்கான சரியான புள்ளி விவரங்கள் கிடையாது. இதுதான் அடிப்படையான ஒரு குறை என்பது என்னுடைய அபிப்பிராயம். அதிலும், ரொம்ப மந்தமாக சட்டத்திலே இருக்கக்கூடிய கோளாறுகள், நிலவரம் ஆகியவற்றை எல்லாம் எடுத்துக் கூறினார்கள். அதற்கான நடவடிக்கைகளை எல்லாம் துரிதமாக எடுத்துக்கொள்வதோடு, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே அரசியல் சட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறபடி திட்டங்கள் நிறைவேற வேண்டுமென்று சொன்னால், சில குறிப்பிட்ட பிரச்னைகள் பூர்த்தியாக தீர்க்கப்பட்டு இருக்கவேண்டும். அரசாங்கம் போகிற வேகத்திற்கும், இன்றைக்கு ஜனத்தொகை பெருகிக்கொண்டு போகும் நிலைமைக்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது அரசாங்கம் செய்கின்ற நன்மைகள் மூலம் யாராவது பயனடைய முடியுமா என்பது சந்தேகம்தான்.

பல கிராமங்களுக்கு மனைக்கட்டுக்கள் வழங்கியிருக்கிறோம் என்று சொன்னாலும், இன்னும் பல கிராமங்கள் இந்த மனைக்கட்டு வசதிகள் இல்லாத நிலைமையிலே இருக்கின்றன. ஆகவே இன்னும் வேகமாக நாம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இதிலே இந்த நிலைமைகள் புரியாமல் மேலும் சட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கிறோம். நஞ்சை நிலமாக இருந்தால் அதை வாங்குவதிலே கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் வாங்கக் கூடாது என்று உத்திரவு போடப்பட்டிருக்கிறது. இதிலே என்ன ஆகிறதென்றால் கொஞ்சம் அதிகமாக நஞ்சை நிலம் வாங்க வேண்டுமென்றால்கூட மிகவும கஷ்டமாக ஆகிவிடுகின்றது. ஆகவே எங்கே மோசமான நிலம்

இருக்கிறது என்று தேட வேண்டியிருக்கின்றது. அப்படி அவர்களுக்கு நிலங்கள் கொடுக்கும்போது, சமுதாயத்திற்கு வசதியான இடத்திலே, அவர்கள் வேலைசெய்யக்கூடிய இடங்களுக்கு அருகாமையிலே நாம் ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்க வேண்டுமென்பது நமது நோக்கமாக நாம் கொள்ளவேண்டும். வேலை செய்கிற இடத்திற்கும், குடியிருப்பு மனைக்கும் இடையே 5 மைல் 6 மைல், என்று தூரம் இருக்குமானால் அவர்கள் வேலைக்கு வருவது எப்படி ? அவர்கள் சமுதாயத்திற்கு எப்படி தங்கள் கடமைகளைச் செய்ய முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகளிலே நாம் ஈடுபடுவது கிடையாது. அதுவும் டவுன்புறத்திலே எடுத்துக்கொண்டால், திருச்சி, கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய எனக்கு நேரடியான அனுபவமுள்ள டவுன் புறங்களை எடுத்துக்கொண்டால், ஹரிஜனங்களுக்கு எப்படி குடியிருப்பு மனை விஸ்தரிப்புச் செய்யப்படுகின்றது என்று பார்த்தால், அவர்கள் இருக்கக்கூடிய இடங்களிலே இருந்து அவர்கள் காலி செய்யப்பட்டு, வசதி படைத்தவர்களுக்கு, பணக்காரர்களுக்கு அந்த நிலங்கள் கொடுக்கப்படுவதைத்தான் நாம் பார்க்க நேரிடுகிறது. அவர்களை மேல் ஜாதிக்காரர்கள் என்றுகூட நான் சொல்லவில்லை. பணக்காரர்கள், வியாபாரம் செய்வதற்கு வேண்டிய நிலம் கொடுப்பதிலே எடுத்துக் கொள்ளப்படும் சிரத்தை இவர்கள் விஷயத்திலே எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. இப்படி அவர்களுடைய குடியிருப்பு மனைகளை 10 மைல் தொலைவுக்கு கொண்டுபோய் போட்டால், அவர்கள் வேலைக்கு எப்படிப் போவார்கள் ? நாம் என்ன இலவசமாகவா அவர்களுக்கு பஸ் வசதி செய்து கொடுத்திருக்கிறோம் ? அப்படி வாங்கிக் கொடுப்பதிலும், முனிசிபாலிடியார் ஒரு சதவிகிதம் பணம் கொடுக்க வேண்டுமென்கிற நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அப்படி முனிசிபாலிடியார் வாங்கிக் கொடுப்பதிலும், அரசியல் வந்து புகுந்து விடுகின்றது. இதையெல்லாம் அரசியல் பிரச்னையாக ஆக்காமல் நகரப்புறத்திலே, குடியிருப்பு மனை வழங்குவதிலே குறிப்பாக இதுபோன்ற ஹரிஜனங்களுக்கும் பின்தங்கிய நிலையிலே உள்ளவர்க்கும் குடியிருப்பு மனைகள் வாங்கிக் கொடுப்பதிலே நல்லமுறையிலே கவனம் செலுத்தவேண்டும். அதாவது அவர்கள் வசிக்கக்கூடிய காலி நிலத்தை அவர்களுக்கே கிடைக்க வழிசெய்ய வேண்டும் ; அவர்களுக்கே வாங்கிக் கொடுக்கவேண்டும். தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான இடத்திலே ஹரிஜனங்கள் 50, 60 வருஷ காலமாக இருந்துகொண்டு வருகின்றார்கள். ஆனால், இப்போது நகரத்திலே இப்படிப்பட்ட இடங்களிலே, குடியிருப்பு மனைகளிலே இருந்து வெளியேற்றுவதைத் தடுப்பதற்கான சட்டம் இருந்தாலும், தனிப்பட்டவர்கள் அந்த நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்றுவதற்காக, அப்புறப்படுத்துவதற்காக பல தொந்திரவுகள் கொடுக்கின்றார்கள். கக்கூஸ் வசதி செய்து கொள்ள அனுமதிப்பதில்லை; விளக்குகள் வசதிசெய்து கொடுப்பதற்கு அவர்கள் முற்படுவதில்லை; ஆகவே இதற்கு நியாயமான ஒரு சட்டம் வேண்டுமானாலும் கொண்டுவந்து, தனிப்பட்டவர்களுடைய இடங்களிலே குடியிருப்போருக்கு வேண்டிய கக்கூஸ் வசதி, விளக்கு வசதி, குடிதண்ணீர் வசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அங்குள்ள மாவட்ட கலெக்டருக்கு அதிகாரம் கொடுத்து, அந்த அளவிற்கு அவர்கள் இந்த நிலங்களை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டும். இந்த வசதிகளை தனிப்பட்டவருக்குச் சொந்தமான ஸ்லம் இடமாக இருந்தாலும், அரசாங்கத்திற்குச் சொந்தமான ஸ்லம் இடமாக இருந்தாலும் செய்து கொடுக்கலாம். இப்பேர்ப்பட்ட தனிப்பட்டவர்களுடைய ஸ்லம் நகரங்களிலும் இருக்கின்றன. அங்கெல்லாம் அவர்கள் அடிமனைக்கு நிறைய குடக்கூலி தரவேண்டுமென்று கேட்டு வாங்குகின்றார்கள். அதிலும் இப்படிப்பட்ட பல தொந்தரவுகள் அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. ஆகவே இதற்கான நடவடிக்கைகள் அது கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்னொரு பிரச்னை. ஹரிஜன சமுதாயத்தைப்பற்றி நாம் எவ்வளவோ அனுதாபத்தோடு, எவ்வளவோ நல்ல காரியங்களைச்செய்த போதிலும்கூட, அவர்களுக்கு சமுதாயத்திலே இருக்கக்கூடிய தாழ்ந்த நிலைமையை போக்க

24th July 1962] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

வேண்டுமென்பதே நம்முடைய உயர்ந்த லட்சியமாக இருக்கவேண்டும். எந்த அளவிற்கு இதிலே ஹரிஜன இலாகா நமது மாநிலத்திலே பணி புரிந்திருக்கிறது, அதை நிவர்த்தி செய்ததிலே என்னென்ன நன்மைகள் உண்டாயிற்று, கெடுதல் உண்டாயிற்று என்று அறிவித்திருந்தால், நாம் அதை புரிந்து கொள்ள முடியும். இருந்தாலும், மற்ற நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிட்டு பார்க்கின்றபோது நாம் தலைகுனிய வேண்டிய நிலையிலே இல்லை. அமெரிக்காவை எடுத்துக் கொண்டாலும்கூட, அங்கு நீக்ரோக்களைக் கண்டால் மிகவும் கொடுமைப்படுத்துகின்றார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலே அப்படிப்பட்ட நிலைமை இல்லை. ஆனால் நாம் இந்த நிலைமையைக்கூட இன்னும் உயர்த்த வேண்டுமென்பதற்காக இப்போது வேலை செய்கிறோம். அரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக தீண்டாமை ஒழிப்பு சட்டத்தை இயற்றியோ அல்லது அதை அமுல் நடத்துவதற்கு போலீசை வைத்தோ கோர்ட்டிலே வைத்தோ நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட முடியுமென்கின்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஆனால் அதற்கான பிரசாரத்தை, அதற்கான மனோபாவத்தை பொதுமக்களிடையே உண்டாக்குவதற்கு நாம் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். ஹரிஜன வாரமென்றோ ஹரிஜன தினம் என்றோ நாம் கொண்டாடுவதின் நோக்கம் சரியாக இருக்கலாம். ஆனால், அதைச் சேரியிலே கொண்டாடுவதால் பயனில்லை. பொதுமக்கள் வசிக்கக்கூடிய இடத்திலே அப்படிப்பட்ட விழாக்கள் கொண்டாடவேண்டும். ஹரிஜன் கோவிலுக்கு போகாமல் இருக்க விரும்பவில்லை; அதைப்போல் அவன் தீண்டாமையும் ஒழியவேண்டுமென்றுதான் விரும்புகின்றான். அவர்கள் இதையெல்லாம் செய்வதற்கு தயாராக இருக்கின்றார்கள். ஆனால், அதை மற்றவர்கள் செய்ய விடுவதற்குத்தான் தயாராக இல்லை. ஆகவே, இந்த மனோபாவம் அவர்களுக்கு ஏற்படுவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, செக்டேரியன் என்கின்ற அளவிலேதான் இந்த ஹரிஜன சமுதாயம், மற்றவர்களும் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இதை அரசாங்கம் உணராவிட்டால், நம் நாட்டிலே தேச ஒற்றுமை ஏற்படவேண்டுமென்பதற்கு பதிலாக கிராமத்திற்குக் கிராமம் இப்படிப்பட்ட ஒரு தவறான நிலைமைதான் ஏற்படும் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

இதைத்தவிர சிலர் இதிலே அரசியல் காரணத்திற்காக பயன்படுத்திக் கொள்கின்றார்கள். குறிப்பாக, தாழ்த்தப்பட்டோர் லீக் என்ற வைத்துக் கொள்ளப்பட்டு அதற்காக பணம் ஒதுக்கப்படுகின்றது. இதிலே சில கனம் அங்கத்தினர்களும் சம்பந்தப்பட்டு இருக்கலாம். ஆனால் இதை விருப்பு வெறுப்பு இல்லாமல் பார்த்து பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இதை எப்படி பரிசீலனை செய்யவேண்டுமென்பதை பார்க்க வேண்டும். உயர்ந்த ஜாதியினர் என்று கருதுகின்ற மனப்பான்மையை நாம் போக்கியாகவேண்டியது மிகவும் முக்கியமானது. ஹரிஜனங்களாக இல்லாமல் வறுமையிலே வாடுகின்ற எத்தனையோ பேர்கள் இருக்கின்றார்கள். பொருளாதாரத் துறையிலே பின்தங்கிய சமூகத்தார் எத்தனையோ பேர்கள் இந்த நாட்டிலே இருக்கின்றார்கள். திருச்சி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அங்கு எத்தனையோ முத்துராஜாக்கள் வாழ வழியன்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இன்னும் இதைப்போல் எத்தனையோ பேர்கள் பின்தங்கிய நிலைமையிலே இருக்கின்றார்கள். ஆனால், அவர்களிடத்திலே இந்த வேற்றுமை மனப்பான்மை இருக்கின்றது. அவர்கள் பொருளாதாரத்துறையிலே தாங்கள் தாழ்ந்து இருந்தாலும், சமுதாயத்திலே தாழ்ந்தவர்களாக நினைக்கவில்லை. ஆகவே சமுதாயத்திலே உள்ள இந்த இழிந்த நிலைமையைப் போக்கி, அவர்களிடத்திலே நல்லெண்ணத்தை ஏற்படுத்த வேண்டும். கல்வித்துறையிலே முன்னேறி விட்டால், பொருளாதாரத் துறையிலே முன்னேறிவிட்டால் இதெல்லாம் தானே தீர்ந்துவிடும் என்று சொல்கின்றார்கள். ஓரளவு தீருமே ஒழிய, முழுதும் போகும் என்கிற நம்பிக்கை எனக்கு இல்லை. அரிஜன் வக்கீலாக இருந்தால், அவரிடம் எத்தனை கேஸ்கள் கொண்டு போகப்படுகின்றது? ஹரிஜன் ஒரு அதிகாரியாக பதவியிலே இருந்தால், அவரிடம் பழகுகின்ற முறை எப்படி என்பதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும். இழிவுமுறை போகவேண்டுமென்பதுதான் முக்கியம்.

ஜாதியில் இழிவு என்கின்ற மனப்பான்மையை போக்காமல் எவ்வித நன்மையையும் ஹரிஜனங்களுக்கு செய்ய முடியாது, செய்தவர்களாக ஆக மாட்டோம். இவ்வளவு பணம் செலவு செய்தும், இவ்வளவு விசேஷ கவனம் செலுத்தியும், இதற்காக ஒரு தனி இலாகா ஏற்படுத்தப்பட்டும், ஹரிஜனங்கள் ஜாதியில் இழிவு என்ற மனப்பான்மையை போக்காவிட்டால் ஒன்றும் பலனில்லை. அந்த இலாக்கா முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அதிகாரிகளை போதுமான அளவுக்கு போட்டிருக்கிறார்கள். சில பேர்களுக்கு பதவி உயர்வு இல்லையே என்றுகூட சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் ஒரு பக்கத்தில் இருக்கட்டும். வேறு துறைக்கு லாயக்கு இல்லாதவர்களை, ரெகுலர் தாசில்தாராக ஓடியாடி வேலை செய்யமுடியாதவர்களை ஹரிஜன நல இலாகாவுக்கு தள்ளிவிடக் கூடாது. ஹரிஜன நல இலாகாவுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அந்தத் துறையை உபயோகப்படுத்தி மேல் ஜாதி தாழ்மையான ஜாதி என்ற வித்தியாசத்தை போக்ககூடிய முறையில் அந்த இலாகா பணிபுரிந்திருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். அதற்குப் பதிலாக நாம் என்ன பார்க்கிறோம்? போட்டியைத்தான் பார்க்கிறோம். ஷெட்யூல்டு காஸ்ட் லிஸ்டில், சேருவதற்கு போட்டி இருக்கிறது. நோக்கம் என்ன? சர்க்கார் கொடுக்கும் சலுகைகளை எப்படி பெறலாம் என்பதுதான். ஹரிஜனத்தெருவில் 3 செண்டு நிலம் கொடுத்தால்கூட போதும் என்று நினைக்கிறார்கள். பொருளாதாரத்துறைக்குத்தான் முக்கியமே தவிர, வேறு ஒன்றுமில்லை. அப்பொழுது ஜாதி இழிவு என்ற எண்ணம் போய் சலுகை வரக்கூடிய காரணத்தினால், சர்க்கார் கொடுக்ககூடிய வசதிகளைப் பெறவேண்டுமென்பதற்காக உயர்ந்த ஜாதியினர்களுக்குக்கூட தங்களையும் ஷெட்யூல்டு காஸ்டு லிஸ்டில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் வருகிறது. இது நல்லெண்ணம் அல்ல. அம்மாதிரி ஒரு கெட்ட மனோபாவம் வருகிறது. அதற்கு சர்க்கார் கொள்கைதான் ஓரளவுக்குக் காரணம். வறுமையை நீக்கவேண்டிய பிரச்னை வேறு. ஜாதி இழிவை நீக்கக்கூடிய பிரச்னை வேறு. வறுமை போய்விட்டால் உடனே ஜாதி இழிவும் போய்விடும் என்று நாம் நினைக்கக்கூடாது. யார் இழிவாக வைக்கப்படுகிறார்களோ அவர்களிடம் அந்த இழிவான மனப்பான்மை போகவேண்டும். மற்றவர்களும் அவர்களை இழிவாக நினைக்கக்கூடிய அகம்பாவமும் போகவேண்டும். அந்த விதத்தில் அரசாங்கம் பிரச்சாரம் செய்யவேண்டும். ஹரிஜன இலாகா சேவக்குகள் நல்ல முறையில் அவர்கள் பணியை செய்யவில்லை. அவர்களைக் கண்டால் கிராமத்தில் தூண்டிவிடுகிறவர்கள் என்று நினைக்கிறார்கள். வேண்டுமானால் விசாரணை நடத்துங்கள், நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டு வழங்குவது முதலிய விஷயங்களில் ஒருவருக்கொருவர் சண்டை மூட்டிவிட்டு வீட்டிற்கு இவ்வளவு வரி என்று வைத்து, அம்மாதிரி வரி விதித்து வசூல் செய்து, அமைச்சர்கள் வரும்பொழுது அதிகாரிகளைப்பற்றி குற்றம் சொல்லி, அரிஜனத் தெருவில் கட்சிப் பிரதிகட்சி உண்டாக்கி, தெருவையே ஒரு கூறு 2 கூறு, 3 கூறாகப் பிரித்து அம்மாதிரியெல்லாம் செய்துகொண்டிடிருக்கிறார்களே தவிர, ஒன்றும் ஹரிஜனங்களுக்கு வேண்டிய நன்மையைச் செய்யவில்லை. அரசியல் காரணத்திற்காக அவர்களை பயன்படுத்துகிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஹரிஜனங்களுக்கு நன்மை கிடையாது. ஹரிஜனங்களின் பெயரைச் சொல்லி, அரசியல் காரணங்களுக்காக தலையிடுவதற்கு அவர்களை பயன்படுத்தக்கூடாது என்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். மேலும் நேரம் இல்லாததால், நான் விரிவாகப் பேச முடியவில்லை. ஆகவே இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*** திரு. சா. கணேசன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த தேசத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்போக்கான நிலையில் உள்ளவர்களுக்கும், குறைபாடுகள் உடையவர்களுக்கும் வேண்டிய வாய்ப்புகளை, வசதிகளைச் செய்து தருவது ஆட்சியின் தலையாய கடமை என்பதை உணர்ந்து செயல்பட்டு வருகிற ஒரு இலாகாவிலே மேற்கொள்ளப்பட வேண்டிய முறைகளையும், ஆங்காங்கு காணப்படுகிற குறைகளையும் கூறுவது தான் இப்பொழுது எனது நோக்கம்.

24th July 1962] [திரு. சா. கணேசன்]

இந்த தேசத்தில் "பிறப்பால் உயர்வு, தாழ்வு உண்டா இல்லையா" என்பதற்கெல்லாம் சுருதி, யுக்தி, அனுபவபூர்வமாக வாதிட வேண்டிய காலம் மலையேறிவிட்டது. பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை என்பதை இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவனும் அல்லது ஒவ்வொருத்தியும் நன்றாக உணர்ந்து ஏற்றுக்கொண்டு விட்டார்கள், கொஞ்சம் இன்னும் மனத்திலே சிலருக்கு சாதி உணர்வு இருந்தாலும் கூட. ஆதலினாலே, அந்தத் துறைகளில் இப்பொழுது நான் நீளப் பேசி கால விரயம் செய்ய விரும்பவில்லை. குறிப்பாக பார்ப்போமானால், ஒன்றை நான் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். ஆட்சி நெறியிலும்கூட கொஞ்சம் நாம் பிரித்து வைக்கிற மனோபாவம் கொண்டிருக்கிறோமா என்று ஐயுறும்படியான போக்கு காணப்படுகிறது. என்னுடைய அழுத்தமான நம்பிக்கை என்னவென்றால், ஹரிஜனங்களை–காலனி என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள், சேரி என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்—தனியாக அங்கு அவர்களை ஒதுக்கி வைக்கக் கூடாது என்பதுதான். காரைக்குடியில் ஒன்றாக இருந்துகொண்டிருந்தவர்களை, ஒரு பகுதியினரை பிரித்துக்கொண்டு போய் ஊரை விட்டு 4 மைல்களுக்கு அப்பால் ஹரிஜனக் காலனியில் வைத்து விட்டார்கள். இது தீமை. ஒருவருக்கொருவர் உறவாட முடியாமல் வெட்டப்படுகிறது. இது ஒழிக்கப்படவேண்டும். இதற்கு ஒரு சுலபமான வழியை நான் சொல்லுகிறேன். எக்ஸ்டென்ஷன்ஸ், அதாவது புது நகரங்கள், வளர்ச்சிகள் என்று சொல்லுகிறோமே அங்கெல்லாம் 4 கிரௌண்டு 5 கிரௌண்டு, $\frac{1}{4}$ ஏகர், $\frac{1}{2}$ ஏகர் என்று பிராந்தியத்திற்குத் தக்கவாறு, இடத்திற்குத் தக்கவாறு தரத்திற்குத் தக்கவாறு, மனைகளைப் பிரிக்கிறோம், டவுன் பிளானிங் ஆக்டை அடிப்படையாக வைத்துக்கொண்டு. அப்படிப் பிரிக்கின்ற பொழுது, 4 கிரௌண்டு என்று ஒரு உத்தேசத்திற்கு வைத்துக்கொள்வோம். 4 கிரௌண்டு பிளாட்டாகப் பிரிக்கிறோம் என்று வைத்துக்கொண்டால் ஒரு 10 பிளாட் அம்மாதிரி பிரித்தபிறகு, அடுத்தாற் போல 10 கிரௌண்டு கொண்ட ஒரு இடத்தை ஒவ்வொரு கிரௌண்டு கொண்டதாகப் பிரிக்க வேண்டும். அங்கே ஹரிஜன சகோதரர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும். ஹரிஜனங்களுக்குள்ளேயே பல தொந்தரவுகள் இருக்கின்றன. வடகலை, தென்கலை சண்டை மாதிரி ஹரிஜனங்களுக்குள்ளேயும் இருக்கிறது. எனக்கு அது நன்றாகத் தெரியும். நான் அந்தத் துறையிலே ஊறி வந்தவன். அந்த ஜாதிப் பெயரைச் சொன்னால் கஷ்டமாக இருக்கும். பள்ளருக்கு வீடு கட்டிக் கொடுத்தால் பறையருக்கு ஆத்திரம், பறையருக்கு வீடு கட்டிக் கொடுத்தால் பள்ளருக்கு ஆத்திரம், சக்கிலியருக்கு வீடு கட்டிக் கொடுத்தால் மற்ற இருவருக்கும் ஆத்திரம். இப்படி ஹரிஜனங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் ஆத்திரம் ஏற்படுகிறது. அவர்களுக்குள்ளே இருக்கிற பிளவு, பிரிவு, தாழ்மை உணர்ச்சி இவைகளைப் போக்குவதற்கு நாம் கடமைப்பட்டவர்கள் என்பதை மனத்தில் கொண்டு சட்ட ரீதியாக வழிவகைகள் காண முற்பட வேண்டும். புதியதாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் இடங்களில் ஹரிஜனங்களுக்குள்ளே இருக்கிற ஒருவருக்கு ஒரு வீட்டைக் கொடுக்க வேண்டும். அதற்கு அடுத்த வீட்டை ஒரு அய்யருக்குக் கொடுக்க வேண்டும். அதற்கு அடுத்த வீட்டை ஒரு முதலியாருக்குக் கொடுக்க வேண்டும். இப்படி ஒன்றுவிட்டு ஒன்றாக கலக்க வேண்டும். இதை பழைய இடங்களிலே செய்ய முடியாவிட்டாலும்கூட, புதிய இடங்களிலே, "எக்ஸ்டென்ஷன்ஸ்" ஆரம்பிக்கிற இடங்களிலாவது அரசாங்கம் இதைச் செய்வதற்கு என்ன முட்டுக்கட்டை இருக்கிறது என்று நான் கேட்கிறேன். அந்தக் காலம் தொடங்கியே கொஞ்சம் இம்மாதிரி செய்து வந்தோம். எங்களுக்குள்ள சக்தியைக்கொண்டு செய்து வந்தோம். இதேமாதிரி செய்வதற்கு நாம் முயலவேண்டும். இதைப்போல இன்னும் இவ்வளவு வளர்ச்சியும், உணர்ச்சியும், வாய்ப்பும் உள்ள இடங்களில் செய்யவேண்டும்.

காரைக்குடியில் ஹரிஜனங்களுக்கு இம்மாதிரி செய்ய முயற்சித்தோம். உங்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே ஹரிஜனச் சேரி என்று சொல்லுவதை நல்ல குடியிருப்பாக ஆக்கிச் செம்மையான வீடுகள் கட்டித் தருகிறோம் என்று பணத்தை வைத்துக்கொண்டு சொன்னோம். என்ன காரணத்தினாலோ என்னவோ, அந்தத் தொழிலாளிகள் அவர்களுக்குக் ஏன் வீடு கட்டிக் கொடுக்கிறீர்கள், அந்த இடத்தில் பரம்பரையாக நாங்கள்

வாழ்ந்து வந்திருக்கிறோம், இந்த இடத்தில் அவர்கள் பரம்பரையாக வாழவில்லை, அது எங்களுக்குத்தான் இருக்கவேண்டும் என்றெல்லாம் சச்சரவு செய்தார்கள். நிலம் அவர்களில் யாருக்கும் சொந்த மில்லை. பழைய வீடுகள் நெருப்பில் வெந்துபோய் விட்டன. நாங்கள் அங்கே வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொன்னால், அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது, இவர்களுக்குக் கொடுக்கலாம் என்று இம்மாதிரி நிர்ப் பந்தங்களெல்லாம் ஏற்படுகின்றன. வீடுகளுக்கு நடுவே 5, 6 அடி அகலம் உள்ள சந்துகள் தான் இருக்கின்றன. வீடுகளுக்கு நடுவே 20 அடி சந்து இருக்கும்படியான ரோடு போட்டு, வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொன்னால், அதற்கு அவர்கள் ஒத்துவரமாட்டோம் என்கிறார்கள். எவ் வளவு சேவை உணர்ச்சி இருந்தாலும், அதிகாரம் இல்லாமல் காரியம் செய்ய முடியவில்லை. "கம்பல்ஸரி அக்விஸிஷன்" செய்து பூராவும் இடித்து தரைமட்டமாக்கி வீடுகள் கட்டவேண்டியது தான். இரண்டு முறைகள் நெருப்பு பற்றிக்கொண்ட பொழுது, "பயர் என்ஜின்" உள்ளே போக முடியவில்லை. 4 அடி, 5 அடி சந்துகளில் "பயர் என்ஜின்" உள்ளே போய்வர முடியவில்லை. உள்ளே தண்ணீர்க் குழாயை கொண்டுபோவ தற்கு முன்னாலேயே வீடுகள் பூராவும் எரிந்து சாம்பலாகிவிட்டன. இது மாதிரி நிர்ப்பந்தங்கள் ஏற்படுகின்றன. இதையெல்லாம் மனத்தில் வைத் துக்கொள்ள வேண்டும்.

அதற்கு மேலே, காரைக்குடி காலேஜ் ஹாஸ்டல்களிலே முதலிலே நான் ஒன்று செய்தேன். எல்லா ஹாஸ்டல்களிலும் ஸர்வராக ஹரி ஜனங்களைப் போட்டுவிட்டோம். வருவதானால் "வா", வரவில்லையென்றால் "போ" என்று சொல்லிவிட்டோம் மாணுக்கர்களை. ஒவ்வொரு ஹாஸ்டலி லும் ஸர்வர்கள் ஹரிஜனங்கள்தான். இப்பொழுது கொஞ்சம் புதியதாகப் பலரும் இருக்கும்படி செய்திருக்கிறோம். அது வேறு விஷயம். இது மாதிரி எல்லா ஹாஸ்டல்களிலும் நாம் செய்ய வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். பெரிய ஹாஸ்டல்களிலெல்லாம் 10 பேர்கள் இருந்தால் ஒரு ஹரிஜனுக்கு கட்டணம் இல்லை என்று வைக்க வேண்டும். 10 முத லாளி மாணுக்கர்கள், வசதியுள்ள, வாய்ப்புள்ள மாணுக்கர்கள் 10 பேர்கள் இருந்தால் ஒரு ஹரிஜனையும் சேர்த்து 11 பேர்களுக்கு சாப்பாடு போட்டு, அந்த 10 பேர்களுக்குள் மொத்த செலவை "டிவைட்" செய்தால், அது ஒரு சுலபமான முறையாக இருக்கும். இதை மனத்திலே கொள்ளவேண்டும்.

அதற்கு மேலே, ஹரிஜன ஹாஸ்டல் என்பதை எடுத்துத் தொலைக்க வேண்டும். எல்லோருக்கும் சேர்த்து ஹாஸ்டல் வையுங்கள். ஹரிஜனங் கள், செட்டியார், முதலியார், அய்யர் எல்லோருக்கும் சேர்த்து, முஸ்லிம், கிறிஸ்தவர்—யாரையாவது விட்டுவிட்டேன் என்று சண்டைக்கு வந்துவிடப் போகிறார்கள்—எல்லோருக்கும் சேர்த்துப் பொதுவாக ஹாஸ்டல் வையுங் கள். தனியாக ஒரு ஜாதிக்கு என்று ஹாஸ்டல் வைப்பது, உலகம் அழியும் வரையில், ஊழிக்காலம் வரையில் இந்த ஜாதி முறை இருந்து கொண் டிருக்க வேண்டும் என்று நாம் இஷ்டப்படுகிறோம் என்று கூடச் சொல்லுவதற்கு இடமாகிவிடும்.

அதற்கு மேலே, ஹரிஜனங்களுக்குள்ளே க்ஷவரத் தொழிலாளர்கள் அடங்கவில்லை. அவர்கள் இன்னும் பிற்பட்டவர்களாகக் கருதப்பட்டு வரு 1-00 p.m. கிறார்கள். அவர்களுக்கு எந்த வாய்ப்பும் கிடையாது. காரைக்குடியில் முனிசிபல் எலெக்ஷன் நடந்த பொழுது, என்னுடைய வார்டில் ஒரு க்ஷவரத் தொழிலாளி வோட்டுக்கூட கிடையாது. அவர்கள் பெரும்பாலும் எல்லோரும் செட்டியார்களாக இருந்தார்கள். அங்கே அந்த க்ஷவரத் தொழிலாளியை நிறுத்தி வைத்தோம். அவருக்கு எதிராக நின்ற செட்டியாரை தோற்கடித்துவிட்டார். நான் இதை எதற்காக சொல்கிறேன் என்றால், இந்த மாதிரி நிலையிலே க்ஷவரத் தொழிலாளிகளுக்கு கஷ்டம் இருக்கிறது. ஒரு இடத்திலேகூட இந்த க்ஷவரத் தொழிலாளிகள் உரிமை யோடு தேர்தலில் நிற்பதற்கு நமது சட்டத்திலே இடம் கிடையாது. அதற்கு ஒரு வழிவகை செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

24th July 1962] [திரு. சா. கணேசன்]

அடுத்து இவர்கள் எல்லோரையும்விட பிற்பட்ட மக்களாக இருக்கிற வர்கள் என்னுடைய தொகுதியிலே இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நான் ஒரு கேள்வி போட்டு நான்கு மாதங்களாகிவிட்டன. ஆனால் அரசாங் கத்திடம் இருந்து எனக்கு வந்த பதிலில் "நீங்கள் சொல்லுகிற ஜாதி மக்கள் எங்கே இருக்கிறார்கள்" என்று என்னையே திருப்பிக் கேட்டிருக் கிறார்கள். அவர்கள் ''வலையர்'' என்று சொல்லப்படுகிறவர்கள். கனம் அமைச்சர் ராமையா அவர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும். அவர் களை "கண்ணப்பர் குலம்" என்றும் சொல்வார்கள். சிலர் "செட்டிநாட்டு வலையர்கள்" என்று அவர்களைச் சொல்வார்கள். அவர்கள் அங்கேயுள்ள ஆதிவாசிகள். அங்கேயுள்ள நிலத்திற்கெல்லாம் சொந்தக்காரர்கள். காட் டிலே வாழ்ந்து வந்தவர்கள். நாங்கள் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வந்தோம். ஆனால் இவர்கள் அங்கேயே வாழ்ந்து வந்தவர்கள். அன்று எந்த நிலைமையில் இருந்தார்களோ, இம்மிகூட உயராமல், இன்றும் அப்படியே இருக்கிறார்கள். ஒருவர்கூட படித்து ஒரு ஹைஸ்கூலிலாவது கிளார்க்காக இருக்கிறார் என்று சொல்ல முடியாது. அவர்கள் ஒரு துறையிலும் முன்வரவில்லை.

கனம் திரு. பூ. கக்கன் : அந்த வகுப்பிலிருந்து ஒருவர் படித்து இந்த இலாகாவில் டைரக்டராக இருந்திருக்கிறார். அவர் பெயர் முத்து இருளாண்டி என்பது. டைரக்டராக இருந்து இப்பொழுது நம்மைவிட்டுப் போய்விட்டார். இன்னும் எத்தனையோ பேர் டாக்டர்களாக இருக்கிறார்கள்.

திரு. சா. கணேசன் : கனம் மந்திரி அவர்கள், முத்து இருளாண்டி என்பவர் டைரக்டராக இருந்தார் என்று சொல்கிறார்கள். அவர் வலையரா, இல்லையா என்பது தெரியாது. கனம் மந்திரி சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் எங்கள் பகுதியிலே இருக்கிறவர்கள் ஒருவர்கூட முன்னுக்கு வரவில்லை. அதைக் கணக்கில் வைத்துத் தான் நான் சொல்லு கிறேன். இந்தத் துறையில் பாடுபட்டதினால்தான் நான் இதைக் குறிப் பிட்டுச் சொல்ல முடிகிறது. ஒருவர் முன்னுக்கு வந்தார் என்பதில் எனக்குச் சந்தோஷம். இன்னும் பலர் அப்படி வரவேண்டும் என்று தான் நான் சொல்லுகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மதிப்பிற்குரிய அங்கத்தினர் "வலையர் அல்லது வளையர்" என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அம்பலக் காரர் அல்லது மூப்பனார் என்று சொன்னால்தான் அவர்களே ஒப்புக் கொள்வார்கள்.

திரு. சா. கணேசன் : கனம் அமைச்சர் சொல்வதை நான் மரியாதை யோடு கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அவர்கள் சொல்கிற மூப்பனார்கள் வேறு. நான் குறிப்பிடுகிறவர்கள் இன்றும் செட்டிநாட்டு வலையர் என்று தான் மாடுகள் வாங்குவதற்கு போடும் நூற்றுக்கணக்கான விண்ணப்பங் களில் குறிப்பிடுகிறார்கள். எனது தொகுதியிலுள்ள சாக்கோட்டை, கல்லல் ஆகிய இரு பஞ்சாயத்து யூனியன்கட்கும் அனுப்பிய பல விண்ணப்பங்களில் நான் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். (குறுக்கீடு) இந்த ஜாதியைக் குறிப்பிடும்பொழுது எந்தச் சொல்லை உபயோகிப்பது என்று நமக்கு ஒரு வரையறை ஏற்படவில்லை. வில்லியம் தர்ஸ்டன் அவர்கள் எழுதிய "காஸ்ட்ஸ் அண்டு டிரைப்ஸ் ஆப் சௌத் இந்தியா" என்ற புத்தகம் நான் வைத்திருக்கிறேன். அதிலிருந்து நான் எடுத்துக் காட்ட முடியும். இங்கே யுள்ள லைப்ரரியிலும் அந்தப் புத்தகம் இருக்கிறது. அவகாசம் கொடுத் தால் அதிலிருந்து நான் எடுத்துக் காட்டவும் முடியும். உதாரணமாக, இப்பொழுது வைசியரை எடுத்துக்கொண்டால், சில இடங்களிலே "செட்டியார்" என்று சொல்கிறார்கள். இன்னும் சில இடங்களிலே "ஷேட்" என்று சொல்கிறார்கள். இன்னும் சில இடங்களிலே "ஷெட்டி" என்று குறிப்பிடுகிறார்கள். இந்த மாதிரிதான் பல துறைகளிலும் இருக் கின்றன. அரசாங்கத்தைக் குறை கூறுவதற்காக நான் இப்பொழுது முன்வரவில்லை. அந்த மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேண்டிய வாய்ப்புகளையும், வசதிகளையும் நாம் செய்து கொடுத்து கட்டாயக் கல்வியை அங்கே நிர்ப்பந்தப் படுத்த வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று

ஆட்சியைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய தொழில் இப்போது என்னவாக இருக்கிறது என்றால், காட்டிலே முயல் போன்றவற்றை வேட்டையாடுகிறார்கள். மேலும் மீன் பிடிப்பது, விறகு வெட்டுவது உற்சவக் காலங்களில் சாமி எழுந்தருளும் வாகனங்களைத் தூக்குவது போன்ற வேலைகளைச் செய்து வருகிறார்கள். கிட்டத்தட்ட பத்தாயிரம் பேர்களுக்கு மேல் என்னுடைய ஊரைச் சுற்றியிருக்கிறார்கள். அவர்களில் யாரும் அநேகமாகப் படிக்கவில்லை. ஏதோ ஒருவரைக் கொண்டு வந்து ஒரு சின்னக் கோவிலிலே எக்ஸிகியூடிவ் ஆபீசராகப் போட்டார்கள். அந்த அன்பரையும் இப்பொழுது காணவில்லை. வஜ்ரம் முதலியன உற்பத்தி செய்யும் தொழில்களை இவர்களுக்கு ஸ்பெஷல் ஆகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குளம்பு அல்லது கொம்பு முதலியவற்றில் இருந்து செய்கிற உற்பத்தி பொருள் வஜ்ரம். அதை இவர்கள் திறமையாகச் செய்யக்கூடியவர்கள் என்று சொல்லலாம். ஆகவே அதற்கு வேண்டிய வாய்ப்புகளை சர்க்கார் அவர்களுக்குக் கொடுத்து இந்தத் தொழிலை அவர்கள் மேற்கொள்ளும்படிச் செய்யவேண்டும். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் மற்றவர்கள் இந்தத் துறையை சுவீகரித்துக்கொண்டு போவதற்கு முன்னால் இதை அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் சொல்லுகிறேன். அது உயர்ந்த தொழில் அல்லது இழிந்த தொழில் என்பதற்காக நான் சொல்லவில்லை. சர்க்கார் இதைப்பற்றி சிந்திக்க வேண்டும்.

இப்பொழுது மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குகிறார்கள். நான் பல காலேஜ்களிலே நிர்வாகத் துறையில் இருப்பதால் இதைச் சொல்லுகிறேன். நடைமுறையில் பார்க்கும் பொழுது மூன்றாவது டெர்மில்தான் இது கொடுக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலும் முதல் இரண்டு டெர்ம்களில் கடன்பட்டோ அல்லது கையிலிருந்தோ கொடுத்துவிட்டு அதன்பிறகுதான் கட்டியதை திருப்பிப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இந்த உபத்திரவத்தைத் தவிர்க்க எல்லாக் காலேஜ்களுக்கும் ஒரு உத்தரவு போடலாம். யாருக்கு ஸ்காலர்ஷிப்கள் கொடுக்க வேண்டுமோ அவர்களிடம் இருந்து பணம் வசூல் செய்யக்கூடாது என்று உத்தரவு போட்டால் இதிலேயுள்ள கஷ்டம் நீங்கும்.

இறுதியாக ஹரிஜனங்களுக்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்லுகிறவர்களிலே சிலர் குறைவாகச் செய்கிறார்கள், சிலர் செம்மையாகச் செய்கிறார்கள். அப்படி குறைவாகச் செய்கிறவர்களைக் கண்டுபிடித்து தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நம்முடைய கடமை. நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக பல கிராமங்களிலே ஹரிஜனங்களுக்காக உழைக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு சிலர் அவர்களை ஏமாற்றி வருகிறார்கள். ஒரு ஊரில் 400 பேர் இருந்தால் அவர்கள் எல்லோருக்கும் மாடுகள் வாங்கித் தருவதாகச் சொல்லி ஒவ்வொருவரிடமிருந்தும் 5 ரூபாய் வசூல் செய்கிறார்கள். மாடுகள் வாங்குவதற்கு ஒரு பிர்காவிலே கடன் கொடுப்பது 10 மாடுகளுக்குத்தான். ஆனால் ஊரிலே இருக்கிறவர்களிடம் இருந்தெல்லாம் மனுக்களை வாங்கி "போட்டுவைத்தால் என்ன, வந்தால் வருது, இல்லாவிட்டால் போகுது" என்று சொல்லி இம்மாதிரி பணம் வாங்குகிறார்கள். கடைசியாக சீட்டு குலுக்கிப் போட்டு நான்கு பேர்களுக்குத்தான் மாடுகள் கிடைக்கின்றன. இவ்வாறு 400 பேர் இழந்த பணத்திற்கு 4 ஜோடி மாடுகளே வாங்கிவிடலாம். இவற்றையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்வது பயன் உள்ளதாக இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குடியிருப்பதற்கு வசதியில்லாமல் ஹரிஜனமக்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே சர்க்கார் புறம்போக்கு நிலங்களையெல்லாம் உடனடியாக எடுத்து, மனைகளாகப் பிரித்து, அவரவர்களுக்கு என்று வரையறை செய்து அவரவர்களுக்குக் கொடுத்து விடுவது பயனுள்ளதாக இருக்கும். அப்படிக் கொடுக்கும்பொழுது வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய தளவாடங்களையும், உபகரணங்களையும் கொடுத்து, இன்னின்ன மாதிரி டைப் டிசைனில் கட்டவேண்டுமென்று சொல்லிவிட்டால், சிக்கனமாகவும், திறமையாகவும், செம்மையாகவும் அவர்கள் வீடுகளை கட்டிக்கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும். மரச் சாமான்கள், மண், செங்கல், சிமெண்ட், ஆகிய பொருள்

24th July 1962] [திரு. சா. கணேசன்]

களையும், கொத்தன், தச்சன், ஆகியவர்களின் கூலிகளையும் அவர்களுக்கு வாங்கிக் கொடுத்துவிடலாம். சுவர் வைப்பது, கூரை வேய்வது, ஓடுகள் போடுவது போன்ற வேலைகளை அவரவர்களே செய்யவேண்டுமென்று நிர்ணயிக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் சிக்கனமாக இருக்கும். இம்மாதிரி பொருள்களைக் கொடுத்துச் செய்தால் ஒருவனே அவர்களை ஏமாற்றும்படியான நிலைமை ஏற்படாது. ஏதாவது தப்பு ஏற்பட்டால், தானே தான் திருடுகிறன் என்ற முறையில் அது அமையும். ஆகவே ஹரிஜன மக்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்பட்டவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கிற வகையிலே, அதற்கான பண்டங்களையும், உப பண்டங்களையும், திறமைக் கூலியையும் சர்க்கார் கொடுக்கும் என்று நிர்ணயம் செய்துவிட்டால் இன்று ஆகிற செலவிலே $\frac{3}{4}$ பங்கு அளவிலே இந்தக் காரியத்தை முடித்துவிடலாம் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் சிறந்த பல ஆலோசனைகளைக் கூறியதற்காக முதலிலேயே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மான்யத்தின் மீது நடந்த விவாதத்தில் அதிகமான அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். அதிலிருந்து இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மான்யம் என்பது புலப்படும். கனம் அங்கத்தினர்கள் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர், திரு. நாராயணசாமி பிள்ளை, ஸ்ரீமான் சுப்பிரமணியம் போன்ற அன்பர்கள் பேசும்பொழுது, தீண்டாமையை ஒழிப்பதற்கு அதிக அக்கறையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், இன்னும் சில இடங்களிலே மனமாற்றம் ஏற்படவில்லை என்ற கருத்தையும் தெரிவித்தார்கள்.

மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் அவர்கள் பேசும்போதுகூட ஹரிஜன சமுதாயம் முன்னேற்றமடைவதற்கும், தீண்டாமை ஒழிவதற்கும் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். தீண்டாமையைப் போக்குவதற்காக குறிப்பாக " ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் " என்று சொல்வது போன்ற நிலையை அடைய அரசாங்கம் மக்களிடத்தில் இருக்கக்கூடிய உயர்வு தாழ்வு மனப்பான்மையைப் போக்குவதற்கு அதிகமாக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். போக்க முடியாது என்று நான் சொல்ல முன்வரவில்லை. தீண்டாமை என்ற வார்த்தையைக்கூட நான் உபயோகப்படுத்தப் போவதில்லை. ஹிந்து சமுதாயத்தில் தோன்றிய இந்தத் தீண்டாமையை போக்குவதற்கு, இந்த மாசைப் போக்குவதற்கு, பல பெரியோர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். நம்முடைய முதியோர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். பல பாடல்களில்கூட இதைப்பற்றி பாடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர்கூட இவ்விஷயத்தைப் பற்றி பல பெரியோர்கள் பாடியவற்றைப் பாடிக் காட்டினார். ஔவையார் கூட " ஜாதி இரண்டொழிய வேறில்லை...... " என்று பாடியிருக்கிறார். " பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான் " என்று வள்ளுவர் பாடியிருக்கிறார். இன்னும் ராமலிங்க சுவாமிகள் என்ன பாடியிருக்கிறார் என்றால்—

" சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே "

என்று பாடியிருக்கிறார். அதைப்போலவே அப்பர் எப்படிப் பாடியிருக்கிறார் என்றால் " ஓடும் உதரத்திலே ஓடுகின்ற கண்ணீரிலே, தேடிப் பார்த்தாலும் ஜாதிகள் தெரிவதில்லை " என்று பாடியிருக்கிறார். அந்தக் காலத்திலிருந்து இந்தத் தீண்டாமை ஒழிய வேண்டும் என்று பல பெரியோர்கள் பாடியிருந்தபோதிலும் நம் சமுதாயத்தில் பல்லாண்டுகளாகவே இந்தத் தீண்டாமை என்கின்ற மாசு இருந்துகொண்டே இருக்கிறது. இக்கொடுமை நூற்றுக்கு நூறு போகாவிட்டாலும்கூட, அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக மக்களிடத்தில் ஓரளவு மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டில் பெரிய மாற்றத்தை நாம் காண்கின்றோம். அதற்கு முக்கியமான காரணம் நமது மகாத்மா காந்திஜிதான். இந்தத் தீண்டாமையைப் போக்குவதற்கு அவர் தான் ஆரம்பத்தில் காரணமாக

இருந்தார். ஹிந்து சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள இந்த மாசைப் போக்கு வதற்கு அவர்தான் முதலில் முற்பட்டார். அதன் பிறகுதான் ஹிந்து சமுதாயத்தில் ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டது. ஒரு புதிய வேகம் ஏற்பட்டது. நல்ல முறையில் பெரிய மாற்றத்தைக் காண்கிறோம். அதன் காரணமாகத்தான் இன்றைக்கு கிட்டத்தட்ட நூற்றுக்கு நூறு மதிப்பை ஹரிஜனங்கள் பெற்று வருகிறார்கள். நூற்றுக்கு நூறு பயன் அடையா விட்டாலும் ஹரிஜன சமுதாயத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காணலாம் என்பதைச் சொன்னால் அது மிகையாகாது. கனம் அங்கத் தினர்களுக்கு, இதற்கு முன்னதாக ஹரிஜனங்கள் ஆலயங்களுக்குச் சென்று காணிக்கைகளைக்கூட போட முடியாத நிலை இருந்தது என்பது தெரியும். எந்த விதமான உரிமையையும் அவர்களால் அனுபவிக்க முடியாது. அதோடு மட்டுமல்லாமல், ஹரிஜனங்கள் செருப்புப் போட்டுக் கொண்டுகூட போகக்கூடாது. ரோடுகளில் குடைகளை பிடித்துக்கொண்டு போகக்கூடாது என்ற பழக்க வழக்கங்கள் நம் நாட்டில் இருந்தது. குறிப்பாக தமிழ் நாட்டில் சில கிராமங்களில் இவ்வழக்கம் இருந்தது நமக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கும் சில கிராமங்களில் இருக்கத் தான் இருக்கிறது. ஆனால், இருப்பது தெரியாமல் இருந்துகொண்டு வருகிறது என்பதைப் பார்க்கிறோம். இவ் வழக்கங்களைப் போக்குவதற்குத் தான் அரசாங்கம் சில திட்டங்களை வகுத்து, சட்டங்களை இயற்றி, அவைகளை அமுல் நடத்தி வருகிறார்கள். என்னால் இயன்ற உதவியையும் செய்யலாம் என்று எண்ணுகிறேன். கிராமங்களில் இவ் வழக்கங்கள் இருந்தபோதி லும், நகரங்களிலுள்ள ஹோட்டல்களில் ஹரிஜன் என்று கூடத் தெரியா மல் சேர்ந்து சாப்பிடுகிறார்கள். அருகில் இருப்பவர்கள் யார் என்றுகூடப் பார்க்க மாட்டார்கள். நகரங்களில் அந்த மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. பெரிய ஹோட்டல்களில் எந்த விதமான வித்தியாசமும் கிடையாது. சில கிராமங்களில் மட்டும் இருக்கிறது. அதைப்போலவே உத்தியோகங்களில் கூட இந்த வித்தியாசங்கள் பார்ப்பது இல்லை. இந்த அளவிற்கு இப் பொழுது மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மாற்றம் கிராமங் களில் ஏற்படவில்லை.

(கனம் சபாநாயகர் தலைமை.)

குறிப்பாக, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தாழ்த்தப்பட்டோர் லீகைப் பற்றிக் குறிப்பிட்டு அது அவசியம் இல்லை என்றும், அது என்ன வேலை செய்கிறது என்றும் குறிப்பிட்டார். அது எதற்காக ஏற்பட்டது என்ப தைப் பலர் அறிவார்கள். தாழ்த்தப்பட்டோர் லீக் என்ற ஸ்தாபனம் இப்பொழுது ஏற்பட்டது அல்ல. நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்ட ஹரிஜனத் தலைவர்கள் தங்களுடைய உரிமையைப் பெற வேண்டும் என்பதற்காக ஒன்றுகூடி ஒரு முடிவு எடுத்து இந்த தாழ்த்தப்பட்ட லீக் என்று ஒரு ஸ்தாபனத்தை அமைத்தார்கள். நாட்டி லுள்ள தீண்டாமையைப் போக்குவதற்கு அகில இந்திய ரீதியிலும், மாகாண ரீதியிலும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த லீக்கை ஆரம்பித்தார்கள். இந்த ஸ்தாபனத்தை இப்பொழுது தாலுகா தோறும் நியமித்திருக்கிறார்கள். இது ஜாதி ஹிந்துக்களுடைய ஸ்தாபனம் அல்ல என்பதை நன்றாக வலியுறுத்த விரும்புகிறேன். அது பல முக்கியமான வேலைகளைச் செய்து வருகிறது.

ஹோட்டல்களில் ஹரிஜனங்களை விடாமல் மறுக்கிறார்களா அல்லது அவர்களைக் கொடுமைப்படுத்துகிறார்களா என்பதையெல்லாம் அது கவ னித்து வருகிறது. இதர இடங்களிலும் ஹரிஜனங்களைப் பாகுபாடு படுத்து கிறார்களா என்று பார்த்து வருகிறது. அப்படி ஏதாவது நடக்கிறது என்று தெரிய வந்தால் உடனே அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். அரசினரும் ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு துணை சேவக்கை நியமித்திருக்கிறார்கள். அவர்களில் ஒன்றிரண்டு பேர்கள் சரி யாக வேலை செய்யாமல் இருக்கலாம். ஆனால் பலர் நல்ல வேலை தீவிர மாகச் செய்து வருகிறார்கள். மற்றும் இதை எப்படி மாற்றி அமைக்கலாம் என்றும் யோசித்து வருகிறார்கள். டிபுடி சேவக்குகள் செய்யக்கூடிய வேலை யானது உண்மையிலேயே ஹரிஜனங்களுக்கு சௌகர்யமாக இருக்கிறது. அவர்களுடைய கண்காணிப்பில் ஏதாவது குறைகள் தென்பட்டால் அதை

24th July 1962] [திரு. பூ. கக்கன்]

அவர்கள் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். அதன் மீது அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். பஞ்சாயத்து யூனியன் கீழ், ப்ளாக் டெவலப்மென்ட் ஆபீசரின் கீழ் இவர்கள் வேலை செய்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பாக மதிப்பிற்குரிய சுதந்தரா கட்சித் தலைவர் ஒன்றைக் குறிப்பிட்டார். அவர் பேசும்போது நல்ல கருத்துக்களைச் சொன்னார். அவைகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகத்தான் இருக்கின்றன. ஆனால் ஹரிஜனங்களிடையே பாகுபாடுகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். அதை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார். ஜாதியை ஒழிக்க வேண்டும் என்று சொல்லும்போது ஹரிஜனங்களிலேயே சிலர் வித்தியாசம் பார்க்கிறார்களே என்றும் குறிப்பிட்டார். அவர் அவ்வாறு குறிப்பிட்டது சரியல்ல. அப்படிச் சொல்வது நல்லது அல்ல. மேலே இருக்கிறவர்கள் அவர்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டும். கீழ் ஜாதியினர் தங்களுக்குள்ளேயே வித்தியாசம் காட்டுகிறார்களே என்று மேல் ஜாதிக்காரர்கள் "நாங்களும் ஏன் அப்படி ஜாதி வித்தியாசம் பாராட்டக்கூடாது" என்று கேட்பது சரியல்ல. மேலே இருக்கக்கூடியவர்கள் கீழே இருப்பவர்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டும், மேலே இருப்பவர்களைப் பார்த்து அவர்களுக்கும் மாறுபடவேண்டும். கீழே இருப்பவர்களிடையே பாகுபாடு இருக்கிறதே என்று நினைத்தால் அது நல்லது அல்ல.

திரு சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் சொன்னதை அவர்தான் நன்றாகப் புரிந்து கொள்ளவில்லையோ அல்லது நான் தான் அவருக்குப் புரியும்படியாக விளக்கமாகச் சொல்லவில்லையோ, இரண்டும் தெரியவில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்னால் எங்கள் ஊரில் இதைப் போக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டோம் என்று தான் சொன்னேன். அப்படி முயற்சி எடுத்துக்கொண்டும் அந்த இடங்களில் அப்படியேதான் இருக்கிறது என்றும் சொன்னேன்.

கனம் திரு. பூ. கக்கன்: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய சுதந்திராக் கட்சித் தலைவர் அன்றைக்குக் காங்கிரசில் இருந்தார். நாங்கள் இருவரும் இணை பிரியாத நிலைமையில் வேலை செய்திருக்கிறோம்.

திரு. சா. கணேசன்: அந்த இடத்தில் இன்றும் வீடுகள் கட்டிக் கொடுக்க முடியாதபடி தடுக்கப்பட்டிருக்கிறது. இது சாதி வேறுபாட்டினால் எழுந்திருக்கும் சிக்கல். இப்படி சாதி வேறுபாட்டினால் ஒரு காரியம் செய்வது தடைப்படுமானால் அப்படிப்பட்ட இடங்களில் அரசாங்கத்தார் சட்டத்தைப் பிரயோகித்தாலன்றி பயன் இராது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டினேனே தவிர வேறு சாதி பாகுபாடுபற்றிக் கனவிலும் நான் கருதவில்லை.

கனம் திரு. பூ. கக்கன்: ரொம்ப சந்தோஷம். அதைச் சொல்லாமலே இருந்திருந்தால் நன்றாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம். மற்றும் பல அங்கத்தினர்கள் நில ஆர்ஜிதத்தைப்பற்றி வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். நான் சபையிலே வைத்துள்ள குறிப்பைப் பார்த்தாலே தெரியும், எவ்வளவு தூரம் மனைக்கட்டு ஆர்ஜிதம் செய்வதிலே அக்கறை காட்டி வந்திருக்கிறோம் என்று. ஸ்ரீமான் திட்டை பேசும்போது (திரு. மீ. கல்யாணசுந்தரம் :—சுப்பரமணியமா ?, (ஓர் அங்கத்தினர் :—அரியக்குடி என்றுசொல்லவில்லையா ?—சிரிப்பு). அவர் தாலூக்கா தோறும் தாசில்தார் இதற்கென்று ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார். மாடு கொடுக்க இப்போது கூட இரண்டு தாலூக்கா, மூன்று தாலூக்காவை ஒன்றாக எடுத்துக்கொண்டு கொடுத்து வருகிறோம். அதுபோலவே நில ஆர்ஜித விஷயத்திலும் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். குறிப்பாக 28 தாசில்தார்கள், 51 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், 9 சர்வேயர்கள் இப்படி அதிகமாக சிப்பந்திகளை நியமித்திருக்கிறோம். அதிகாரிகளை நிறையப் போட்டுத்தான் வேலை செய்கிறோம். ஒவ்வொரு டிவிஷனுக்கும் தனியாக அதிகாரிகளைப் போட்டு வேலை செய்கிறோம். வருங்காலத்தில் இப்படி எல்லா டிவிஷன்களுக்கும் நியமிக்க ஏற்பாடு செய்யலாமென்று நினைக்கிறேன்.

[திரு. பூ. கக்கன்] [24th July 1962

பல அங்கத்தினர்கள் ஸ்காலர்ஷிப் பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக சுதந்திராக் கட்சித் தலைவர் அதைப்பற்றிக் குறிப்பிடும்போது, "கடைசி டெர்மில் அந்த ஸ்காலர்ஷிப் தொகை வருகிறது" என்று சொன்னார். இப்போது அதிகமாக உபகாரச் சம்பளம் கோரி பின்தங்கிய மக்கள், ஹரிஜன மக்கள் இவர்களிடம் இருந்து மனுக்கள் வருகின்றன. குறிப்பிட்டதற்கு அதிகமாக வரும்போது நிதி இலாகாவுக்குச் சென்று சாங்ஷன் வாங்கி பணத்தைக் கொடுத்து வருகிறோம். இருந்தாலும் எண்ணிக்கை ஜாஸ்தியாக இருப்பதனால் இப்போது பின்தங்கிய மக்களில்
1–30 p.m. 50% க்கு மேல் மார்க் வாங்கியிருப்பவர்களுக்குக் கொடுக்கிறோம். மோஸ்ட் பாக்வேர்ட் கம்யூனிடியாக இருந்தால் 40% க்கு மேல் மார்க் வாங்கியிருந்தால் கொடுக்கிறோம். முன்பெல்லாம் ஹரிஜன் வெல்பேர் டைரக்டர்தான் கொடுத்து வந்தார். இப்போது அங்கேயுள்ள ஜில்லா அதிகாரிகளே கொடுத்து வருகிறார்கள். மத்திய சர்க்கார் உதவித் தொகையை மட்டும் டைரக்டர் கொடுத்து வருகிறார். இதில் காலதாமதம் இல்லை. பையன்கள் குறைவாக மார்க் வாங்கி அப்ளை செய்திருந்தால், அல்லது பாரத்தை சரியாகப் பூர்த்தி செய்யாமல் அனுப்பியிருந்தால் தாமதம் ஏற்படலாமே தவிர வேறு வகையில் தாமதம் ஏற்படாது. எவ்வளவு தூரம் துரிதமாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் கொடுத்து வருகிறோம்.

பஞ்சாயத்து ஆக்ட் வந்த பிறகு பல குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஏழை ஜனங்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்றார்கள். இதைப் பற்றியும் மேலும் விசாரணை செய்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஏழைகளுக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்றுதான் பஞ்சாயத்து சட்டத்தைச் செய்தோம். ஒன்றிரண்டு இடங்களில் சாதித் துவேஷம் காரணமாக பிரிசிடெண்டுகள் இம்மாதிரி நடந்தார்கள் என்றால் அதையும் பரிசீலனை செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது. எற்கெனவே இதுபற்றிக்கூட கலெக்டர்கள் மகாநாட்டில் விவாதித்து இருக்கிறோம். ஏழைகளுக்குக் கஷ்டம் இல்லாமல் எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படி அரசாங்கம் செய்யும். நகரங்களில் ஒதுக்குப் புறமாக இருக்கக் கூடிய இடங்களை ஹரிஜனங்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். இவர்களை அரசாங்கமே பிரித்து வைக்க வேண்டும் என்று செய்வது போல இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். அது அப்படி அல்ல. எங்கெங்கே நிலம் கிடைக்கிறதோ அங்கங்கே கொடுக்கப்படுகிறது. கிராமத்தை ஒட்டி, நகரத்தை ஒட்டி நிலம் இருந்தாலும் கொடுக்கிறோம், அப்படி இப்படி என்று சொல்லிவிடலாம்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்".

என்பது உங்களுக்கே தெரியும். வருவாய்க்குத் தக்கபடிதான் நாம் செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. வரி போட்டால் கூட இந்த வரி போட்டார்கள், அந்த வரி போட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அரசாங்கம் இந்த ஒரு இலாகா வேலைகளை மட்டும் செய்யவில்லை. பல இலாக்காக்களைக் கவனித்துக் கொள்ளவேண்டியதாக இருக்கிறது. ஆகவே இருக்கக்கூடிய நிதி வசதியைக் கொண்டுதான் பல காரியங்களைச் செய்து வருகிறோம்.

கனம் அங்கத்தினர் திரு. எ. கே. சுப்பையா அவர்கள் பேசும்போது உழுவதற்கு ஹரிஜனங்களுக்குக் குறைவாக நிலம் கொடுத்திருப்பதாகவும், மற்றவர்களுக்கு அதிகம் கொடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். நிலம் அற்றவர்களுக்கு நிலம் வழங்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. மற்ற சாதிக்காரர்கள் முதலில் மனுக்கள் போட்டிருக்கலாம், கிடைத்திருக்கலாம். இவர்கள் மனுப்போட்ட நிலத்திற்கு போட்டியில்லாதபடி இவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். மேலும் சாதி இந்துக்கள் அதிகம் தான். இவ்விஷயத்தில் அதிகாரிகள் பாரபட்சமாக நடந்து கொள்ளவில்லை. அவ்வாறு நடந்துகொள்ள அரசாங்கமும் அனுமதிக்காது.

24th July 1962] [திரு. பூ .கக்கன்]

கனம் அங்கத்தினர் திரு. வீரபாகு அவர்கள் பேசும்போது, "ஹரிஜனங்களில் எம். ஏ. படிக்கிறவர்களுக்கு ஸ்காலர்ஷிப் அதிகமான பேர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும், அதிகப்படியாக உதவி செய்ய வேண்டும்" என்று சொன்னார்கள். எம்.ஏ. வகுப்பில் படிக்கும் நாற்பது ஹரிஜன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. ஆனால், 25 ஹரிஜன மாணவர்கள் கூட சில சமயம் வருவதில்லை. அதிகமான மாணவர்கள் வந்தாலும் கொஞ்சம் தாங்கிக் கொள்ளலாம். நாற்பது ஹரிஜன மாணவர்களுக்கு எம்.ஏ. வகுப்பில் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது, இப்பொழுதிருக்கிற நிலைமைக்குத் தக்கபடி. இன்னும் மேற்கொண்டு செய்யவேண்டுமானால், பரிசீலனை செய்து பின்னர் செய்துகொள்ளலாம். கனம் அங்கத்தினர் அவர்கள், "ரொம்பப் பேர்கள் எம்.ஏ. படிக்க முன்வருகிறார்கள்" என்று சொன்னார்கள். நிதி நிலைமைக்குத் தக்கபடி எவ்வளவு தூரம் அப்படிப்பட்டவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்க முடியுமோ அதைச் செய்யலாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : I think the House has no objection to sit till the Hon. Minister finishes his speech and the Demand is disposed of.

கனம் திரு. பூ. கக்கன் : வீடு கட்டும் திட்டத்தைப் பற்றியும் கனம் அங்கத்தினர் திரு. வீரபாகு அவர்கள் குறிப்பிட்டார்கள். வீடு கட்டும் திட்டமே இல்லை என்று நான் சொல்லவில்லை. அறிக்கையிலேகூட அப்படிச் சொல்ல வில்லை. மத்திய சர்க்கார் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் சில வேலைகளை அவர்கள் பார்த்துக் கொள்கிறார்கள். நகர சுத்தித் தொழிலாளர்களுக்காக அவர்கள் 'கிராண்ட்-இன்-எய்ட்'டில் நிதி ஒதுக்குகிறார்கள். இந்த வகையில் நாற்பது லட்சம் ரூபாய் மத்திய சர்க்கார் நமது ராஜ்யத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதைக் கொண்டு இன்னும் நல்ல முறையில் பலருக்கும் நன்மை கிடைக்கும்படியாகச் செய்யலாமா என்று பரிசீலனை செய்து பார்த்து, மனைக்கட்டு வழங்குவதில் அதிகமான அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கிராமப் புறங்களில் கூட்டுறவு சொஸைட்டி மூலமாக வீடு கட்டிக் கொடுத்தால் நல்லது என்ற அபிப்பிராயமும் சொல்லப்பட்டது. கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தில், ஹரிஜனங்கள் முன் பணமாகக் கொடுக்க வேண்டிய பங்குத் தொகை முழுவதையுமே அரசாங்கம் கடனாகக் கொடுத்துவிட வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. ஒரு பகுதி கடனாகவும், ஒரு பகுதி பயன் அடைவோரும் கொடுக்க வேண்டும் என்று இருக்கிற பாகுபாடு இல்லாமல், பூராவையும் அரசாங்கம் கடனாகக் கொடுக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கொடுப்பதாயிருந்தால் தொகை ஜாஸ்தி வேண்டியிருக்கும் . 250 ரூபாயில் 125 ரூபாயை அரசாங்கம் கடனாகக் கொடுத்தால், 2,500 ரூபாயில், கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் மூலம் ஹரிஜன மக்கள் பயன் அடையலாம். இருந்தாலும், அவ்வப்போது பரிசீலனை செய்யப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள், "மாணவர்களுக்கு அட் ஹாக் அமௌண்ட் கொடுப்பதில்லை, அதனால் அவர்கள் சிரமப்படுகிறார்கள்" என்று சொன்னார்கள். அட் ஹாக் அமௌண்ட் கொடுத்து வருகிறோம். எல்லா பிரின்சிபால்களுக்கும் சொல்லி யிருக்கிறோம். "ஹரிஜன மாணவருக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும், ஹாஸ்டலுக்குகாக ஃபீஸ் கேட்கக் கூடாது" என்று சொல்லி யிருக்கிறோம். இருந்தாலும், ஒரு சில இடங்களில், தனிப்பட்ட மானேஜ்மெண்டார் நடத்தும் காலேஜில் சற்று இதை உணராமல் இருக்கிறார்கள். "அம்மாதிரி இருந்தால், அங்கீகாரத்தைக்கூட ரத்து செய்வோம்" என்று கல்வி இலாகா டைரக்டர் மூலமாகச் சொல்லி யிருக்கிறோம். இதெல்லாம் ரொம்பவும் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. மாணவர்களை வெளியேற்றினால், கல்வி இலாகா டைரக்டரிடம் சொல்லி, அட் ஹாக் அமௌண்ட் கொடுக்கும்படி ஏற்பாடு செய்து, மாணவர்களைப் படிக்கவைக்க ஏற்பாடு செய்கிறோம். அட் ஹாக் அமௌண்ட் கொடுத்து உதவி செய்து வருகிறோம் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும், ஹாஸ்டலில்

படிக்கும் மாணவர்கள் எங்காவது வெளியேற்றப்படுவார்களானால், முன் பணம் கொடுக்க வழி செய்யப்படவில்லை என்றால், அது பற்றி கவனிக்கப் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. கே. பி. பழனிசாமி அவர்கள் பேசும்போது, "கல்விச் சலுகைக்கு வருஷ வருமானம் ரூபாய் 1,500 என்று வரையறை வைக்கப்பட்டிருக்கிறது, அதை 2,000 ரூபாய் வரையிலும் உயர்த்தினால் நல்லது" என்று சொன்னார்கள். மற்ற கனம் அங்கத்தினர்களில் சிலர் அதை 3,000 ரூபாய் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று கேட்டார்கள். "சாதாரண தொழிலாளி வாங்கும் சம்பளம் கூட சற்று கூடுதலாக இருக்கிறது, 1,500 ரூபாய் வருஷத்தில் எப்படியும் வந்து விடுகிறது, ரூபாய் 1,500-க்கு மேல் வருமானம் வருகிறவர்களுக்கும் சலுகை விஸ்தரிக்கப்பட வேண்டும்" என்று சொல்லப்பட்டது. இது பற்றி அரசாங்கம் ஏற்கெனவே பரிசீலனை செய்துதான், இப்பொழுது இருக்கும் நிலைமையில் ரூபாய் 1,500 என்ற ஒரு வரையறையை வைத்திருக்கிறது. அதைக் கூடுதலாக்கி, 2,000, 3,000 ரூபாய் என்ற அளவுக்குப் போக முடியாது. இந்த பட்ஜெட்டிலே நாம் ஒன்றும் மாறுதல் செய்வதற்கில்லை. இருந்தாலும், கனம் நிதி அமைச்சர் அவர்களும் இங்கு இப்பொழுது இருப்பதால், அவரையும் இது சம்பந்தமாகக் கேட்டு, ஏதாவது வழிவகை செய்ய முடியுமா என்பதைப்பற்றி பரிசீலிக்கலாம். (திரு. மீ. கலியாண சுந்தரம்: கனம் நிதி அமைச்சர் அவர்களே ப்ராமிஸ் செய்திருக்கிறார். ஹரிஜன நல அமைச்சரும் வலியுறுத்திச் சொல்ல வேண்டும்.) அதையும் ஓரளவு கவனித்து, ஏதாவது வழி வகை செய்யலாமா என்பது பற்றி பின்னால் பரிசீலனை செய்யப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹரிஜன சேவா சங்கம் நடத்தும் ஹாஸ்டல் பற்றிக் குறிப்பிடப்பட்டது. ஹாஸ்டல்களில் ஒன்றிரண்டு சரியாக நடக்காவிட்டால், அதை எடுத்துக் கொள்கிறோமே தவிர, பூராவும் எடுத்துக் கொள்வதில்லை. எந்தவிதமான குறையும் இல்லாமல், நன்றாக நடக்கக்கூடிய ஹாஸ்டல்களை எடுப்பதிலே அரசாங்கம் அதிக அவசரம் காட்டாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஹாஸ்டல்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் கொள்கை இருந்தாலும், அவசரப்பட்டு எதையும் எடுக்கமாட்டோம். கூடுமானவரை நன்றாக நடத்துகிறவர்களுக்கு ஆதரவு கொடுக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் அவர்கள், "கள்ளர் சமுதாயத்திற்கு இருப்பதுபோல், குறவர் சமுதாயத்திற்கும் தனி டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி உதவி செய்ய வேண்டும்" என்று சொன்னார்கள். குற்ற பரம்பரைச் சட்டத்திற்கு உட்பட்டிருந்ததால் கள்ளர் சமுதாயத்திற்கு அப்படிப்பட்ட முறை இருந்தது. ஆனால், குறவர் சமுதாயத்திற்கும் வேண்டிய உதவியை அரசாங்கம் செய்ய முன் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு சங்கரன் அவர்கள், மூலக்குரிச்சியில் மீனைக் கட்டுக்கு ஏற்பாடு செய்வது பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பற்றி அங்குள்ள ரெவினியூ டிவிஷனல் ஆபீஸரைக் கவனிக்கச் சொல்லியிருக்கிறேன் அவர் அதைக் கவனிப்பார் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டு முக்கியமான கருத்துக்களை இங்கே பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். "சர்வீஸ் கமிஷனில் ஹரிஜனங்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில், ஒரு ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவரை மெம்பராகப் போட வேண்டும் என்று பல ஆண்டுகளாகச் சொல்லிவந்திருந்தாலும், அந்தக் கோரிக்கை கவனிக்கப்படவில்லை" என்று ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த பல கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே முதல் அமைச்சர் அவர்களும் அது பற்றிப் பேசியிருக்கிறார். நானும் அவரிடத்தில் கேட்டிருக்கிறேன். பின்னால் அது பற்றி அவர் ஒரு முடிவுக்கு வருவார் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய யூனியன் சர்வீஸ் கமிஷனில் மதிப்பிற்குரிய திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் மெம்பராக இருந்திருக்கிறார். ஹரிஜன அன்பர் ஒருவரைக் கட்டாயமாக

24th July 1962] [திரு. பூ. கக்கன்]

சர்வீஸ் கமிஷன் மெம்பராகப் போடவேண்டுமென்ற கொள்கை இல்லை என்றாலும், இருக்கிற நிலைமையைப் பார்த்துப் போட்டிருக்கிறார்கள். ஆனால், போடக் கூடாது என்பதும் இல்லை. பின்னால், அது பற்றிப் பரிசீலனை செய்து, நல்லதொரு முடிவுக்கு வருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

"ஜில்லாக் கலெக்டருடைய வேலையை, ஹரிஜன நல இலாகாவைப் பொறுத்த வேலையை, மேற்பார்வையிடுவதற்கு இப்போழுது இருக்கிற ஹரிஜன நல இலாகா டைரக்டருக்கு அதிகாரம் கிடையாது, ஆகையால், ரெவினியூ போர்டு மெம்பர் ஒருவர் அதைக் கவனிக்க வேண்டும்", என்று கனம் அங்கத்தினர் திரு. திட்டை சுப்பிரமணியம் அவர்கள் ஒரு ஆலோசனை கூறினார்கள். அது மீண்டும் பரிசீலனை செய்யப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பொழுதுதான் வேலை சற்று துரிதமாக நடக்க முடியும். அது பற்றி பரிசீலனை செய்யப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் பேசுகையில், "கிழக்கு இராமனாதபுரம் பகுதியில் ஹாஸ்டல் வைக்கவேண்டும்" என்று சொன்னார்கள். தேவகோட்டையில் ஹரிஜன மாணவர்களுக்கென்று ஒரு ஹாஸ்டல் இருந்துவருகிறது. உயர்நிலைப் பள்ளிகள் எங்கெங்கு இருக்கின்றனவோ, அங்கெல்லாம் ஹாஸ்டல்கள் வைக்க அதிக அக்கறை எடுத்துக்கொள்வேன் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். 21 புதிய ஹாஸ்டல்கள் நிறுவியிருக்கிறோம். இந்த வருஷத்தைப் பொறுத்த வரையில், இனிமேல் புதிதாக ஹாஸ்டல் நிறுவ முடியாது. அடுத்த வருஷத்தில் பார்த்து, மேலும் ஹாஸ்டல்களை அரசாங்கத்தின் மூலமாக நிறுவத்தக்க ஏற்பாடு செய்யப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. சின்னையன் அவர்கள் பேசும்போது, இந்த அரசாங்கம் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காகச் செய்த வேலைகளைப் பாராட்டிப் பேசினார்கள். அதற்காக என்னுடைய நன்றி. 'அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் கீழான நிலையில் இருக்கிறார்கள்; அவர்களுக்கு விசேஷ சலுகை காட்ட வேண்டும்' என்றும் சொன்னார்கள். அவர்களுக்கு வீடு கொடுப்பதிலும், கருவிகள் கொடுப்பதிலும், ஹாஸ்டல்களில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதிலும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. எல்லா சமூகத்தைச் சேர்ந்தவர்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்ற முறையில் நிலம் இல்லாத ஏழைகளுக்கெல்லாம் நிலத்தைப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று கலெக்டர்களுக்கு ஏற்கனவே குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

டெபுடி சேவக்குகள் நல்ல முறையில் வேலை செய்யவில்லை என்று சொன்னார்கள். இதைப் பற்றி மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லும்போது நான் பதில் சொன்னேன். இரண்டொருவர் அப்படி மோசமாக நடந்துகொண்டிருக்கலாம். அப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு வேலை செய்ய முடியாது. இதைச் சீரிய முறையில் திருத்தி அமைப்பதற்கான வழி வகைகளைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய அழகர்சாமி அவர்கள் பேசும்போது, நிலங்கள் 'ஆர்ஜிதம் செய்யப்பட்டும் கூட, பிரித்துக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன' என்று சொன்னார்கள். அந்த மாதிரி இருந்தால், கலெக்டர்களுக்கு உத்தரவு அனுப்பி உடனடியாக அந்த நிலங்களைப் பிரித்துக் கொடுத்து ஏழைகளுக்கு ஒத்தாசை உதவி செய்ய அரசாங்கம் முன்வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலையில் இருக்கும் ஹாஸ்டல்களில் தங்கியிருக்கும் மாணவர்களுக்குப் 17 ரூபாயும், கீழே இருக்கும் ஹாஸ்டல்களில் இருக்கும் மாணவர்களுக்குப் 15 ரூபாயும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த வருஷத்திலிருந்து மேலேமேல்

இருப்பவர்களுக்கும், கீழே இருப்பவர்களுக்கும் ஒரு ரூபாய் வீதம் உயர்த்தப் பட்டிருக்கிறது. அந்தத் தொகையை 20 ரூபாயாக்க நிதி வசதி இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் திரு. தங்கவேலு அவர்கள் பேசும்போது, '3 செண்ட் நஞ்சை நிலத்திற்குப் பதிலாக, 5 செண்ட் நஞ்சை நிலம் கொடுக்க வேண்டும்' என்று சொன்னார்கள். ஏற்கனவே இது பற்றிப் பரிசீலனை செய்த பிறகு தான் நஞ்சையாக இருந்தால் 3 செண்ட் என்றும், புஞ்சையாக இருந் தால் 5 செண்ட் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஆகவே, இப்போது இருக் கும் நிலையில் 5 செண்ட் நஞ்சை நிலம் கொடுப்பது முடியாத காரியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு முறை மாணவன் ஃபெயில் ஆகிவிட்டால் அவனை ஹாஸ்டலில் வைத்துக்கொள்ளக் கூடாது என்று ஜி.ஓ. அனுப்பப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த மாதிரி ஜி.ஓ. எதுவும் கிடையாது. ஹரிஜன நல இலாகா டைரக்டர் அவர்கள் கலெக்டர்களுக்கு 'இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' கொடுத்திருக்கிறார்கள். ஃபெயிலான மாணவர்களை ஹாஸ்டலில் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று உத்தரவு கிடையாது. ஒரு முறை ஃபெயிலான மாணவனை அந்த ஹாஸ்டலில் சேர்த்துக்கொண்டால் அவன் மிதமிஞ்சிய தனமாக இருந்து மறுபடியும் பாஸ் பண்ணாது போய்விடுவான் என்ற காரணத்தால், பொதுவாக ஃபெயிலான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டாமென்று இன்ஸ் ட்ரக்ஷன்ஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. ரொம்ப நல்ல மார்க் வாங்கக்கூடிய வர்கள்கூட சில சமயத்தில் துரதிருஷ்டவசமாக ஃபெயிலாவது உண்டு. அப்பேர்ப்பட்ட மாணவர்களுக்கு ஹாஸ்டலில் இடம் கொடுத்து ஒத்தாசை செய்ய வேண்டியதுதான். ஃபெயிலாகிப் போன மாணவர்கள் அதே ஹாஸ்டலில்தான் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்களே தவிர, அடுத்த ஹாஸ்டலில் இரண்டாவது முறையாகச் சேர்ந்துகொள்ளலாம். 'யானைக் கும் அடி சருக்கும்' என்பது போல் நன்றாகப் படிக்கக்கூடிய மாணவர்கள் ஃபெயிலாகிவிட்டால் அவர்கள் ஹாஸ்டலில் சேர்த்துக்கொள்ளப்படு வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹாஸ்டலில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் 'கன்வெர்ட்ட் கிறிஸ் டியன்ஸ்'-க்குச் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே, பல முறை நான் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். இந்த மாகாண சர்க்காரைப் பொறுத்தவரையில் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் எல்லாம் மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மக்க ளுக்கும் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த சமயத்தில் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. ஆனந்தன், திரு. அம்பிகாபதி, திரு. ஆறுமுகம் போன்றவர்கள் எல்லாம் பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் பரிசீலனை செய்து நல்ல கோரிக்கைகளுக்குச் சாதகமாக என்னென்ன செய்ய முடியுமோ அவற்றைச் செய்ய அரசாங்கம் முன்வரும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

கனம் திரு. குழந்தை கவுண்டர் அவர்கள் ஆதிவாசி மக்களுக்காக இந்த சபையில் பிரதிநிதித்துவம் வகிக்கிறவர்கள். அந்த ஆதிவாசிகள் வசிக்கக்கூடிய மலைப் பகுதிகளில் ரோடு போட்டுக் கொடுக்க வேண்டு மென்று சொன்னார்கள். அவருடைய கோரிக்கை நியாயமானதுதான். ஆதிவாசி மக்களுக்கு அரசாங்கம் பல நன்மைகளைச் செய்து வருகிறது. அந்த மலைப் பகுதிகளில் ரோடு போடும் பொறுப்பை பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட், ஹைவேஸ், பஞ்சாயத்து யூனியன் வைத்திருந்தாலும் அவர்கள் ரோடு போடுவதோடுகூட, ஆதிவாசி மக்கள் வசிக்கும் பகுதி களில் ரோடு போடுவதற்காக ஹரிஜன நல இலாகாவிலிருந்தும் 34,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். ஆகவே, இந்தக் கோரிக்கை சம்பந்தப்பட்டவரை எவ்வளவுதூரம் கவனம் செலுத்தி ஹரிஜன நல இலாகாவிலிருந்து பணம் செலவு செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செலவு செய்ய அரசாங்கம் முன் வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே பல நல்ல யோசனைகளைச் சொல்லிய அங்கத்தினர்களுக்கு நன்றி கூறுவதோடு, அந்தக் கருத்துக்களை எல்லாம் பரிசீலனை செய்து என்னென்ன கோரிக்கைகளை எற்றுக்கொள்ள முடியுமோ அவற்றையெல்லாம் எற்றுக்கொண்டு அதற்கான காரியங்களைச் செய்ய ஹரிஜன நல இலாகா முன்வரும் என்று கூறி, ஹரிஜன நல இலாகாவிலே நல்ல பணியாற்றிவருகிற டைரக்டர் அவர்களுக்கும், இதர அதிகாரிகளுக்கும், குறிப்பாக ஜில்லாவாரியாகப் பணியாற்றிக்கொண்டிருக்கும் கலெக்டர்களுக்கும் பாராட்டைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பய்யா : கனம் சபாநாயகர் அவர்களே. அமைச்சர் அவர்கள் இந்த ஹரிஜன முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்வதிலே இருக்கும் தடங்கல்களையெல்லாம் பரிசீலனை செய்வதாக வாக்குறுதி அளித்திருப்பதால், என்னுடைய வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்.

The cut motion was, by leave, withdrawn.

Mr. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 3,56,39,200 under Demand XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes.'

The Demand was put and carried and the Grant was made.

Mr. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. **1-48 p.m.**

The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Stautory Rules and Orders.

* 149. *Notification issued with G.O. Ms. No.*1279, *Local Administration, dated* 1st *June* 1962 *confirming the draft rules for the election of Chairman of the Central Committee, Circle Committees, the Corporation Accounts Committee and Licence Appeals Committee, the same having been previously published as required by section* 348 *(a) of the Madras City Municipal Corporation Act*, 1919. [*Laid on the Table of the House under section* 348 *(d) of the Madras City Municipal Corporation Act*, 1919 (*Madras Act IV of* 1919).]

* 150. *Notification issued with G.O. Ms. No.* 1917, *Home dated*, 1*st June* 1962 *cancelling the Home Department Notification S.R.O. No. A.* 108 *of* 1960, *dated the* 16*th December* 1959, *published at page* 31 *of part I of the* Fort St. George Gazette, *dated the* 6*th January* 1960, *in so far as it relates to the exemption from payment of motor vehicles tax in respect of transport vehicles plying between Mysore and Kerala States.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]